


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜன. 05, 2012 | புரட்சி 10 | முழக்கம் 51 | விலை: ரூ.2.50


## பார்ப்பனர்களுக்கு – நோபல் பரிசு விஞ்ஞானி அறைகூவல்

# மூடநம்பிக்கைகளை மூட்டை கட்டுங்கள்



நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியான வெங்கட்ராமன் ராமகிருஷ்ணா, மூடநம்பிக்கைகளை கைவிட்டு, அறிவியலை நம்புவதற்கு முன்வருமாறு பார்ப்பனர்களிடம் அறைகூவல் விடுத்துள்ளார். மயிலாப்பூரில் பார்ப்பன நிறுவனமான பாரதிய வித்யாபவனில், மூடநம்பிக்கைக்கு எதிராக நோபல் பரிசு பெற்ற ஒரு பார்ப்பனர் துணிவுடன், தமது கருத்துகளை முன் வைத்தது, பார்ப்பனக் கோட்டையில் வீசப்பட்ட அறிவு வெடிகுண்டாகும். அந்த அரங்கில் படித்த வைதீகப் பார்ப்பனர்கள் பெருமளவில் குழுமியிருந்தனர்.

பார்ப்பன தொழிலதிபரும் ராஜகோபாலாச்சாரி தொடங்கிய ‘சுதந்திரா’ கட்சியில் முக்கிய தலைவர்களில் ஒருவராக திகழ்ந்தவருமான எஸ்.வி. நரசிம்மன் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவுக்கு நோபல் பரிசு பெற்ற பார்ப்பன விஞ்ஞானி தமிழகத்தைச் சார்ந்த வெங்கட்ராமன் ராம கிருஷ்ணனை சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தனர். பிரிட்டனிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் உயிரியல் தொழில் நுட்பத் துறையில் ஆய்வாளராக பணியாற்றும் அவர், வேதியலில் தமது கண்டுபிடிப்புக்காக 2009 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றவர்.

அறிவியலுக்கு எதிராக பழமை சிந்தனைகளை வைதீகக் கருத்துகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, அதற்கு ‘விஞ்ஞான முலாம்’ பூசுவது பார்ப்பனர்களுக்கு வழக்கமாகும். வேதங்களில் சொல்லப்பட்ட சரசுவதி நதி இன்னும் பூமிக்கடியில் ஓடிக் கொண்டிருக்கிறது என்றும் அமெரிக்காவின் செயற்கைக்கோள் இதை படம் பிடித்துள்ளது என்றும், ராமன், ராவணனை அழிக்க இலங்கை சென்ற போது அணில்களைக் கொண்டு கட்டியதே, சேதுக் கால்வாய் பாலம் என்றும், அதை அழித்துவிட்டு சேதுக் கால்வாய் இணைப்புத் திட்டத்தைக் கொண்டுவரக் கூடாது என்றும், வேத சமஸ்கிருத மந்திரங்களை ஓதும் போது உடலுக்கு புதிய ‘அதிர்வு’ சக்தி கிடைக்கிறது என்றும் முன்னோர்கள் கற்பித்த நம்பிக்கைகள் விஞ்ஞான பூர்வமானவை என்றும், பல்வேறு அறிவியலுக்கு எதிரான ஊறிப் போன பழமை சிந்தனைகளை நியாயப்படுத்திக் கொண்டு, விடாப்பிடியாகப் பரப்பி வருகிறார்கள். இவற்றை விஞ்ஞானபூர்வமாக மறுத்தால் மதத்தைப் புண்படுத்துவதாக கூக்குரலிடுவது ‘அவாளின்’ வாடிக்கை.

இந்த நிலையில் நோபல் பரிசு பெற்ற வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் என்ற பார்ப்பனரே இந்த மூடநம்பிக்கைகளுக்கு எதிராக அழுத்தமாக தனது கருத்துகளைப் பதிவு செய்திருப்பது பார்ப்பனர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி யிருக்கிறது. பெரியார் இயக்கத் தோழர்கள் பகுத்தறிவு அறிவியல் கருத்துகளைப் பேசினால் அதை கேலியும் கிண்டலும் செய்யும் பார்ப்பன ‘தினமலர்’ ஏடே இந்த விஞ்ஞானியின் உரையை தவிர்க்க இயலாமல், வெளியிட்டிருக்கிறது. ‘இந்து’,

4 ஆம் பக்கம்

# ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டத்தை ஆதரித்த ம.பொ.சி.!

- காங்கிரசுக்குள்ளேயே இருந்து கொண்டு 1946 ஆம் ஆண்டு ‘தமிழரசுக் கழகம்’ என்ற அமைப்பை உருவாக்கிய ம.பொ.சி., முதலில் ‘சுதந்திர தமிழரசு’ அமைப்பதே இதன் லட்சியம் என்று அறிவித்தார். பிறகு 1953 இல் வெளியார் சுரண்டல் இல்லாத தமிழகம் அமைந்தாலே போதும் என்று தனது கொள்கையை சுருக்கிக் கொண்டார்.

- மாநிலங்களை சுதந்திரமான உறுப்பு நாடுகளாக பிரிட்டிஷ் அரசே அங்கீகரித்ததால் தான், ‘சுதந்திரத் தமிழகம்’ என்ற கோரிக்கையை தாம் முன் வைத்ததாகவும், இந்தியாவிலிருந்து, தமிழகம் தனியே பிரிந்து நிற்கிறது என்று பொருளில் கூறவில்லை என்றும் பிறகு சுய விளக்கம் அளித்தார்.

- ‘இந்து’ பார்ப்பன நாளேட்டுக்கு ம.பொ.சி. எழுதிய ஒரு கடிதத்தில் , “என் ஆயுளில், இது வரை சுதந்திர தமிழ்க் குடியரசு தேவை என்று பேசியதே இல்லை; (தனிநாடு கேட்கும்) இந்த மாதிரியான பிளவு முயற்சிகளை எதிர்ப்பதற் காகவே தமிழரசு கழகம் தொடங்கப்பட்டது” என்று, தான் தனிநாடு கேட்பதாக ‘இந்து’ வெளியிட்ட செய்தியை மறுத்தார். இதை குத்தூசி குருசாமி கிண்டலடித்து ‘விடுதலை’யில் எழுதினார்.

- ம.பொ.சி. - ராஜகோபாலாச்சாரி பார்ப்பனரின் ‘கைத்தடி’யாக செயல்பட்டு காமராசரை கடுமையாக எதிர்த்தவர். காமராசர் எதிர்ப்புக்கு ராஜகோபாலாச்சாரி - ம.பொ.சி.யை பயன் படுத்திக் கொண்டார். இதை ராஜகோபாலாச் சாரியாரே மதுரை கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறினார்:

  “என் தலைமையை எதிர்ப்பவர்கள் என்னைவிட அதிகமாக (ம.பொ.சிவஞானம்) கிராமணி யாரையே தாக்குகிறார்கள். அதற்குக் காரணம் உண்டு. கிராமணியார் ‘வீர அபிமன்யு’ போன்றவர். என்னால் உடைக்க முடியாத எதிரிகளின் வியூ கத்தை உடைத்து அவர் என்னை உள்ளே அழைத் துச் செல்கிறார்” - என்று பேசினார். (ஆதாரம்: ம.பொ.சி. எழுதிய ‘எனது போராட்டம்’ நூல்)

- பார்ப்பனியத்தையும் இந்திய தேசியத்தையும் தமிழினத்தின் முதன்மையான பகைவர்களாக முன் வைத்துப் பெரியார் போராடினார். ஆனால், ம.பொ.சி. முதலில் ‘தனியரசு’ பேசி, பிறகு இந்திய தேசியத்துக்கு உள்ளிட்ட தமிழ்த் தேசியம் என்ற நிலைக்கு வந்து, அதன் பிறகு இந்திய ஒற்றுமைக்கு பங்கம் வராத மாகாண சுயாட்சி’ என்று கூறி, பிறகு மொழி வழி தேசியத்தையும் கைவிட்டு பெரியார் கொள்கைக்கு நேர் எதிரான மதவழி தேசியத்தை தூக்கிப் பிடித்தார்.

- “தேசிய ஒருமைப்பாட்டைக் கருதியேனும் ‘இந்து’க்கள், குறிப்பாகத் தமிழகத்தார் இந்து மதத்தை உறுதியாகக் கடைப்பிடித்து வர வேண்டியிருக்கிறது” என்று பேசினார். (26.8.1984 - ‘சமஸ்கிருத தின’ப் பேச்சு) “இந்தியாவின் ஆதி மதமான இந்து மதம் தான் இந்திய ஒருமைப் பாட்டின் ஆணி வேராக இருந்து வருகிறது”. ‘தமிழ் மொழி எனது தாய்மொழி; ஆனால் இந்தியன் என்ற முறையிலே, இந்து என்ற வகையிலே சமஸ்கிருதம் எனது கலாச்சார மொழி’ என்கிறார். (ஆதாரம்: ம.பொ.சி. எழுதிய ‘தமிழும் சமஸ்கிருதமும்’ நூல்)

- திருமணங்களில் இனமானத்தோடு புரோகித மறுப்பு சுயமரியாதை திருமணங்களை பெரியார் அறிமுகப்படுத்தினார். ம.பொ.சி.யோ “சமஸ்கிருத மொழியைப் பிழையறப் பயின்று வைத்துப் புரோகித தொழில் புரிவோர் இருப்பார்களாயின், அந்தப் புரோகிதர்களைக் கொண்டு, தமிழர் தங்கள் வீட்டுத் திருமணங்களைச் செய்வதை ஏற்கலாம்” என்றார். (ஆதாரம்: மேற்குறிப்பிட்ட அதே நூல்)

- தனது மணி விழா உட்பட தமது இல்ல நிகழ்ச் சிகள் அனைத்தும் ‘வைதிகச் சடங்கு களுடனேயே’ நிகழ்ந்தது என்று கூறும் ம.பொ.சி., சுயமரியாதை திருமணங்களை வெறுத்தார். திருமண வீடுகளில் சொற்பொழிவு நிகழ்த்துவது தேவையற்றது என்றார்.

- அப்பன் குலத் தொழிலை - பிள்ளை செய்ய வேண்டும் என்று தொடக்கப் பள்ளிகளில், ஆச்சாரியார் அறிமுகப்படுத்திய குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து பெரியார், போர்க்கொடி உயர்த்தியபோது, அத் திட்டத்தை ஆதரித்து தமிழரசு கழக செயற்குழுவில் தீர்மானம் நிறை வேற்றினார், ம.பொ.சி. ராஜகோபாலாச்சாரியின் குலக் கல்வித் திட்டத்தை ஆதரித்து, நாடெங்கும், ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், மாநாடுகள் நடத்த முன் வந்தார். 1953 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் தேதி மாயவரத்தில் (மயிலாடுதுறை) குலக் கல்வி திட்டத்தை ஆதரித்துப் பேசியதற்காக ம.பொ.சி. தாக்கப்பட்டார்.

- நாடு முழுதும் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்தியவர் ம.பொ.சி. அதில் பேசிய விபூதி வீரமுத்து, அணுகுண்டு அய்யாவு போன்ற பேச்சாளர்கள் மிகவும் தரம் தாழ்ந்து பெரியாரையும், அவரது கொள்கைகளையும் ‘சாக்கடை’ மொழியில் - ம.பொ.சி. முன்பாகவே பேசி வந்தனர்.

- இரயில் நிலையங்களில் பெயர்ப் பலகையிலுள்ள இந்தி எழுத்துகளை தார்பூசி அழிக்கும் போராட்டத்தை பெரியார் நடத்தியபோது, பெரியார் இயக்கத்தினர் அடித்த தார் மீது, மண்ணெண்ணெய் பூசி, தாரை அழித்து, ‘இந்தி’ ஆதரவை வெளிப்படுத்தியவர் ம.பொ.சி.

ம.பொ.சி. - பெரியாரின் பார்ப்பனிய - இந்திய தேசிய எதிர்ப்பை மடை மாற்றிட வந்த பார்ப்பன ஆச்சரியாரின் கைத்தடி; ராஜகோபாலாச் சாரிக்காகவே தட்சிண பிரதேச எதிர்ப்பைக் கைவிட்டவர்; ‘திராவிட’ இயக்கங்களை எதிர்க்கக் கிளம்பிய இவர், பிறகு திராவிட கட்சிகளின் ஆட்சிகளிலேயே பதவிச் கங்களை அனுபவித்தவர்; தி.மு.க. ஆட்சியில் மேலவை துணைத் தலைவராகவும், அ.தி.மு.க. ஆட்சியில் மேலவைத் தலைவராகவும் பதவி பெற்றவர்.

(ஆதாரங்கள்: கவிஞர் கருணானந்தம் எழுதிய ‘தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு’; சுப. வீர பாண்டியன் எழுதிய ‘இடதுசாரி தமிழ் தேசியம்’)

**(பெரியார் உரை – உள்ளே)**

## ‘தட்சிணப் பிரதேச’ திட்டத்தை எதிர்த்து 1956 இல் பெரியார் முழக்கம்

# தனித் தமிழ்நாடு பெறுவதே – நமது ஒரே இலக்காக வேண்டும்!

*தேவி குளம், பீர்மேடு பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று போராடிய ஒரே தலைவர் ம.பொ.சிவஞானம் (ம.பொ.சி.) என்றும், பெரியார், அதற்கு ஆதரவு தரவில்லை என்றும், சிலர் பேசவும், எழுதவும் புறப்பட்டுள்ளார்கள். ‘திராவிட’ கட்சிகள், மலையாளிகள், கன்னடர்கள், தெலுங்கர்களோடு சமரசம் செய்து கொண்டு தமிழர்களுக்கு துரோகம் செய்துவிட்டதாகவும் பேசி வருகிறார்கள். இந்த நிலையில் தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை (இப்போது கேரளாவில் அடங்கியுள்ள பகுதிகள்) தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்ற போராட்டத்தில் ம.பொ.சிக்கும் தனக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகளை விரிவாக விளக்கிப் பெரியார் 29.1.1956 ஆம் ஆண்டு வேலூரில் நிகழ்த்திய சொற்பொழிவை இங்கு வெளியிடுகிறோம். பெரியாரின் இந்த பேச்சு, பல உண்மைகளை வெளிச்சப்படுத்துகிறது.*

*1953 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம், மொழியடிப்படையில் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டிலும் அப்படி ஒரு கோரிக்கை வந்துவிடும் என அஞ்சிய இந்திய தேசிய பார்ப்பனர்கள், தமிழ்நாடு, கன்னடம், கேரளா என்ற மூன்று மாநிலங்களையும் ஒருங்கிணைத்து ‘தட்சிணப் பிரதேசம்’ என்ற அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டனர். தமிழர்களுக்கு தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தி வந்த பெரியார், ‘தட்சிணப் பிரதேசம்’ கொண்டு வரும் முயற்சிகளைக் கண்டு கொதித்தெழுந்து, அதை முறியடித்தே தீர வேண்டும் என்று தீவிரமாக களமிறங்கினார். தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை மீட்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரித்தாலும், அதைவிட பேராபத்து, ‘தட்சிணப் பிரதேசம்’ உருவாக்கும் முயற்சியே என்பதை பெரியார் எடுத்துக்காட்டி எச்சரித்தார். தனக்கும் ம.பொ.சிக்கும் இது தொடர்பாக நடந்த பேச்சு வார்த்தை – கடிதத் தொடர்புகளையும் பெரியார் இந்த உரையில் விரிவாக விளக்கியுள்ளார்.*

*மலையாளிகள் எதிர்ப்பில் பெரியார் காட்டிய உறுதியையும், இந்த உரையைப் படிப்பவர்கள் உணர முடியும்.*

**– ஆசிரியர்**

***29.1.56 ஆம் தேதி மாலை 6 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக் கூட்டத்தில் பெரியார் ஆற்றிய சொற்பொழிவு:***

தமிழ்நாட்டிற்கு இந்திய அரசாங்கம் இழைத்து வரும் கொடுமைகளைக் கவனித்தால் மிகவும் முக்கியமாக நான்கைந்து விஷயங்களில் நாம் கிளர்ச்சி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அவைகளில் ஒன்றாக தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட வேண்டிய தமிழர்கள் பெரும்பான்மையும் வசித்து வரும் தேவிகுளம்-பீர்மேடு போன்ற பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்பதே. ஆனால் இது அவசியமற்றதாகி விட்டது.காரணம் தலைக்கே ஆபத்து வருகையில் தலைப்பாகையைப் பத்திரப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதைப்போல் நம்முடைய அடிப்படையான நாட்டுக்கே கேடு வருகையில் இப்போது தேவிகுளம்-பீர்மேடு என்று கதறுவதில் பலன் இல்லை. முதலில் நாட்டைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு நாட்டைக் காப்பாற்றி அதன் பிறகு வேண்டுமானால், தேவிகுளம், பீர்மேடு பற்றிய கவலை கொள்ளலாம்.

இன்றைய தினம் நாட்டையே பறிகொடுக்கும் நிலைமையில் தட்சிண பிரதேசம் என்று அமைக்க திட்டமிட்டிருக்கிறார்கள். தட்சிண பிரதேசம் அப்படி அமைக்கப்படுமானால் நாம் தமிழ்நாடு என்று கூறிக் கொள்ளவும் முடியாது. தமிழ்நாடு என்ற பெயரையே மறைத்துவிடுவார்கள். இன்றைக்குள்ள சென்னை நாடு என்பது மாற்றப்பட்டு தமிழ்நாடு என்று பெயரிடும்படி கேட்கிறோம். அப்படி இருக்க தட்சிண பிரதேசம் என்ற பெயரைக் கொடுத்தார்களானால் நம் நாட்டின் பெயர் அடியோடு மறைந்து போகும். ஆகவே தட்சிண பிரதேச அமைப்பு முயற்சியை முறியடிக்க முதலில் முயற்சி செய்ய வேண்டிய அவசியம் உள்ளவர்களாகஇருக்கிறோம்.

எப்பொழுது தட்சிணப் பிரதேசம் அமைக்கப்படும் என்ற செய்தி வெளியானதோ, அன்றைய தினமே பீர்மேடு - தேவிகுளம் பற்றிய பிரச்னை செத்துப் போய்விட்டது என்பது பொருள். தட்சிணப் பிரதேசம் உயிர் பெற்று எழுந்திருக்க ஆரம்பித்தவுடன் பீர்மேடு இந்நாட்டுடன் இருந்தால் என்ன அல்லது மலையாளத்துடன் இருந்தால் என்ன? மலையாள நாடு, கன்னட நாடு, தமிழ்நாடு மூன்றையும் சேர்த்து தட்சிணப்பிரதேசம் என்று கூறுகையில் எல்லாம் ஒன்றைப்போல் பாவித்து தான் எதையும் செய்வார்கள்.

### விளம்பரத்துக்கான போராட்டம் தேவையில்லை

ஆகவே பீர்மேடு - தேவிகுளம் போன்ற பகுதிகளுக்கு தற்சமயம் கிளர்ச்சி அவசியம் இல்லை. தட்சிணப் பிரதேச அமைப்பு செத்துப் போகுமானால், அதன் பிறகுதான் பீர்மேடு - தேவிகுளம் பற்றிய கிளர்ச்சிக்கு உயிர் உண்டாகும் அவசியம் இருக்கிறது. ஆனால், ஒரு சில சுயநலக்காரர்கள் விளம்பரத்திற்கென்றும், வீண் வேலைக்கென்றும் கிளர்ச்சி கிளர்ச்சி என்று மக்களைத் தூண்டிவிட்டு தகாத காரியங்களில் ஈடுபடச் செய்கிறார்கள். மக்கள் ஒன்றும் அறியாதவர்களாய் கிளர்ச்சி என்றவுடன் சிந்தித்துப் பார்க்காமல் கண் மூடிக் கொண்டு எதையும் செய்கிறார்கள்.

தட்சிணப் பிரதேச அமைப்பு மட்டும் வருமானால், இங்கு இப்போது பார்ப்பான் மட்டும் இருந்து கொண்டு நம் உயிரைக் குடித்துக் கொண்டிருப்பது போதாது என்று மலையாளிக்கூட்டமும் இங்கே வந்து நிரம்பிவிடும். இவை இரண்டும் சேர்ந்து நம்மை அழுத்திக் கொண்டிருக்கும், நம்மை முன்னேற விடாது. ஒன்றுக்கும் தலையெடுக்காதபடி நம்மை என்றைக்கும் கூலிகளாகவே வைத்திருப்பார்கள்.

ஏறக்குறைய பார்ப்பனக் குறும்பும், மலையாளக் குறும்பும் ஒன்றுதான். இரண்டிற்கும் ஒற்றுமை அதிகம். பார்ப்பானுக்குள்ள புத்தியெல்லாம் மலையாளிக்கு உண்டு. பார்ப்பானைப்போலவே மலையாளிகள் மான ஈனமில்லாதவர்கள், மற்ற நாட்டில் போய் அண்டிப் பிழைக்கிறோமே என்ற எண்ணம்கூட இருக்காது. எதற்கெடுத்தாலும் திமிராகப் பேசவும் பார்ப்பானைப் போல் தந்திரமாகப் பேசவும்தான் தெரியும்.

### மலையாளிகள் தூண்டுதல்

தட்சிண பிரதேச அமைப்பு முயற்சியே மலையாளிகளின் தூண்டுதலால் தான் உண்டானது. முன்பு சிறிது நாட்களுக்கு முன் இதைப் போன்றே திடீரென்று தட்சிணப் பிரதேசம் அமைக்கப் போவதாகக் கூறினார்கள். அதற்கு என்னுடைய சம்மதமும் கிடைத்துவிட்டதாக வெளியிட்டார்கள். உடனே நான் என்னைக் கேட்காமல் இவ்வளவு துணிச்சலாக பத்திரிகையில் வெளியிடும் அளவுக்கு வந்துவிட்டதே என்று உடனே மத்திய அரசாங்கத்திற்குத் தந்தி கொடுத்து நான் தட்சிண பிரதேச அமைப்பை வண்மையாகக் கண்டிக்கிறேன் என்று தெரிவித்தேன். மேலும் பத்திரிகை வாயிலாகவும் அதற்கான மறுப்புகளையும் எழுதி வந்தேன். அதன் பிறகு அந்தப் புகை அப்படியே இருந்து அடங்கிப் போய்விட்டது. இப்போது மறுபடியும் முளைப்பதற்கு ஆரம்பித்திருக்கிறது. இதுவும் மலையாளிகளின் தூண்டுதல்தான்.

மலையாளிகளுக்கு வடக்கே கொஞ்சம் செல்வாக்கு உண்டு. நேரு கூட மலையாளிகளின் யோசனையைக் கேட்ட பிறகு தான் எதையும் வெளியிடுவார். எனவே மலையாளிகள் நேருவிடம் சொக்குப் பொடி தூவி மயக்கி, அவருடைய முயற்சியால் இந்த அமைப்பு முறை வருவதாகத் தந்திரம் செய்கிறார்கள். நேருவும் மலையாளிகளுக்கு ஏற்றபடி கூத்தாடுபவர். இன்றைக்கு மலையாளிகளின் பாக்கெட்டிலேயே நேரு மாட்டிக் கொண்டிருக்கிறார். தன்னிடம் உள்ள நேருவை மலையாளிகளும் சும்மா வைத்திருப்ப தில்லை. ஏதோவது ஒன்றைக் கூறி தூண்டிவிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அதில் ஒன்றுதான் தட்சிண பிரதேசம் என்பது. காரணம் மலையாள நாடு மிகவும்சிறிய நாடு. பிள்ளைக்குட்டிகள் அதிகம் பெறுகிறார்களே தவிர, அவற்றை அங்கே வைத்துக் காப்பாற்ற போதிய வசதி இல்லை. நாட்டின் பரப்பளவுக்கு ஏற்ற முறையில் இல்லாமல் அங்கு ஜனத் தொகை அதிகம். இப்போதுள்ள மலையாள நாட்டைப் போல் இரண்டு மூன்று பங்கு பரப்பளவு இருந்தாலும் அங்குள்ள மக்கள் பிழைக்கப் போதிய வசதி இருக்காது. ஆகவே அந்நாட்டில் அடங்கியது போக எஞ்சியவர்கள் வெளியே சென்று பிழைக்க வேண்டிய நிலைமை யில் இருக்கிறார்கள். மிகவும் பரிதாபத்துக் குரியதென்றாலும், அதுகள் நம்முடைய உயிரையா வாங்க வேண்டும்?..... இப்போது கழுத்தைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சும் குள்ளநரிக் கூட்டம் இருந்து கொண்டு இருக்கிறது. அத்துடன் மற்றொரு வேங்கைக் கூட்டமும் இங்கு வந்து சேர்ந்தால் நம்முடைய அழிவுக்கு அவை இரண்டுமே முடிவு செய்துவிடும். இருந்தாலும் தங்கள் மலையாள நாட்டில் பிழைக்க வழியில்லை என்பதற்காக நம் தமிழ்நாட்டில் வந்து பிழைக்க வேண்டுமா? இங்குள்ள தமிழனே மலேசியா, சிலோன் என்று வாழ்கிறான். அங்குச் சென்றவர்கள் எல்லாம் அங்கங்கே துரத்தப்படுகிறார்கள். அவர்கள் இங்கு தமிழ்நாட்டிற்குத் திரும்பி வந்தவுடன் அவர்களுக்கு என்ன வழி செய்வது என்பதே தெரியவில்லை. அப்படி இருக்க எங்கோ கிடக்கும் மலையாளக் கூட்டம் இந்நாட்டில் புக எத்தனிக்கிறது. தமிழர்களுக்கு மிகவும் வேதனையாகத்தான் இருக்கிறது.

### பார்ப்பான் – மலையாளி உறவு

பார்ப்பானுக்கு இதைப் பற்றியே கவலையே கிடையாது; ஏனெனில் மலையாள சாதி இன உணர்ச்சியற்ற சாதி, பார்ப்பான் சொல்படி பாட்டுப் பாடும் சாதி, அதற்கு பார்ப்பான் - தமிழன் என்ற பாகுபாடு தெரியாது. ஏறக்குறைய பார்ப்பன நாகரிகத்திற்கும் மலையாள நாகரிகத்திற்கும் ஒற்றுமையுண்டு. இப்போது கூடப் பார்க்கிறோம்.பார்ப்பான் ஒரு உத்யோகத்தில் இருந்தால் அவனால் எத்தனை தமிழனை முன்னுக்கு வர முடியாமல் செய்ய முடியுமோ அதைப் போன்றே மலையாளியும் செய்கிறான். ஆனால் பார்ப்பனர்களுக்கும் மலையாளிகளுக்கும் ஒருவருக்கொருவர் உதவி செய்துக் கொள்வார்கள். தமிழன் என்றால் மலையாளி கவலை கொள்வதே கிடையாது. மேலும் தன்னால் முடிந்தவரை மலையாளியை முன்னுக்குக் கொண்டு வருவதிலேயே இருப்பான். இப்படி இந்த இரண்டு சாதியும் அதனதன் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து இந்நாட்டைப் பாழாக்கி நம் மக்களைக் கொடுமை செய்கின்றன.

எப்படியோ மலையாளிகளின் எண்ணிக்கை இந்நாட்டில் பெருகிவிட்டது. பார்ப்பான் எத்தனை பேர் உத்யோகத்தில் இருக்கின்றானோ அதைப் போன்றே மலையாளிகளும் இருக்கின்றனர். நாம் பார்ப்பனரல்லாதவர்களுக்கும் உத்யோகம் கொடுக்க வேண்டுமென்று கேட்டால் யாராவது மலையாளிக்குக் கொடுத்து விட்டு பார்ப்பனன் அல்லாதவனுக்கு உத்யோகம் கொடுத்திருக்கிறேன் என்று தந்திரமாகக் கூறி விடுகின்றனர். இப்படி எந்த உத்தியோகத்தை எடுத்துக் கொண்டாலும் பார்ப்பனர்கள் அல்லது மலையாளிகளே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மலையாள நாட்டில் ஆண்களுக்குச் சொத்துரிமை கிடையாது. பெண்களுக்குத்தான் சொத்துரிமை உண்டு. மலையாளிகள் தங்கள் குழந்தைகளுக்கு எப்படியாவது கல்வி புகட்டி விடுவார்கள். இங்கு பார்ப்பனர்கள் படித்திருப்பதைப் போன்று மலையாளிகள் எல்லாம் படித்திருக்கிறார்கள். படித்த பின் வேலை தேடுவதற்கு ஆரம்பித்தவுடன் அந்நாட்டில் எத்தனை பேருக்குத் தான் வேலை கிடைக்கும்? அங்கு ஒரு சிலருக்கு மட்டும்தான் வேலை கிடைக்கிறது. மற்றவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று வேலை தேடுகிறார்கள். எங்கே வேலை கிடைக்கிறதோ அங்கேயே நிரந்தரமாக வசிக்க

3 ஆம் பக்கம்

# பார்ப்பனர்களும் மலையாளிகளும், ஒரே குணத்தவர்தான்!

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

ஆரம்பிக்கிறார்கள். அப்படி வேலை தேடிக் கொண்ட கூட்டம்தான் இன்றைக்கு நம்நாட்டில் எங்கிலும் அவர்களாகவே செய்கிறார்கள். அங்கே பிழைக்க வழியின்றி போய் இந்நாட்டில் வந்துப் புகுந்து நமக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். வேலை கிடைக்கவில்லை. நாட்டில் வசிக்க இடமில்லை என்றால், அந்தமானுக்குப் போவதைவிட்டு இங்கே வந்து நம் உயிரை வாங்குகிறார்கள்.

அவர்களுக்கு சூத்திரர்களாக இருப்பதால் மானம் என்பது சிறிதும் கிடையாது. சூத்திரர்களாக இருப்பதால் அதை இழித் தன்மையாகக் கருதுவதில்லை. பார்ப்பனனுடைய வைதீக மூடப் பழக்க வழக்கங்கள் அத்தனையும் அப்படியே ஒப்புக் கொள்ளுகிறவர்கள். அப்படிப்பட்டவர்களை நம்முடன் கொண்டு வந்து சேர்க்க முற்படுவது நம்மை இன்னும் கீழானவர்களாக இருக்கச் செய்யவே ஆகும்.

மேலும் வடநாட்டினருக்கு என்றைக்கும் அடிமைகளாக இருக்க வேண்டிய அவசியம் கொண்டவர்கள். ஏன் என்றால் தனித்து வாழுவதென்றால் அவர்களால் முடியாத காரியம். இப்போதே அங்கு பிழைக்க இடமில்லை என்றுதானே வெளியே ஓடுகிறார்கள். தனித்து வாழுவதற்கு முற்பட்டால் தன் நாட்டு எல்லையை விட்டு வெளியே போக முடியாது. எனவே இப்படி கும்பலுடன் வாழ்ந்தால்தான் - அதுவும் வட நாட்டின் அடிமையில் இருந்தால்தான் கண்ட இடமெல்லாம் ஓடிப் பிழைக்க முடியும். இன்றைக்கு வடநாட்டான் கூறுகிறபடி கேட்டால் தான், நாளைக்கு வடநாட்டானிடமிருந்து சலுகை கிடைக்கும். இப்போது அவர்களுக்கு சலுகை கொடுப்பதற்குத்தான் தட்சிண பிரதேசம் அமைக்கிறார்கள் என்பதிலிருந்து நன்கு புரிந்து கொள்ளலாம்.

இவ்விதம் அக்கிரமக்காரர்களால் ஆளப்படும் ஜனநாயக ஆட்சி மிகக் கொடூரமான முறையில் ஒன்றை விட்டு ஒன்றாக நமக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கிறது. என்றைக்கு இந்த "ஜனநாயக" ஆட்சி அழிக்கப்படுகிறதோ, அன்றைய தினம் தான் நம்நாடு நிம்மதியான வாழ்க்கை வாழ முடியும். அக்கிரமச் செயல்களை எல்லாம் துணிந்து செய்கின்றனர். செய்வது தப்பு என்று தெரிந்து கொண்டும் வீண் விவாதத்திற்காகிலும் நம் மக்களுக்குத் தொல்லை கொடுக்க முற்படுகிறார்கள்.

**காட்டிக் கொடுக்கும் பார்ப்பனர் கூட்டம்**

இதற்குத் தகுந்தபடி இந்நாட்டு பார்ப்பனர்களும் காட்டிக் கொடுக்கிறார்கள். காட்டிக் கொடுக்கும் புத்தியும், வடநாட்டுடன் சேர்ந்து கூத்தாடும் புத்தியும் கொண்ட பார்ப்பனர்கள் என்றென்றும் நமக்குத் தொல்லைகளையே விளைவித்து வந்து இன்றைய நிலையிலும் பெரும் தொல்லை கொடுக்கிறார்கள். அதற்குத் தகுந்தபடி பார்ப்பனப் பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் எழுதுகின்றன. எவனாவது ஒரு அன்னக்காவடி தட்சிண பிரதேசம் வேண்டும் என்று சொல்லி இருப்பானாகில் உடனே அவர் ஆதரித்தார், இவர் ஆதரித்தார் என்று எழுதுகின்றன. பெரும் அளவில் மக்கள் எதிர்த்தால் அதை உடனே மூடிவிடுவார்கள். எதிர்த்த விஷயம் வெளியில் வராதபடி மறைத்து விடுகிறார்கள்.

பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு மற்றவர்களும் தலைகால் தெரியாமல் கூத்தாடுகிறவர்கள் ஏதோ பார்ப்பனருக்கு நல்ல பிள்ளையாக வேண்டுமே என்பதற்காக எதையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது என்பது ஒரு சிலருக்கு வழக்கமாய்ப் போய்விட்டது. அப்படி இருந்தால்தான் நாளைக்கு அக்ரகாரத்தில் பொறுக்குவதற்கு வசதியாயிருக்கும்? அந்த காரியத்தை உத்தேசித்து எதையும் முட்டாள்தனமாகச் செய்வது என்பதும் அதைப் பொது நலம் என்று கூறிக் கொள்வது அதை விட மிக மோசமானதென்றும் தான் கூற வேண்டும்.

தட்சிணபிரதேசம் அமைக்கப்படுமானால் அதனால் விளையும் நன்மை, தீமைகள் என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். பாமர மக்கள் சிந்திக்கவில்லை என்பது அதிசயம் இல்லை. இதுவரை பார்ப்பான் பேச்சைக் கேட்டுக் கொண்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மடைமையிலேயே இருந்தவர்கள் இன்னும் போதிய அறிவு பெற்று பக்குவமாக்கப்படவில்லை.

ஆனால், பொது நலத்திற்கென்றும் நாட்டின் நன்மைக்கென்றும் பாடுபடுகிறேன் என்று கூறிக் கொண்டிருப்பவர்கள் இதைப் பற்றி சிந்திக்கவில்லையே என்பது அவர்களின் முட்டாள்தனத்தைக் காட்டுவதுமன்றி அவர்களின் ஏமாளித்தனத்தைக் கண்டு பரிதாபப்படும் அளவில் இருக்கிறது. இப்படிப்பட்ட பொதுநலத் தொண்டர்கள் தலைவர்கள் என்பவர்கள்கூடப் பார்ப்பனர்களின் பேச்சில் மயங்கிவிடுகிறார்கள் என்பதைக் குறித்து மிக மிகப் பரிதாபம் அடைகிறேன்.

ஆனால், என்னைப் பொறுத்தமட்டிலும் யார் சொன்ன போதிலும் என்னுடைய மனதுக்குப் பிடித்தமானதையே செய்ய முற்படுவேன். மற்றவர்களின் தாட்சண்யத்திற்கு எதையும் பின் வாங்குகிறவன் இல்லை. கொடி எரிப்புப் போராட்டம் துவக்கியது காமராசர் ஆட்சியில்தான். கொடி எரிப்பு மட்டும் நடந்திருக்குமானால் காமராசர் சும்மா இருந்திருக்க மாட்டார். அப்போதும் எங்களுக்கு அவர் சட்டப்படி ஏதும் தண்டனை கொடுத்தே இருப்பார். அப்படி இருக்க நான் அவருடைய தயவுக்காகவோ அவருடைய யோசனையின் மீதோ எதையும் பின்பற்றும் அவசியம் இல்லை.

இப்போது தட்சிணப் பிரதேசம் அமைக்கப்படுமானால் நான் காமராசர் ஆட்சி என்பதற்காக சும்மா இருக்க மாட்டேன். கொடி எரிப்புப் போராட்டத்தைவிட இன்னமும் திடுக்கிடும்படியான போராட்டத்தைச் செய்யத்தான் திட்டமிட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். கொடி எரிப்புப் போராட்டம் மிகச் சிறிய விசயம். அதனால் பொருள் கஷ்டமோ உயிர் நஷ்டமோ அல்லது பொது மக்களுக்குத் தொல்லையோ கொடுப்பது கிடையாது. மிகவும் சிக்கனச் செலவில் நடைபெறும் காரியம். ஆனால் காரியமோ மிகப் பெரிதுதான். அது வடநாட்டு ஆட்சியையே ஒரு கலக்கு கலக்கிவிட்டதே! பெரிய ஆட்கள் எல்லாம் முன்பு தார் கொண்டு இந்தியை அழித்ததற்கு அலட்சியமாக பதில் சொன்னதுபோல் இதற்கும் அப்படி அலட்சியமாக சொல்லவில்லை. எல்லோரும் என்ன ஆகுமோ என்று திகில் அடைந்து கொண்டு தானிருந்தார்கள். ஆனால் எப்படியோ சமாதானத்தின் பேரில் அப்போராட்டம் ஒத்திவைக்கப்பட்டு கைவசம் இருக்கிறது. ஆனாலும் தட்சிணப்பிரதேசம் அமைக்கப்படுமானால் அந்தப் போராட்டத்தைவிட மேலான போராட்டமும் கைவசம் இருக்கிறது. அதை உபயோகப்படுத்தத்தான் போகிறேன்.

**எல்லை மீட்பு**
**கிளர்ச்சியில்**
**பெரியார்–ம.பொ.சிக்கும்**
**இடையே நடந்த**
**கடிதப் பரிமாற்றங்கள்**

**இப்போதே தயாராகுங்கள்!**

இதற்கு தோழர்கள் எல்லோரும் இப்போதே தயார் செய்து கொண்டிருக்க வேண்டும். என்னுடைய போராட்டத் திட்டம் வெளியாகும் நேரத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படி நாட்டின் விடுதலைக்கும் நாட்டினைக் காப்பதற்கும் நாட்டினைப் பறிகொடுக்காமல் மீட்பதற்கும் சிலர் செத்துப் போனால்கூட பாதகம் இல்லை. இப்படிப்பட்ட நல்ல காரியத்துக்கு உபயோகப்படாத உயிர் வேறு எதற்கும் வேண்டிய தேவை இல்லை. ஆகவே இன்றைக்கு நம்முடைய முயற்சி எல்லாவற்றையும் தட்சிணபிரதேசம் அமைக்கப்படாத முறையில் பார்த்துக் கொள்வதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**தோழர் ம.பொ.சி. முயற்சி**

நண்பர் ம.பொ.சி., தேவிகுளம் - பீர்மேடு சம்பந்தமான கிளர்ச்சிக்குத் திட்டமிடுவதற்கு என்னை அழைத்திருந்தார். 13.1.56 ஆம் தேதி எனக்கு அவர் எழுதிய கடிதத்தில் தங்களை எல்லைக் கிளர்ச்சி சம்பந்தமாகச் சந்தித்துப் பேச விரும்புகிறேன். தாங்கள் விரைவில் சென்னை வருவீர்கள் என்று நம்புகிறேன் என்பதாக எழுதி இருந்தார். பின்பு 16 ஆம் தேதி எனக்குத் தந்தி கொடுத்து சென்னைக்கு வரும்படி கேட்டிருந்தார். அவர் கொடுத்த தந்தியில்:

"Discussion about Border dispute. Like to meet in person Madras. Letter sent to Trichy" என்பதாக இருந்தது. நான் அதற்கு உடனே 19 ஆம் தேதி அன்றைய தினம் சென்னைக்கு வருகிறேன் என்பதாகத் தெரிவித்துவிட்டேன். அதற்கு அவர் 17.1.56 அன்று "Expect at Madras on 19th" என்று தந்தி கொடுத்திருந்தார். நண்பர் குருசாமியும் என்னுடைய கடிதத்தைப் பார்த்தபின் நண்பர் ம.பொ.சி.யைக் கலந்து பேசி அவரும் எனக்குத் தந்தி கொடுத்தார். அதில், "received letter consulted both; your presence nineteenth Thursday essential" என்பதாகக் கொடுத்திருந்தார். பிறகு 19 ஆம் தேதி அங்குச் சென்று நண்பர் ம.பொ.சி.யை ஒரு நண்பர் வீட்டுக்கு வரும்படி செய்து அங்கு இருவரும் சந்தித்துப் பேசினோம். அவர் கேட்டபடி எல்லைப் போராட்டம்சம்பந்தமாக நான் ஒப்புக் கொண்டேன் என்றாலும், என்னுடைய விருப்பத்தையும் அவர் ஒப்புக் கொண்டதற்கு தான் அதில் ஒரு சரியான முடிவுக்கு வந்தோம்.

அவர் எப்படியாவது எல்லைப்போராட்டத்திற்கு மட்டும் என்னைச் சம்மதித்து போராட்டத்திற்கு ஆதரவு பெற்றுக் கொண்டால் போதும் என்று ஏதேதோ தந்திரமாகப் பேசினார். ஆனால் நான் விட்டுக் கொடுக்கவில்லை. இன்றைக்கு தமிழ் மக்களுக்கு எல்லைப் போராட்டம் மட்டும் முக்கியமில்லை. மொத்தம் நான்கைந்து குறைபாடுகளில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே அத்தனைக்கும் கிளர்ச்சித் தொடங்குவதாக இருக்க வேண்டும். மேலும் நாம் எல்லைப் போராட்டத்திற்கு மட்டும் கிளர்ச்சி தொடங்கினால், நாம் இதுவரை எவையெவைகளை முக்கியம் என்று கருதி வந்தோமோ, அவைகளை எல்லாம் அலட்சியம் செய்துவிட்டு, இதை மட்டும் பெரிதாக நினைத்து கிளர்ச்சி செய்வதாக அரசாங்கத்தார் நினைத்துக் கொள்ளுவார்கள். எனவே எவைகள் முக்கியம் என்று தோன்றுகிறதோ அவைகள் அத்தனைக்கும் கிளர்ச்சித் தேவையாகும் என்று கூறினேன். அவரும் இறுதியில் ஒப்புக் கொண்டார்.

**முக்கிய நிபந்தனைகள்:**

- அதன்படி எல்லைக் கமிஷன் என்பது எல்லையை வரையறுப்பதில் தமிழ் மக்களுக்குச் செய்துள்ள ஓரவஞ்சனையான காரியங்களைத் திருத்துதல் முதலாவதாகும்.
- இரண்டாவதாக இந்தி மொழியை யூனியனுக்கு ஆட்சி மொழியாகவும், இந்தியாவுக்கு தேசிய மொழியாகவும் ஆக்கப்படுவதற்கு பல வழிகளிலும் அரசாங்கம் முயற்சிப்பதைத் தடுப்பது.
- மூன்றாவதாகத் தமிழ் யூனியன் ஆட்சி என்பதில் படை போக்குவரத்து, வெளிநாடு உறவு இவை தவிர்த்த மற்ற ஆட்சியின் உரிமைகள் அனைத்தும் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

இப்படிக் கூறுவதன் மூலம் திராவிடர் கழகத்தின் லட்சியமான தமிழ்நாடு யூனியனிலிருந்து விடுபட்டு பூர்ண சுயேச்சை உரிமையுடன் தனித்து இயங்க வேண்டும் என்பதாக முடிவு செய்து கொண்டிருந்தாலும் அந்தக் கொள்கைக்குப் பாதகம் இல்லாமலும் மேற்கண்ட விஷயங்கள் பற்றிய கிளர்ச்சியை முன்னிட்டு மற்ற ஸ்தாபனக்காரர்களுடைய ஒத்துழைப்பையும் நட்பையும் முன்னிட்டு இந்த மூன்றாவது வாசகத்திற்கு இணங்குகிறது.

மற்றும் நான்காவதாக, தமிழ்நாட்டுக்குத் தமிழில் சென்னை என்றும், ஆங்கிலத்தில் மெட்ராஸ் என்றும் பெயரிட்டிருப்பதை மாற்றி தமிழ்நாடு என்ற பெயரையே இருக்கும்படி செய்ய வேண்டும் என்பது.

அய்ந்தாவதாக தமிழ்நாட்டை தென்மண்டலம் என்ற அமைப்பு முறையின்படி மற்ற நாடுகளுடன் இணைக்கத் திட்டமிட்டிருப்பதை எதிர்ப்பது.

இந்த அய்ந்துக்கும் கிளர்ச்சி நடத்த வேண்டியது அவசியம். அதற்காகவே நம்முடைய முழு முயற்சியையும் பயன்படுத்த வேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் ஒப்புக் கொண்டு கிளர்ச்சிக்கு யார் யாரை சேர்த்துக் கொள்வது என்று கேட்டார்.

(தொடரும்)

# சோதிடம் அறிவியல் அல்ல

முதல் பக்கத் தொடர்ச்சி

‘தினமணி’ ஏடுகளும் இந்த உரையை வெளியிட்டுள்ளன. கருத்தாழமிக்க அவரது உரையின் சுருக்கம்:

நவீன விஞ்ஞானம் மட்டுமே சமுதாயத்தை வழி நடத்தக்கூடியது; சமுதாயத்தை மாற்றியமைக்கக் கூடியதும் ஆகும். நம்பிக்கைகளை மட்டுமே ஏற்றுக் கொள்ள முடியாது. அவை பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட வேண்டும். பரிசோதனைகளின் அடிப்படையில் நிரூபிக்கப்படும் நம்பிக்கைகள் மட்டுமே அறிவியலாக முடியும். காலம் காலமாக பல கதைகளை சொல்லி வந்திருக்கிறோம். அந்தக் கதைகளை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தி, உண்மையா, கற்பனையா என்று கண்டறிந்து அதனடிப்படையிலேயே நவீன விஞ்ஞானம் வளர்ந்து கொண்டிருக்கிறது. கோப்பர்நிக்கஸ், கலிலியோ காலத்திலேயே நவீன விஞ்ஞானத்துக்கு அடித்தளமிடப்பட்டது. (உலகம் உருண்டை; பூமி ஒரு சிறிய கோள்; என்பதை விஞ்ஞானபூர்வமாக கண்டறிந்தவர் கோபர் நிக்கஸ்; பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, சூரியனைச் சுற்றி வருகிறது என்ற உண்மையை முதன்முதலாக தொலைநோக்கி வழியாக கண்டறிந்தவர் கலிலியோ–ஆர்) சிறந்த விஞ்ஞானம் உருவாக, சுதந்திரமான சிந்தனை அவசியமாகிறது. சுதந்திர சிந்தனையால் உருவான விஞ்ஞான கண்டுபிடிப்புகள்தான் 16 ஆம் நூற்றாண்டில் அய்ரோப்பாவில் சீர்திருத்தத்துக்கு அடித்தளமிட்டது அந்த புதிய விஞ்ஞான மறுமலர்ச்சிதான். அதிகார மய்யங்களை அசைத்தன; புதிய சுதந்திர சிந்தனைகளுக்கு வழிவகுத்தன. விஞ்ஞானத்தில் மாறுபட்ட கருத்துகோள்கள் வெளிப்படுவதற்கும் வழி வகுத்தன.

ஒரு கருத்தை முன்மொழிகிற நபர் எப்படிப்பட்டவர் என்ற அடிப்படையில் அவரது கருத்து சரியா தவறா என்பதைத் தீர்மானிக்கும் போக்கு ஒரு பக்கமும், சொல்கிறவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும், சொல்லப்படுகிற கருத்து எவ்வளவு அழகாக இருந்தாலும், அது அறிவியல் ஆய்வுக்குட்பட்டால் மட்டுமே ஏற்க முடியும் என்ற போக்கு மற்றொரு பக்கமும் உருவாயின. கடைசியாக வெற்றிப் பெற்றது அறிவியல் பூர்வமாக - செயல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டவை மட்டுமே. இதுவே நவீன விஞ்ஞானத்தின் அடிப் படை. இதுதான் சமூகத்தை மாற்றியமைக்கக் கூடியது. “இந்த உலகம் எவருக்கும் சொந்தமானது அல்ல” (அதாவது கடவுளால் படைக்கப்பட்டது என்பதற்கு மறுப்பு-ஆர்) என்ற சுயசிந்தனைக் கோட்பாடுதான். அய்ரோப்பாவில் 1600 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட ‘ராயல் சொசைட்டி’ என்ற விஞ்ஞான அமைப் பின் அடிப்படை கோட்பாடாகும். அடிப்படை இல்லாத பல மூடநம்பிக்கைகள், விஞ்ஞான சோதனைகளுக்கு முன் நிற்க முடியாமல் தோற்றுப் போயின. ஆனாலும், அந்த நம்பிக்கைகளை விடாப்பிடியாக தொடர்ந்து நம்பிக் கொண்டும் இருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் தற்செயலாக நடக்கும் நிகழ்வுகளை, காரணங்களைக் கொண்டு பிரித்துப் பார்க்காமல், திணறிப் போய், அப்படியே நம்பி விடுவது தான்.

மனித மூளைகள் சிலவற்றுக்குப் பழக்கப்படுத்தப்பட்டுள்ளன. சில முன் மாதிரிகளை அப்படியே பதியச் செய்து விடுகிறோம். கணிதத்தில் அதற்கு விடை தேடும் வழிமுறைகள் எப்படி என்பது நமக்கு முன்கூட்டியே தெரிவதுபோல், இசையோ, நாட்டியமோ, ஓவியமோ நம்மிடம் நல்ல தாக்கங்களை உருவாக்கும் என்பதை நாம் முன்கூட்டியே அறிந்து வைத்திருப்பதுபோல், பலகற்பனையான முன் மாதிரிகளையும் நாம் மூளையில் ஏற்றி வைத்திருக்கிறோம். அவைகள் உண்மையில் ‘இருத்தல்’ அற்றவை; இல்லாதவை; (கற்பனையாக – இப்படி மக்கள் மூளையில் ஏற்றி வைத்திருக்கும் முன்மாதிரிகள் என்பது – கடவுள் நம்பிக்கைக்கும் பொருந்தும். – ஆர்)

ஒன்றோடு மற்றொன்றை தொடர்புறுத்தி, அறிவியலுக்கு எதிரான முடிவுகளுக்கு வந்துவிடக்கூடாது. வானத்தில் பறக்கும் சில கழுகுகள், பிணங்களை தின்கின்றன. கழுகுகள் பிணங்களைத் தின்ன வேண்டும் என்பதற்காகவே குழந்தைகள் பிறக்கின்றன என்று கற்பனை செய்து கொள்ள முடியுமா? இப்படி தொடர்புபடுத்திப் பார்ப்பது ஒரு கற்பிதம்.

அறிவியலைப் பொறுத்தவரை ஒரு கண்டுபிடிப்பை மற்றொரு கண்டுபிடிப்பு தவறு என்று நிரூபிக்கும்போது, அது தன்னைத் தானே மாற்றத்துக்கு உள்ளாக்கிக் கொள்கிறது. தவறை சரி செய்து கொள்கிறது. அறிவியலுக்குள்ளேயே அந்த மாற்றத்தை ஏற்கும் போக்கு அடங்கியுள்ளது. அதே நேரத்தில் அறிவியலுக்கு உட்படாத ஏனைய மூட நம்பிக்கைகளால் தவறுகளை திருத்திக் கொள்ள முடியாது. அறிவியல் நம்பிக்கையும், மூட நம்பிக்கையும் வேறுபடக் கூடிய இடம் இதுதான். இது விஞ்ஞானத்தில் நிகழுவதும் உண்டு; ஆனால் அந்தத் தவறுகள் மோசமானதோ கெட்டதோ அல்ல. ஆனால் அஞ்ஞானப் பொய்மைகள் நிச்சயமாக கெட்டவை; மோசமானவை.

சோதிட நம்பிக்கைக்கு வருவோம். அது நிச்சயமாக அறிவியல்பூர்வமானது அல்ல; கோள்களும், நட்சத்திரங்களும் நமது தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியதும் அல்ல. பிறக்கும்போதே நம் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டுவிடுகிறது என்பதற்கு அடிப்படை ஆதாரங்கள் ஏதுமில்லை. நவீன விஞ்ஞானம் மருத்துவத்துடன் கைகோர்த்து நிற்பதால்தான், மனிதனின் சராசரி ஆயுள்காலம் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. மருத்துவத்திலும் அறிவியலை நம்ப வேண்டுமே தவிர, விஞ்ஞானபூர்வமாக சான்று பூர்வமாக நிரூபிக்கப்படாதவற்றை நம்பக் கூடாது. அறவியல்பூர்வமாகக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளால்தான் பெரியம்மை முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது - என்று வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் பேசினார்.

ஒரு விஞ்ஞானி என்ற நிலையில் அறிவியலையும், போலி அறிவியலையும் வேறுபடுத்தி, மிகச் சரியான கருத்துகளை முன் வைத்துள்ளார் வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன். ‘பாரதய வித்யா பவன்’ பார்ப்பனர்கள், இதை விரும்ப மாட்டார்கள் என்பதைத் தெரிந்தும், உண்மைகளை உரத்துச் சொல்லியிருப்பதை பாராட்ட வேண்டும்.

பெரியார் காலம்காலமாக ‘அறிவைக் கொண்டு சிந்தித்து ஏற்றுக் கொள்’ என்று கூறினார். பார்ப்பனர்களோ பெரியாரை கடவுள், மத விரோதி என்றனர். இன்று அதே சிந்தனையை பார்ப்பன விஞ்ஞானிகளே, பார்ப்பனர் முன் இடித்துக் கூறும்போது பார்ப்பனர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கின்றனர். இறுதியில் வெல்லப்போவது பெரியார் சிந்தனைதான்!

# நாட்டு நடப்பக் கொஞ்சம்...

நாட்டு நடப்பக் கொஞ்சம் சொல்லு வோமுங்க - நம்ம
நாட்டு நடப்பக் கொஞ்சம் சொல்லு வோமுங்க

மெட்டமைச்சு அதையும் பாடுவோ முங்க - தமிழ்
மக்களுக்கு ஒரக்க கேக்க வேணுங்க
ரெண்டில் ஒரு முடிவை எடுக்கணுங்க - நம்ம
ரெண்டுங் கெட்டான் பொழப்ப முடிக்கணுங்க நாட்டு...

வஞ்சனையும் கொலைகளும் சகஜமுங்க - டில்லி
வரலாறு சொல்லுமிதைச் தெரிஞ்சிக்குங்க
ஒருமைப்பாடு பேசுறதில் குறைச்ச லில்லே - தமிழன்
உயிரோடு இருப்பதே பிடிப்ப தில்லே நாட்டு...

தமிழனைக் கொல்லவச்சான் ஈழத்திலே - மீனவத்
தமிழனைக் கொன்னாலும் கண்டுக்கவில்லே
ஆறுகள அடைக்கிறான் பொத்திக்கிறான் - அணு
உலையின்னு தடுத்தா நட்டுக்குறான்! நாட்டு...

அகிம்சைன்னு பஜனை பாடுற வங்களே - வில்லன்
நம்பியாரப் போல் உயிரைக் கொல்லுவாங்களே
டில்லிக்காரன் உயிரு ஒஸ்த்தி என்கிறான் - கோடி
தமிழரின் உயிரை நாஸ்த்தி பண்ணுறான் நாட்டு...

தமிழ்நாடு இந்தியாவில் இருக்கிறதா - இல்ல
தமிழனும் இந்தியாவில் இருக்கணுமா ?
இனியுந்தான் அறப்போரில் சாகவேணுமா - சந்ததியும்
இப்படியே அடிமையாய் வாழவேணுமா ? நாட்டு...

**– குயில்தாசன்**

## கயத்தாறில் தூக்கு தண்டனை எதிர்ப்புக் கூட்டம்

மரண தண்டனைக்கு எதிரான விளக்கப் பொதுக் கூட்டம் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கயத்தாறில் பால் பண்ணை எதிரில் கழக சார்பில் 3.12.11 அன்று நடந்தது. மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமையில் மாவட்ட துணைத் தலைவர் வே.பால்ராசு, மாவட்டச் செயலாளர் கோ. அ. குமார், ம.தி.மு.க. ஒன்றிய பொறுப்பாளர் கணபதி பாண்டியன் ஆகியோர் உரையாற்றினர். கழக ஆலோசனைக் குழு உறுப்பினர் பால் பிரபாகரன் சிறப்புரையாற்றினார். நிகழ்வில், மாவட்ட பொருளாளர் க.மதன், மாநகர தலைவர் சா.த. பிரபாகரன், மாநகர துணைத் தலைவர் ரவிசங்கர், மாநகரச் செயலாளர் பால். அறிவழகன், நெல்லை மாவட்டச் செயலாளர் சி.ஆ.காசிராசன், தோழர்கள் சண்முகராசு, ம.திலீபன், இரா.சிங்கணன் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள், தமிழ்ப் புலிகள் அமைப்பின் நெல்லை மாயா ஆகியோரும், ம.தி.மு.க. தோழர்களும் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட இணைச் செயலாளர் ச.கா.பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

### ஒட்டப் பிடாரத்தில்

10.12.2011 அன்று மாலை 6 மணியளவில் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஒட்டப்பிடாரத்தில் பேருந்து நிறுத்தம் அருகில் தூத்துக்குடி மாவட்ட கழக சார்பில் மரண தண்டனைக்கு எதிரான விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமை வகித்தார். மாவட்ட இணை செயலாளர் ச.கா. பாலசுப்பிரமணியன், மாவட்ட துணைத் தலைவர் வே.பால்ராசு, மாவட்ட செயலாளர் கோ.அ.குமார், ம.தி.மு.க. ஒன்றிய பொறுப்பாளர் வீரபாண்டி செல்லச்சாமி, ம.தி.மு.க. மீனவரணியின் நக்கீரன் ஆகியோர் உரையாற்றினர். தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் விளக்கவுரையாற்றினார்.

### மதுரையில் பெரியார் நினைவு நாள்


24.12.2011 அன்று காலை 11 மணிக்கு மதுரை மாவட்ட நீதிமன்றத்திலிருந்து மாவடட தலைவர் வழக்கறிஞர் அ. பெரியசாமி தலைமையில் ஊர்வலமாகச் சென்று பெரியார் சிலைக்கும், சாதி ஒழிப்பு போராளி களுக்கும், தமிழ்நாடு விடுதலைக்குப் போராடி உயிர்நீத்த தோழர்களுக்கும் வீரவணக்கம் செலுத்தி, பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து முழக்கமிட்டனர். ஊர்வலத்தில் மாவட்ட அமைப்பாளர் மு.தமிழ்ப்பித்தன், வெண்மணி, மாவட்ட செயலாளர் விடுதலை சேகர், பா. ஸ்டாலின் மற்றும் வழக்கறிஞர்கள், பொற்கொடி, பாரதி, பகத்சிங், இராசேந்திரன், விஜய பாரதி, மதி, வேல்முருகன், தமிழ்ப் புலி மெய்யப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 5th January 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜன. 12, 2012 | புரட்சி 10 | முழக்கம் 52 | விலை: ரூ.2.50

# தமிழர் புத்தாண்டு தை முதல் நாளே!

# தமிழர் இல்லந்தோறும் விழா எடுப்போம்!

***தமிழக முதல்வர் ஜெயலலிதா– இந்துத்துவ உணர்வோடு தமிழ்ப் புத்தாண்டை சித்திரைக்கு மாற்றினாலும் தமிழர் புத்தாண்டு தை முதல் நாளே என்பதை ஆணித்தரமாக விளக்கும் கட்டுரை இது. கட்டுரை ஆசிரியர் 'சோதிடப் புரட்டு' நூலை எழுதிய கனடா வாழ் சிந்தனையாளர் நக்கீரன்.***

பஞ்சாங்கத்தில் உள்ள 60 ஆண்டுகளில் ஒன்றேனும் தமிழில் இல்லை. தமிழன் என்று தன்னைச் சொல்லிக் கொள்ளும் தன்மானம் உள்ள ஒருவனாவது அவற்றைத் தமிழ் ஆண்டு என்று ஒப்புக் கொள்ள மாட்டான். இந்த அறுபது ஆண்டுகளை கடவுளர்களோடு தொடர்புபடுத்தி, ஆபாசம் வழியும் கதைகளையும் புராணிகர்கள் உருவாக்கி விட்டார்கள். நாரதரும் கிருஷ்ணனும் உறவு கொண்டு பெற்ற குழந்தைகளே 'பிரபவ முதல் அட்சய முடிய 60 ஆண்டுகள்' என்று தமிழ்க் கலை களஞ்சியமான 'அபிதான சிந்தாமணி' கூறுகிறது. இதற்குப் புராண ஆதாரங்கள் வேறு உள்ளன. இந்த 60 ஆண்டுகளுக்கு மேல் 61 ஆவது ஆண்டைக் குறிக்கப் பெயர் இல்லை. மீண்டும் 'பிரபவ' ஆண்டிலிருந்து தான் தொடங்க வேண்டும் என்பது நடைமுறைக்கும் அறிவுக்கும் ஒவ்வாத மூடநம்பிக்கை ஆகும். இப்போது வழங்கும் 'பிரபவ' தொடங்கி, 'அட்சய' ஈறாக உள்ள 60 ஆண்டுப் பெயர்கள் சாலி வாகனன் என்பவனால் அல்லது கனிஷ்ஷனால் கி.பி. 78 இல் ஏற்பட்டவை. இவை வடநாட்டு அரசனால் ஏற்பட்டதனால் அவற்றின் பெயர்கள் வட மொழிப் பெயர்களாக உள்ளன. (பக்.7, இந்து 10-03-1940)

இந்த 60 ஆண்டு முறையால் தமிழர் மொழி, மரபு, மானம், பண்பு, வாழ்வு முதலியவற்றுக்கு ஏற்பட்டுள்ள அழிவும் இழிவும் இரண்டையும் எண்ணிப் பார்த்து உணர்ந்து தெளிந்த தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் 1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந்து மூன்று முக்கிய முடிவுகளை எடுத்தார்கள்.

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டைப் பின்பற்றுவது.
2. அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது.
3. திருவள்ளுவர் காலம் கி.மு. 31 (வழக்கில் உள்ள ஆங்கில ஆண்டுடன் 31யைக் கூட்டினால்) திருவள்ளுவர் ஆண்டு.

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை, இறுதி மாதம் மார்கழி.

புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள், கிழமைகள் வழக்கில் உள்ளவை. இந்த முடிவை எடுத்தவர்களில் தமிழகத்தின் மூத்த தமிழ் அறிஞர்கள் மறைமலை அடிகள், திரு.வி.க., சுப்பிரமணிய பிள்ளை, சச்சிதானந்தப் பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோம. சுந்தர பாரதியார், கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

அதன் பின் 1937 டிசம்பர் 26 இல் திருச்சியில் 'அகில இந்திய தமிழர் மாநாடு' சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடியது. அதில் தந்தை பெரியார், கரந்தை தமிழ்ச் சங்கத் தலைவர் உமா மகேசுவரனார், பேராசிரியர் கா. சுப்பிரமணியம், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், திரு.வி.க. மறைமலை அடிகளார், பி.டி. இராசன், ஆற்காடு இராமசாமி முதலியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பட்டுக் கோட்டை அழகிரி உட்படப் பலரும் பங்கேற்றனர்.

அந்த மாநாடும் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், பொங்கல் திருநாளே தமிழர் திருநாள் என்றும் பறைசாற்றியது. தமிழ்க் கடல் மறைமலை அடிகளார் சான்றுகளுடன் தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம், பொங்கலே தமிழர் விழா என்று அறுதியிட்டுப் பேசினார்.

இந்த முடிவுகள் எந்த அடிப்படையில் எடுக்கப் பட்டன என்ற கேள்விக்கு முத்தமிழ்க் காவலர் முனைவர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் மாநாட் டில் கலந்து கொண்டு பேசிய அறிஞர்களின் அறிவு, ஆராய்ச்சி, பட்டறிவு ஆகியவையே அடிப்படை என்று குறிப்பிடுங்கள் போதும்" என்று விளக்கம் தந்தார்.

தமிழ்ப் புத்தாண்டு குறித்து ஈழத்து அறிஞர் பண்டிதர் க.பொ. இரத்தினம் அவர்கள் 'சித்திரை

2ஆம் பக்கம்

**தோழர்களுக்கும்**
**வாசகர்களுக்கும்**
**தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திருநாள் வாழ்த்துகள்!**

## 'ஜெ.' மாட்டிறைச்சி சாப்பிட்டார் என்பது பெருங்குற்றமா!

# 'நக்கீரன்' மீதான தாக்குதலை கண்டிக்கிறோம்

முதலமைச்சர் ஜெயலலிதா, மாட்டுக்கறி சாப்பிட்டார் என்று 'நக்கீரன்' இதழில் வெளியான செய்திக்காக சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 'நக்கீரனுக்கு' எதிராக ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு வன்முறையில் இறங்கியிருப்பது வன்மையான கண்டனத்துக்குரியது. இந்தத் தாக்குதல் 'நக்கீரனுக்கு' எதிரானதாக மட்டும் நாம் கருதவில்லை. 'மாட்டுக்கறி' சாப்பிடும் கோடானுகோடி மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் என்றே நாம் கருத வேண்டியிருக்கிறது.

புரதச் சத்தும், ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய உணவு மாட்டிறைச்சி. கோழி, ஆடு இறைச்சியைப் போல், மாட்டிறைச்சி மற்றொரு உணவு. உண்மையிலே ஜெயலலிதா மாட்டிறைச்சி உண்டிருப்பாரானால், அதனால் அவருக்கு பெருமையே தவிர, 'இழிவு' அல்ல.

'பசு மாடு' மட்டும் புனிதமானது என்று போராடுகிறவர்கள் பார்ப்பனர்கள் தான்! பா.ஜ.க. பார்ப்பன பரிவாரங்கள், இதை கொள்கையாக வைத்துப் போராடி வருகின்றன. சென்னையில் பார்ப்பன பத்திரிகை விழா ஒன்றில் பங்கேற்க, 'இந்துத்துவ' பயங்கரவாதி, குஜராத் முதல்வர் மோடி வர இருக்கும் நிலையில், இப்படி ஒரு வன்முறைக்கு ஆளும் கட்சியினர் தூண்டிவிடப்பட்டுள்ளது, பல சந்தேகங்களை எழுப்புகிறது.

"எங்கள் தலைவர் பா.ஜ.க.வின் இந்துத்துவத்தை ஏற்பதில் எவருக்கும் சளைத்தவரல்ல" என்று பா.ஜ.க. அரசியல் வட்டாரத்துக்கு உணர்த்துவதற்காக இப்படி ஒரு நாடகம் அரங்கேற்றப்படுகிறதா என்ற சந்தேகமும் எழவே செய்கிறது.

அந்த கேடு கெட்ட அரசியல் எப்படியோ, போய்த் தொலையட்டும். ஆனால், ஒருவரை மாட்டிறைச்சி சாப்பிடுபவர் என்று கூறுவதே, 'சகிக்க முடியாத அவமானம்' என்று வன்முறையைக் கையில் எடுப்பது, வன்மையான கண்டனத்துக்குரியது. கோடானுகோடி மாட்டிறைச்சி உண்ணும் ஏழை எளிய மக்கள் மீதான அவமதிப்பு.

- புத்த மார்க்கம் செல்வாக்குப் பெறும் காலம் வரை பார்ப்பன ஆரியர்கள் மாட்டிறைச்சி சாப்பிட்டவர்கள் தான். 'இந்திரனுக்கு' பார்ப்பன ஆரியக் கூட்டம், மாட்டிறைச்சி படைத்து சாப்பிட்டதை, 'ரிக்வேதம்' பல இடங்களில் கூறுகிறது.
- பார்ப்பனர் நடத்திய பல்வேறு யாகங்களான 'அஸ்வமேதம்', 'ராகசூயம்', 'பாஜபேயம்', 'சதுர்மாஷ்யா', 'கவுத்ராமணி' போன்றவற்றில் பசுவை பலியிட்டு வயிறுமுட்ட பார்ப்பனர்கள் விழுங்கியதை 'ரிக்வேதம்' கூறுகிறது.
- 'ராமன்' விரும்பி சாப்பிட்டது 'மாட்டுக்கறி தான்' என்று வால்மீகி ராமாயணம் கூறுகிறது.
- வேதகாலப் பார்ப்பனர்கள் 'சோமபானம்', 'சுராபாணம்' குடித்து மாட் டிறைச்சி உண்பவர்கள் என்பதற்கு அடுக்கான ஆதாரங்களைக் காட்ட முடியும்.
- மாட்டிறைச்சி இன்று சர்வதேச உணவு. ஆனால், பார்ப்பன இந்துத்துவ சக்திகள் 'பசு'வின் பாதுகாவலர்களாக நாடகமாடி இஸ்லாமிய, கிறிஸ்துவ மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உணவு முறையை அவமதித்து வருகிறார்கள். இந்த அவமதிப்புகளுக்கு தமிழகத்தின் ஆளும் கட்சி அங்கீகாரம் வழங்குகிறதா? மாட்டிறைச்சி சாப்பிடுவோரின் வாக்குகள் தங்களுக்குத் தேவை இல்லை என்று கூறுவார்களா?
- அண்மையில் ம.பி. மாநில ஆட்சி பசு மாட்டை வெட்டினால் 7 ஆண்டு சிறை என்ற கொடூரமான சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. புகார் ஏதும் இல்லாமலே அரசே, நேரடியாக வழக்கு தொடருவதற்கு வழி வகுக்கும் இந்த பார்ப்பனிய சட்டத்துக்கு குடியரசுத் தலைவரும் ஒப்புதல் வழங்கியிருப்பது கடும் கண்டனத்துக்குரியதாகும். மத்தியில் நடக்கும் காங்கிரஸ் ஆட்சி, இத்தகைய சட்டங்களைக் கடுமையாக எதிர்த்திருக்க வேண்டும். ஆனால், அதுவும் "இந்துத்துவத்தின்" நேச சக்தியாகவே பார்ப்பன கோர முகத்தைக் காட்டி நிற்கிறது.
- ஜெயலலிதா மாட்டுக்கறி சாப்பிட்டார் என்று எழுதியதற்காகவே 'நக்கீரன்' அலுவலகத்தை தாக்குவதும், மின்சாரத்தைத் துண்டிப்பதும் நாகரிகமற்ற செயல். கடந்த காலத்தில் தி.மு.க. ஆட்சியில் மதுரையில் 'தினகரன்' அலுவலகத்தில் அங்கேயுள்ள சில 'வீரர்களால்' வன்முறை அரங்கேற்றப்பட்டு, 3 ஊழியர்கள் பலியானார்கள். அதே வன்முறை வெறியாட்டங்கள் இன்றைய ஆளும் கட்சியிலும் தொடருகின்றன.

***ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை.***

# இந்து பஞ்சாங்க கணிப்புகள் அறிவியலுக்கு எதிரானவை

முதல் பக்கத் தொடர்ச்சி

வருடப் பிறப்பு என்பது சாலிவாகனன் என்ற வடநாட்டு அரசனால் பின்னாளில் நிலைநாட்டப் பட்டது. இந்த அரசனுக்கு முன்னர் பல்லாயிரம் ஆண்டுகளாக நயத்தக்க நாகரிகத்துடன் வாழ்ந்த தமிழ் மக்கள் தம் நாட்டுப் பெருமகன் ஒருவனுடன் இணைந்த தொடர் ஆண்டை நிலைநாட்ட முயலாதது பெரும் விந்தையாக உள்ளது. (சித்திரை வருடப் பிறப்பை) வரவேற்று, (அதன் மூலம்) தமிழினத்தின் பழமையையும் பண்பையும் சிறப்பையும் செல்வாக்கையும் (இன்றைய தமிழர்கள்) சிதைத்து வந்துள்ளமை பெரும் வெட்கத்திற்கு இடமானதாகவும் இருக்கின்றது. தமிழ் மக்களிடையே நிகழ்ந்த மானக் கேடான நகைப்புக்கிடமான செயல் இது ஒன்று மட்டும்தானா? தமிழ் மக்களின் கோவில்களிலே இன்று தமிழ் மொழியும் தமிழ் இசையும் ஒதுக்கப்பட்டுள்ளன” என மிகக் கடுமையாக விமர்சித்து இருக்கிறார்.

தமிழீழத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிழல் ஆட்சி இருந்தபோது - கலைஞர் கருணாநிதியின் அறிவிப்புக்கு முன்னரே - தமிழர்களின் புத்தாண்டு தைப் பொங்கல் நாளான தை முதல் நாளே என அறிவித்திருந்தது நினைவு கூரத்தக்கது. தைப் பொங்கல் திருநாள் வான் சார்ந்து, மண் சார்ந்து, முழுமையான இயற்கை சார்ந்து உருவாகிய திருநாளாகும்!

1969 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சி பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாளை திருவள்ளுவர் நாள் என்று ஏற்று அரசு விடுமுறை அளித்து ஆணை பிறப்பித்தது.

1971 இல் கலைஞர் கருணாநிதி ஆட்சி திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்றது. இம்முறையை 1971 முதல் அரசு நாள் குறிப்பிலும் 1972 முதல் அரசிதழிலும் வெளியிட்டது.

1981 முதல் எம்.ஜி.ஆர். ஆட்சி அரசின் அனைத்து அலுவல்களிலும் பின்பற்றி வருகிறது. எனவே தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு ஆகும்.

இடையில் வந்து புகுந்த சித்திரை, தமிழர் மீது புகுத்தப்பட்ட பண்பாட்டுத் திணிப்பாகும்.

சென்னை பள்ளிக்கூடத்தில் ஆங்கில மொழி மூலம் படித்த முதல்வர் ஜெயலலிதா, சைவ சித்தாந்தி தமிழ்க் கடல் மறைமலை அடிகளார், முத்தமிழ் அறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம் போன்ற அறிஞர்களைவிடத் தனக்கு அதிகம் தெரியும் என்பது அறிவுடைமை அன்று. அஃது அவரது அறியாமையை அல்லது ஆணவத்தைக் காட்டுகிறது எனலாம்.

பழந்தமிழகத்தில் ஆண்டுத் தொடக்கம் தை மாதமாக இருந்தது. பின்னர் ஆவணி ஆண்டின் முதல் மாதமாகக் கொள்ளப்பட்டது என்பது தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் எழுதிய உரை மூலம் தெரிகிறது. பின்பு சித்திரை ஆண்டின் முதல் மாதமாக மாற்றப்பட்டது. எனவே இழந்த தொன்மைச் சிறப்புக்குரிய தை மாதம் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் ஆகும்.

தை முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டு என்பதற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட இலக்கியங்களில் காணப் பெறும் சான்றுகள் பின்வருமாறு:

1. ‘தைஇத் திங்கள் தண்கயம் படியும்’ (நற்றிணை)
2. ‘தைஇத் திங்கள் தண்ணிய தரினும்’ (குறுந்தொகை)
3. ‘தைஇத் திங்கள் தண்கயம் போல்’ (புறநானூறு)
4. ‘தைஇத் திங்கள் தண்கயம் போல’ (அய்ங்குறுநூறு)
5. ‘தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ’ ‘(கலித்தொகை)

‘தைப் பிறந்தால் வழி பிறக்கும்’, ‘தை மழை நெய் மழை’ முதலான பழமொழிகள் இன்றும் வாழையடி வாழையாக வந்த வாய்மொழிப் பழமொழிகளாகும்.

இப்படி ஆண்டு, மாதம், நாள், கணக்குகளை மாற்றுவது சரியா? என்றால் வரலாற்றில் இத்தகைய மாற்றங்கள் காலத்துக்குக் காலம் நடந்தேறி இருக்கின்றன.

பூமி சூரியனைச் சுற்றி வர எடுக்கும் காலம் 365.242 நாள்களாகும். ஞாயிறு நாள்களைப் பண்டைய உரோமானியர் பத்து சம மாதங்களாக வகுத்தனர். அந்தப் பத்து மாதங்களுக்கு முறையே மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்தெம்பர் (சப்த-ஏழு), அக்தோபர் (அஷ்ட-எட்டு), நொவெம்பர் (நவ-ஒன்பது), டிசெம்பர் (தச-பத்து) என மன்னர்கள், தெய்வங்கள் பெயர்களைச் சூட்டினர். ஜூலியஸ் சீசர் காலத்தில் (கி.மு. 47 இல்) நாள்காட்டியில் மேலும் திருத்தங்களை மேற்கொண்டார். பத்து மாதங்கள் 12 மாதங்களாக மாற்றி அமைக்கப்பட்டது.

முதல்வர் ஜெயலலிதா தனது அறிக்கையில் தமிழ்ப் புத்தாண்டைச் சித்திரைக்கு மாற்றியதற்கு இன்னொரு காரணத்தையும் மொழிந்தார். அது ஆண்டின் தொடக்கம் வசந்தமாக (இளவேனில்) இருப்பதற்காகக் கணிக்கப்பட்டதே சித்திரைப் புத்தாண்டு எனக் கூறினார். இந்தக் காரணம் அவருக்கு வானியல் பற்றிய அறிவு பற்றாது என்பதையே காட்டுகிறது.

தென்னாட்டுப் பஞ்சாங்கக் கணிப்பாளர்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வராகமிகரர் வகுத்துத் தந்த காலக் கணிப்பை அப்படியே இன்றும் பின்பற்றி வருகின்றனர். அதனால் 24 நாள்கள் காலக் கணக்கில் பின்தங்கிப் போய்விட்டது.

எடுத்துக்காட்டாக நள ஆண்டு சித்திரை முதல் நாளை எடுத்துக் கொள்வோம். இந்தியாவின் மத்திய அரசினுடைய நாள்காட்டி அன்று சக வருடம் 1899, சைத்ர மாதம் 24 ஆம் நாள் என்று காட்டுகிறது.

அதாவது, பஞ்சாங்கக்காரர்களுக்கு சித்திரை மாதம் முதல் நாள், மத்திய அரசிற்கும் பெரும்பாலான வட இந்தியப் பஞ்சாங்கங்களின் கணக்கு முறைக்கும் அதே நாள் சித்திரை 24 ஆம் நாள் ஆக இருந்து வருகிறது. 1957 இல் இந்திய நடுவண் அரசினால் இலாகிரி என்பவரது தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையமே இந்த மாறுபாட்டை கணக்கில் எடுத்து புதிய நாள் காட்டியை உருவாக்கியது.

இதனால், பஞ்சாங்க தமிழ் ஆண்டுக் கணிப்பு முறையில் குறையிருப்பதை உணரலாம். இக்குறையை நூறு ஆண்டுகளுக்கு முன்பே சுப்பிரமணிய பாரதியார் பஞ்சாங்கம் என்னும் கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

“வசந்த விஷு (ஆண்டு) வானது மேஷ ராசியின் ஆரம்பத்தில் இருந்தபொழுது உத்தராயணம் தை மாதப் பிறப்பன்று தொடங்கியது. அதற்கு அப்பால் கணக்குத் தவறிப் போய்விட்டது. அய விஷுக்களின் சலனத்தை அறியாமலோ, அறிந்திருந்தும் கவனியாமலோ ஸம்வத்சரத்தின் பரிமாணத்தில் இருபதரை நிமிஷம் பிந்தி வருகின்றன. 80 வருஷத்திற்கு சரியான 71.5 ஆண்டுகள்) ஒரு நாள் பிந்தி விடும். மேற்படி நியமங்கள் ஏற்பட்டு இப்போது அநேக நூற்றாண்டுகளாகி விட்டன. அதனால் புண்ய காலங்கள் 20, 22 நாள் பிந்திப் போய் நியமங்கள் பிரத்தியக்ஷத்துக்கு விரோதமாகியிருக்கின்றன.” (பாரதியார் கட்டுரைகள் - பக்கம் 210-211)

தொல்பொருள் ஆய்வாளர் அய்ராவதம் மகாதேவன் சென்ற ஆண்டு நடந்த ஒரு வானியல் கருத்தரங்கில் பஞ்சாங்கத்தை உரிய காலத்தில் உரிய முறையில் திருத்தி அமைக்கத் தவறினால் பிற்காலத்தில் அயனப் பிறப்பு நாள்கள் தலைகீழாக மாறி, உத்தராயணப் புண்ணிய காலத்தைத் தட்சணாயப் பிறப்பு நாளென்று கொண்டாட நேரிடும் என எச்சரித்தார்.

எனவே, இந்தக் குளறுபடிகளை நீக்க வேண்டும் என்றால் தமிழ் ஆண்டுக் கணிப்பில் திருத்தம் செய்ய வேண்டும். அத்திருத்தம் சமய சார்பற்ற முறையில் அமைய வேண்டும். அதற்குத் திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கு முறையைப் பொங்கல் திருநாளில் தொடங்குவதே சாலவும் பொருத்தமாக இருக்கும்.

ஆக, பற்சக்கர வடிவத்தில் வடமொழியில் அருவருப்பான பெயர்களைக் கொண்ட 60 ஆண்டுகளைப் பின்பற்றினால் வரலாற்றைப் பதிவு செய்வதில் குழப்பம் ஏற்படும். அறுபதுக்கு மேல் எண்ண முடியாது. திருவள்ளுவர் பெயரிலுள்ள தொடர் ஆண்டு இந்தக் குழப்பத்தை அடியோடு நீக்க உதவுகிறது.

60 ஆண்டு சுழற்சி வராது. தொடர்ச்சியாக ஆண்டுகளைக் கணக்கிடலாம்.

தமிழர்கள் வரலாற்றில் முதல்முறையாக தங்களுக்கென ஒரு தொடராண்டு (சகாப்தம்) உருவாக்கப்பட்டுள்ளதென பெருமிதத்துடன் கூறும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழுக்கும் தமிழருக்கும் பெருமை சேர்க்கும் பொய்யில் புலவர் திருவள்ளுவருக்கு நினைவாக அமையும். தமிழரின் திருநாளான பொங்கல் விழா தனிச் சிறப்படையும்

ஒரு இனம் பல நூற்றாண்டுகளாகக் கடைப்பிடிக்கின்ற மரபு அந்த இனத்திற்குத் தீங்கிழைக்கிறது என்று கண்டால் அந்த மரபு ஒழிக்கப்பட வேண்டும் அல்லது மாற்றியமைக்கப்பட வேண்டும். ஆதலால் தைப் பொங்கல் நாளான தைத் திங்கள் முதல் நாள் - திருவள்ளுவர் பிறந்த நாள்தான் தமிழனுக்குரிய தமிழ் புத்தாண்டு நாளாகும்!

முதல்வர் ஜெயலலிதா விரும்பினால் சித்திரை முதல் நாள் இந்துக்களின் ஆண்டுப் பிறப்பு என்று கொண்டாடலாம். ஆனால், அது தமிழ்ப் புத்தாண்டு அல்ல.

சோதிடர்களைக் கேட்டால் சூரியன் புவியைச் சுற்றி வருவதாகவே சொல்வார்கள். அதன் அடிப்படையிலேயே சாதகம் கணிக்கப்படுகிறது. உண்மையில் புவி தான் சூரியனை சுற்றி வருகிறது. புவி தனது அச்சில் சுற்றும் அதே வேளை சூரியனையும் ஒரு நீள் வட்ட வடிவமான ஒடு பாதையில் சுற்றி வருகிறது. புவி தனது அச்சில் தன்னைத் தானே விநாடிக்கு 30 கி.மீ. (மணிக்கு 108,000 கி.மீ.) வேகத்தில் சுழல்கிறது. ஒரு முறை புவி சூரியனை சுற்றி வர 365.26 நாட்களை எடுக்கிறது.

சனவரி 3 இல் பூமி சூரியனுக்கு அண்மையில் (147.3 மில்லியன் கிமீ) காணப்படுகிறது. ஜூலை 4 இல் பூமி சூரியனுக்கு தொலைவில் (152.1 மில்லியன் கி.மீ.) காணப்படுகிறது. ஆனால், பருவ மாற்றத்துக்கு பூமியின் தொலைவு காரணமல்ல. அதேபோல் கோள்கள், நட்சத்திரங்களும் காரணமல்ல. புவியின் அச்சு ஒடு பாதையின் செங்குத்துக் கோட்டிற்கு 23.45 பாகை சரிந்து காணப்படுகிறது. இந்தச் சாய்வில் மாற்றம் ஏற்படுவதில்லை. இதுவே பருவ மாற்றங்களுக்குக் காரணமாகும்.

**பருவ மாற்றங்கள்**

வடகோளத்தில் செப்டம்பர் 22 அல்லது 23 (இலையுதிர் சமபகல் இரவு வடதுருவம் ஞாயிறுக்கு அண்மையாகவோ, தொலைவாகவோ இல்லாமல் இருக்கும். அதேபோல் வடகோளத்தில் மார்ச்சு 20 அல்லது 21 (வேனில் சமபகல் இரவு) வடதுருவம் ஞாயிறுக்கு அண்மையாகவோ தொலைவாகவோ இல்லாமல் இருக்கும். இந்தச் சமபகல் இரவு குறுக்குக் கோட்டில் எங்கிருந்தாலும் வேறுபடாது. இந்த வேனில் சமபகல் இரவு நாளே வடகோளத்தில் வேனில் காலத் தொடக்கமாகும். அஃதாவது மார்ச்சு 20 அல்லது 21 வேனில் காலத் தொடக்கமாகும்.

எனவே ஞாயிறு சித்திரை முதல் நாள் (ஏப்ரல் 13 அல்லது 14) மேஷ இராசியில் அசுவினி நட்சத்திரத்தில் புகுகிறது (வானியல் கணிப்பின்படி ஞாயிறு வான் நடுக்கோட்டைக் கடக்கும் நாள் ஏப்ரல் 19 ஆகும்) என்பது சரியான கணிப்பு. ஆனால் வேனில் (வசந்த) காலம் ஏப்ரல் 14 இல் தொடங்குகிறது என்பது பிழையான கணிப்பு. வேனில் காலம் மார்ச் 20 அல்லது 21 இல் தொடங்குகிறது என்பதுதான் சரி! மேலே சொல்லியவாறு மாறி வரும் பருவங்களுக்கும் கோள்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. புவி தனது அச்சில் அதன் ஒடு பாதைக்கு 23.45 பாகை சரிந்திருப்பதே பருவங்கள் ஏற்படுவதற்குக் காரணமாகும்.

சித்திரைப் புத்தாண்டுக்கு வானியல் அடிப்படை இருப்பது போலவே தை புத்தாண்டுக்கும் வானியல் அடிப்படை இருக்கிறது. தை முதல் நாள் சூரியன் தனது தென்திசை பயணத்தை முடித்துக் கொண்டு தனு இராசியில் இருந்து விலகி, வடதிசைப் பயணத்தை மகர இராசியில் இருந்து தொடங்குகிறது.

மேலே கூறியவாறு பூமி சூரியனை ஒரு நீள் வட்டத்தில் சுற்றி வருகிறது. இது நமது கண்களுக்கு சூரியன் புவியைச் சுற்றுவது போன்ற மாயையை ஏற்படுத்துகிறது. ஒரு வட்டத்துக்குத் தொடக்கமும் முடிவும் இல்லை. அதன் தொடக்கம் எந்தப் புள்ளியிலும் தொடங்கலாம். சூரியனின் வடதிசைப் பயணத்தில் தனு இராசியில் இருந்து மகர இராசிக்கு (பாகை 270) உட்புகும் நாளும் (மகர சங்கராந்தி) வானியல் அடிப்படையில் ஆனதுதான்.

புவி தனது அச்சில் சுழலும்போது சூரியன் - நிலா இரண்டின் ஈர்ப்பாலும் அதன் நடுபகுதி புடைத்து துருவங்கள் சிறிது தட்டையாக இருப்பதாலும் அதன் அச்சில் தளம்பல் ஏற்பட்டு சுற்றும் வேகம் குறைகிறது. இதனால் புவி தனது பாதையில் ஆண்டொன்றுக்கு 50.26 ஆர்க் வினாடிகள் (20 மணித்துளி 14 வினாடி) மேற்குத் திசையில் பின்னுக்குத் தள்ளப்படுகிறது.

4 ஆம் பக்கம்

# எல்லை மீட்புப் போராட்டம்: பெரியார்—ம.பொ.சி. கடிதத் தொடர்புகள் உணர்த்தும் உண்மைகள்!

தேவி குளம், பீர்மேடு பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று போராடிய ஒரே தலைவர் ம.பொ.சிவஞானம் (ம.பொ.சி.) என்றும், பெரியார், அதற்கு ஆதரவு தரவில்லை என்றும், சிலர் பேசவும், எழுதவும் புறப்பட்டுள்ளார்கள். 'திராவிட' கட்சிகள், மலையாளிகள், கன்னடர்கள், தெலுங்கர்களோடு சமரசம் செய்து கொண்டு தமிழர்களுக்கு துரோகம் செய்துவிட்டதாகவும் பேசி வருகிறார்கள். இந்த நிலையில் தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை (இப்போது கேரளாவில் அடங்கியுள்ள பகுதிகள்) தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்ற போராட்டத்தில் ம.பொ.சிக்கும் தனக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகளை விரிவாக விளக்கிப் பெரியார் 29.1.1956 ஆம் ஆண்டு வேலூரில் நிகழ்த்திய சொற்பொழிவை இங்கு வெளியிடுகிறோம். பெரியாரின் இந்த பேச்சு, பல உண்மைகளை வெளிச்சப்படுத்துகிறது.

தேவிகுளம், பீர்மேடு எல்லை மீட்புப் போராட்டம் தொடர்பாக தனக்கும் ம.பொ.சி.க்குமிடையே நடந்த கடிதத் தொடர்புகளை விளக்கி பெரியார் நிகழ்த்திய உரையை கடந்த இதழில் வெளியிட்டிருந்தோம். அந்த உரையின் தொடர்ச்சி.

– **ஆசிரியர்**

நான் அதற்கு திராவிட பார்லிமெண்டரிக் கட்சித் தலைவர் நண்பர் சுயம்பிரகாசம் ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரால் உள்ள கட்சிக்குத் தலைவராய் இருந்துவரும் சர்.பி.டி. ராஜன் மற்றும் கம்யூனிஸ்டு, சோஷ்யலிஸ்ட் தோழர்களைக் கேட்டு அவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றேன். அவர் அதற்கு "கண்ணீர்த் துளிகளைச் சேர்க்கலாமா" என்றார்.

நான் இப்போது, "அவர்கள் தேவையற்றவர்கள். அவர்களால் ஆகக் கூடியது ஒன்றும் கிடையாது. சும்மா கூட்டத்திற்காகிலும் ஆள் சேர்ப்பது சரியில்லை. கொஞ்சமாக இருந்தாலும் பொறுக்கி எடுத்த திறமைசாலிகளாக இருந்தால் போதும். உபயோகமற்றதுகளை எல்லாம் சேர்த்து கொண்டால் வீண் கயவாளித்தனத்துக்கு இடமாகிவிடும்" என்று சொல்லிவிட்டேன்.

பிறகு வீட்டிற்கு வந்தவுடன் தொலைபேசியில் நண்பர் ம.பொ.சி. என்னைக் கூப்பிட்டார். 'என்ன விசயம்' என்று கேட் டேன். அதற்குள் வீட்டிற்குப் போனவுடன் என்ன நினைத்துக் கொண்டாரோ தெரியவில்லை. "நான் கம்யூனிஸ்டுக்காரர்களைக் கேட்டேன், அவர்கள் மேலிடத்தை விசாரித்து சம்மதம் பெற்ற பின்பு தான் கலந்து கொள்வோம் என்றனர். சோஷியலிஸ்டுகள் சரி என்றார்கள். ஆனாலும் இவர்களும் மற்றத் தோழர்கள் சிலரும் எல்லைப் பிரச்னைக்கு மட்டும் தான் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்கிறார்கள். நீங்கள் தெரிவித்த மற்ற நான்கு கிளர்ச்சிக்கும் சம்மதிக்க மறுக்கிறார்கள். எனவே அவைகளைப் பற்றி யோசித்துத்தான் சொல்ல வேண்டும். உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

நான் அதற்கு, "நானும் யோசித்துத் தான் சொல்ல வேண்டும்" என்று கூறிவிட்டு இரவே சென்னையை விட்டு புறப்பட்டுவிட்டேன். பிறகு 21 ஆம் தேதி அன்றைய தினம் அவருடைய தந்தி எனக்குக் கிடைத்தது. அதில் "consulted Gurusamy; wire your consent as per my letter" என்பதாக இருந்தது இதைக் கண்டவுடன் நான் ஒன்றும் செய்வதற்கு முடியவில்லை. காரணம் "as per my letter" என்பதாகத் தந்தியில் கண்டிருக்கிறது. ஆனால் அவருடைய தபால் எனக்குக் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால்தான் நான் என்ன விஷயம் என்பதைப் புரிந்து கொண்டு மறு பதில் கொடுக்க முடியும். ஆனால் அவர் 20 ஆம் தேதி தான் கடிதம் எழுதியிருக்கிறார். அக் கடிதம் நியாயப்படி 21 ஆம் தேதி தான் எனக்கு கிடைத்திருக்க வேண்டும். ஆனால் 22 ஆம் தேதி தான் கிடைத்தது. இந்த ஒழுங்கில் அந்தக் கடிதத்திற்கு இரண்டனா ஸ்டாம்பு அதிகம் ஒட்டி 'எக்ஸ்பிரஸ்' தபாலில் அனுப்பியிருக்கிறார்.

தபால் துறையின் லட்சணம் அப்படியிருக்கிறது. இப்படி ஒரு நாள் தாமதித்ததுகூடப் பெரிதல்ல. என்னுடைய தபால்களை எத்தனையோ - அதுவும் 'எக்ஸ்பிரஸ்' தபாலில் அனுப்பப்பட்டவைகளை தபால் பெட்டிகள் விழுங்கிவிட்டனவோ தெரியவில்லை. அப்படி அதிக தபால்கள் இன்னமும் எனக்கு அனுப்புவது வந்து சேருவதும் இல்லை.

அப்படிப்பட்ட நிலையில் நண்பர் ம.பொ.சி. 20 ஆம் தேதி அனுப்பிய எக்ஸ்பிரஸ் கடிதம் எனக்கு 22 ஆம் தேதி வந்து சேர்ந்தது. அவர் 20 ஆம் தேதி எழுதினார்என்பதற்கும் எனக்கு 22 ஆம் தேதி தபால் கிடைத்தது என்பதற்கும் தபால் உறையிலேயே தபால் ஆபிசின் முத்திரை இருக்கிறது. எனவே, நான் 21 ஆம் தேதி தந்தியைக் கண்டவுடன் ஒன்றும் புரியாமல் திகைத்து 'ட்ரங்கால்' மூலமாக நண்பர் குருசாமியுடன் பேசுவதற்கு சென்றேன். ஆனால் கூப்பிட்டு விசாரித்தவுடன் அன்றைய தினம் அவர் திருவத்திபுரம் போய்விட்டார் என்பதாக கூறிவிட்டார்கள். பிறகு நான் நண்பர் ம.பொ.சி.க்குத் தந்தி மூலமாக "wire received letter not received" என்பதாக தந்தி கொடுத்துவிட்டேன். "உங்க கடிதம் கிடைக்காததால் நான் விஷயம் என்ன என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை" என்று கூறி, மேலும் நான் அவரிடம் நேரில் பேசிய மேற்குறிப்பிட்ட அய்ந்து பிரச்சினைகளை பற்றியும் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்று கூறினேன்.

அவர் அதற்கு, "நான் கடிதத்தில் எழுதியுள்ளது என்னவென்றால், 1. தமிழக எல்லைப் பகுதி, 2. தமிழகம் என்று பெயரிடுவது 3. இந்தி திணிப்பை எதிர்ப்பது ஆக இந்த மூன்றுக்கு மட்டும் போராட்டம் துவங்கத் திட்டம் இடப்பட்டிருக்கிறது. அதற்கான அழைப்பு நகலையும் அனுப்பி இருக்கிறேன். அதைப் பார்த்துக் கையெழுத்திட்டு அனுப்பினால் அதன்படி அச்சடித்து எல்லோருக்கும் அனுப்பி விடுகிறேன்" என்று கூறினார்.

நான், "அய்ந்து போராட்டங்களுக்குச் சொன்னேன். மூன்றை மட்டும் குறிப்பிட்டால் போதாது" என்றும் கூறினேன். பிறகு, "இதனை விவரிக்க இன்று தங்களுக்கு தபால் எழுதுகிறேன். நாளைக்கு என் தபாலைப் பார்த்துவிட்டு விவரம் தெரிவியுங்கள்" என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அன்றைக்கே ட்ரங்காலில் பேசியவைகளை உறுதிப்படுத்த கடிதத்தின் மூலம் விவரமாக அய்ந்து பிரச்னைகளையும் எழுதி அவருக்கு ஒரு கடிதமும் அதே கடிதத்தின் நகல் ஒன்றை நண்பர் குருசாமிக் கும், மற்றொரு நகலை 'விடுதலை' அலுவலகத்திற்கும் அனுப்பி, அவைகளை நண்பர் ம.பொ.சி.யிடம் சேர்க்கும்படி எழுதியிருந்தேன். ஏன் மூன்று கடிதங்களை மூன்று பேருக்கும் அனுப்பினேன் என்றால், ஏதாவது ஒன்றாவது போய்ச் சேரும் என்பதற்கே ஆகும். தபால் ஆபீசில் தபால்களை சரியானபடி போய்ச் சேருவதில்லை என்ற பெரிய நியூஸென்ஸுக்காக, இப்படி அனுப்பினேன். ஆனால் மூன்றும் போய்ச் சேர்ந்துவிட்டன.

அன்றைய தினம், அதாவது 22 ஆம் தேதிதான் எனக்கு நண்பர் ம.பொ.சி.யின் கடிதம் கிடைத்தது. அதில் அவர் எழுதியிருந்ததாவது, "தாங்கள் 19.1.1956 இல் என்னிடம் கூறிய மூன்று விஷயங்களையும் சேர்த்து தலைவர்களுக்கு சர்வ கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு அனுப்ப முடிவு செய்துள்ளேன். அவை 1. தமிழக எல்லைப் பகுதி. 2. தமிழகம் என்று பெயரிடுவது 3. இந்தி திணிப்பை எதிர்ப்பது ஆகும்."

அழைப்பு நகல் ஒன்றை இத்துடன் இணைத்துள்ளேன். அதை தாங்கள் கையொப்பமிட்டு மறு தபாலில் அச்சிட்டு எல்லோருக்கும் அனுப்பி விடுகிறேன். இந்த அழைப்பில் "கண்ணீர் துளி" சார்பில் கையெழுத்துப் போடுவது பற்றி தங்கள் கருத்தறிய விருப்பம். கூட்ட இடமும் நேரமும் இன்னமும் நிச்சயிக்கவில்லை. தாங்கள் ஏதேனும் யோசனை சொன்னால் நலம்" இப்படி எழுதி இருந்தது.

இதில் மூன்று விஷயங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். நான் அவரிடம் நேரில் கூறியவை அய்ந்து விஷயங்கள். ஆனால் இரண்டு விஷயங்களை விழுங்கிவிட்டு மூன்று விஷயங்கள் என்பதாக மட்டும் குறிப்பிட்டிருந்தார். அவர் அனுப்பி இருந்த அழைப்பு நகலில் பின்கண்டவாறு கண்டிருந்தது.

அன்புடையீர் வணக்கம்.

திரு-கொச்சியிலுள்ள தமிழ்ப் பகுதிகள் விஷயத்தில் மத்திய அரசாங்கம் செய்துள்ள நேர்மையற்ற முடிவைத் தாங்கள் அறிவீர்கள். மற்றும் சென்னை ஆந்திர எல்லைப் பிரச்னையில் எல்லைக் கமிஷன் அனுப்பும்படி சென்னை அரசாங்கம் கோரியிருந்ததையும், மத்திய அரசு அலட்சியப் படுத்தியிருக்கிறது. தமிழ்ப் பகுதிகள் மட்டுமே கொண்டு அமையவிருக்கும் தனி ராஜ்யத்திற்கு தமிழகம் என்று பெயரிடுமாறு தமிழக மக்கள் கோரி வந்ததும் இதுவரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவற்றோடு தமிழ்நாட்டு மக்கள் மீது அரசியல் ரீதியாக இந்தியைத் திணிக்கவும் மத்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. ஆகவே மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டுக்கு இழைத்துள்ள இந்த அநீதிகளை எதிர்த்து கிளர்ச்சி செய்ய தமிழர்கள் எல்லோரும் கட்சி பேதமின்றி ஒத்துழைக்க வேண்டுமென்று இதில் கையொப்பமிட்டுள்ள நாங்கள் கருதுகின்றோம். கிளர்ச்சி நடத்துவதற்கு பொதுவானதொரு வேலைத் திட்டம் அவசியமாகிறது; ஆகவே இதுபற்றி ஆலோசிக்க எல்லாக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்று ஜனவரி 24 ஆம் தேதி அன்று.... மணிக்கு... இடத்தில் கூட்டி இருக்கிறோம். தாங்கள் தவறாமல் வந்து கூட்டத்தில் கலந்து கொண்டு நடவடிக்கைகளில் ஒத்துழைக்கக் கோருகிறோம்.

ம.பொசிவஞானம்

இப்படி எழுதப்பட்டிருந்தது.

இதில் கூட்டம் நடைபெறும் இடமும் நேரமும் குறிப்பிடாமல் அந்த இடம் காலியாக இருக்கிறது. காரணம் அதை என்னைப் பூர்த்தி செய்து அனுப்பும்படி எழுதப் பட்டிருந்தது. இதில் 5 பேர்களின் கையெழுத்திற்காக உள்ள இடத்தில் முதலாவது எனக்கு காலியாக விடப்பட்டு, இரண்டாவது இடத்தில் நண்பர் ம.பொ.சி. கையெழுத்திட்டிருக்கிறார்.

இன்றைக்கும் முதல் நாள் எனக்குக் கிடைத்த நண்பர் குருசாமியின் கடிதத்திலும் இதைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதாவது இன்று காலை 9 மணிக்கு திரு.ம.பொ.சி. அவர்கள் தாமாகவே இங்கு வீட்டுக்கு வந்தார். தனிமையிலேயே வந்தார். முடிவு என்ன என்று கேட்டார்.

"எல்லா பிரச்னைகளையும் கலந்து போராடினால் தான் பெரியார் அவர்கள் உடன்படுவார்கள்" என்று விளக்கிக் கூறி, நேற்று டைப் அடிக்கப்பட்ட நம் கிளர்ச்சித் திட்டத்தை அவர் கையில் கொடுத்து, அதைப் படித்து விளக்கிக் கூறினேன். தமக்கு ஆட்சேபனை இல்லை என்றும் மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்றும் கூறி விட்டு, 24 ஆம் தேதியன்று ஆலோசனைக் குழு கூட்டி அதில் விவாதித்து முடிவு செய்யலாம் என்றும், கம்யூனிஸ்ட் கட்சியும், க.து. கட்சியும் இக்கூட்டுக் கிளர்ச்சிக்கு வருவதாக நேற்றிரவே ஒப்புக் கொண்டதாகவும் தெரிவித்தார்.... பிறகு திரு.ம.பொ.சி. தம் கையெழுத்துடன் பொதுப்படையாக இந்திய சர்க்கார் தமிழருக்கு இழைத்துள்ள தீங்குகளை எதிர்த்துப் போராடுவதற்காக என்று காரணம் காட்டி ஒரு அழைப்பு வேண்டுகோள். எல்லா முக்கியத் தலைவர்களுக்கும் விடுப்பதாகவும் அதில் தங்கள் கையெழுத்திடச் செய்வதற்காக இன்றே திருச்சிக்கு அனுப்புவதாகவும்........ சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்..... இதைக் கண்டவுடன், நான் அவர் க.துக்கள் சார்பில் கையெழுத்திட என் சம்மதத்தை நண்பர் ம.பொ.சி. கேட்டது. க.துக்களைக் கலந்து ஆலோசித்து அவர்கள் சம்மதம் பெற்று வைத்துக் கொண்ட பிறகுதான் கேட்டிருக்கிறார்.

நான் 21 ஆம் தேதி எழுதிய கடிதத்தை நண்பர் ம.பொ.சி. பார்த்துவிட்டு அதற்கு பதில் எழுதிய கடிதத்தில் எழுதியிருந்ததாவது:

"19.1.1956 இல் நாம் சென்னையில் சந்தித்தபோது, எல்லைப் போராட்டத்தோடு, இந்தித் திணிப்பு

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# கழக புதிய வெளியீடுகள்: திருச்சியில் அறிமுகம்

திருச்சி மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக 26.12.2011 மாலை 6 மணிக்கு திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகிலுள்ள அய்க்கப் அரங்கத்தில் பார்ப்பன - இந்திய தேசியத்தை பயன்படுத்தி மலையாளிகளின் துரோகம் 1. தமிழீழம் 2. முல்லைப் பெரியாறு என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்டத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். முத்து தலைமையேற்றார். இந்திய அரசியல் சட்ட எரிப்பு வீரர்கள் முத்துச்செழியன், இளந்தாடி துரைராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் கந்தவேல் குமார் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

தொடர்ந்து கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய ‘விடுதலைப் புலிகள் மீதான அவதூறுகளுக்கு மறுப்பு’, ‘அரசியல் தரகர் சுப்பிரமணியசாமி’ என்ற நூல்களை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் ரொகையா வெளியிட, விடுதலை சிறுத்தைக் கட்சி மாவட்ட செயலாளர் தமிழாதன், புதிய தமிழகம் மாவட்டச் செயலாளர் சங்கர், ஆதித் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் திராவிடன் பெற்றுக் கொண்டனர்.

இறுதியாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் விரிவான ஒரு கருத்துரையை வழங்கினார். மாவட்ட அமைப்பாளர் ஆரோக்கியசாமி நன்றியுரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட இணைச் செயலாளர் புதியவன், மாவட்ட பொருளாளர் மனோகரன், திருவரங்கம் நகரச் செயலாளர் அசோக், தாமரைக் கண்ணன், தோழர்கள் ஜெகநாதன், அபிமன்னன், பழனி, பொன்னுசாமி, அரியலூர் மாவட்ட அமைப்பாளர் பகுத்தறிவாளன், கரூர் மாவட்டச் செயலாளர் காமராஜ், தமிழ்நாடு மாணவர் கழக தோழர்களும் மற்றும் பல்வேறு இயக்கங்களை சார்ந்த தோழர்களும், பொது மக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை குணா தொகுத்து வழங்கினார்.

## ‘பெல்’ தங்கராசுவை நேரில் சந்தித்து தோழர்கள் நலம் விசாரித்தனர்

உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்துவரும் திருச்சி தோழர் ‘பெல்’ தங்கராசு அவர்களை தூவாக்குடியிலுள்ள அவரது இல்லத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மாவட்ட இணைச் செயலாளர் புதியவன், தாமரைக்கண்ணன், குணா, டாக்டர் தமிழ்ச்சுடர் ஆகியோர் 26.12.2011 அன்று நேரில் சந்தித்து உடல்நலம் விசாரித்தனர். பெல். தங்கராசு நலம் பெற்று வருகிறார்.

## அயன்புரம் தினகரன்–ஜெயந்தி இணையரின் நன்கொடை

கழக இணையர்கள் அயன்புரம் என்.தினகரன் - ஜெயந்தி ஆகியோரின் திருமண நாளான ஜனவரி 7 ஆம் தேதி கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து கழக ஏட்டின் வளர்ச்சிக்கு ரூ.10,000 நன்கொடை வழங்கினர். கழகத் தோழர் தினகரன், இப்போது அங்கோலா நாட்டில் பணிபுரிந்து வருகிறார். விடுமுறையில் தாயகம் திரும்பியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

*எதிர்ப்பையும் சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்தினீர்கள். அதிலுள்ள சங்கடங்களை நான் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வந்தேன்; என்றாலும் தாங்கள் கூறுவதையும் மற்ற தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல சம்மதித்தேன். நேற்று பல முக்கியஸ்தர்களை வரவழைத்து ஆலோசனை நடத்தினேன். தங்கள் கடிதமும் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. தமிழக எல்லைப் பகுதிகள் பற்றிய பிரச்னையில் மத்திய அரசாங்கத்தின் முடிவை எதிர்த்து எல்லோரும் ஒன்றுபட்டுக் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்ற கொள்கை எல்லோராலும் ஏற்கப்பட்டது. அதுபற்றி மேலும் ஆலோசிக்க ஜனவரி 27 ஆம் தேதி தாங்கள் சென்னையில் இருக்கும் தருணத்தில் மற்ற ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து, எல்லோரும் ஒன்று கூடி ஆலோசிக்க முடிவு செய்துள்ளோம். தாங்கள் அவசியம் அன்றைய கூட்டத்தில் கலந்து கொள்வதற்கேற்ப சென்னைக்கு வரக் கோருகிறேன்” என்பதாக எழுதப்பட்டிந்தது.*

நண்பர் குருசாமி என்னுடைய 21 ஆம் தேதி கடிதத்தைப் பார்த்துவிட்டு பதில் எழுதியதில், “தங்கள் கடிதங்கள் (விடுதலை ஆபீசுக்கு அனுப்பினதும்) ஆக இரண்டும் கிடைத்தன. கடிதத்தை ஊன்றிப் படித்தேன். திரு. ம.பொ.சி. அவர்களை போன் மூலம் கேட்டேன். தனக்கும் கடிதம் வந்திருப்பதாகக் கூறினார். தம் கட்சிக்காரர் ஒருவர் வீட்டில் 4-5 பேர் கம்யூனிஸ்ட் கட்சி க.து.க்கள் திரு.அந்தோணிப் பிள்ளை ஆகியோருடன் இன்று மாலை 4 மணிக்கு கலந்து பேச வேண்டுமென்று என்னை அழைத்தார். தாங்கள் இல்லாதபடி எந்த ஆலோசனைக் குழுவும் தேவை இல்லை - பயன்படாது என்று கருதி வர இயலாமையைக் கூறி விட்டேன். பத்திரிகையில் தங்கள் கடிதத்தை வெளியிடலாமா என்று கேட்டேன். நேரில் வந்து பதில் தருவதாகக் கூறினார். இந்நேரம் வரையில் வரவில்லை... வேண்டுகோள் அறிக்கையில் க.து. கையெழுத்துத் தேவையில்லை என்று இருமுறை காலையிலும் மாலையிலும் கூறினேன். ஒப்புக் கொண்டார். அவர்களும் ஒப்புக் கொண்டதாகக் கூறினார். தாங்கள் 24 ஆம் தேதி இங்கு வர முடியாதென்று அவருக்கு டெலிபோனில் கூறியதாகத் தெரிவித்தார்.... நம்முடைய கருத்து மத்திய சர்க்காரை எதிர்ப்பது என்பது. ஆனால் இவர்களுடைய கருத்து திரு.காமராசர் ஆட்சிக்கு தொல்லை கொடுப்பதற்கு நம்மைப் பயன்படுத்த வேண்டும் என்பது... இன்று மாலை 5-6க்கு போன் செய்தேன். தங்கள கடிதத்தை வெளியிட வேண்டாம் என்று கூறிவிட்டார். 27 ஆம் தேதி பிற்பகல் 4 மணிக்கு ஆலோசனைக் குழு கூட்டுவதென்றும் தங்களுக்காகவே இத் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றும் தங்களை இன்றி எந்த முடிவும் செய்வதற்கு இல்லை என்றும் கூறினார்....”. இப்படியாக அவருடைய கடிதத்தில் கண்டிருந்தது.

# சூலூர் தோழர்கள் தயாரித்துள்ள குறும்படம் ‘துக்கம்’

சூலூர் ஒன்றியக் கழகம் சார்பாக தந்தை பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம் 24.12.2011 மாலை 6 மணியளவில் கண்ணம்பாளையம் தேர்நிலை திடலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழகத் தோழர்கள் எழுதி இயக்கி நடித்த ‘துக்கம்’ குறும்படம் வெளியிடப்பட்டது. நிகழ்ச்சிக்கு வெ.அ.நாராயணமூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட துணைத் தலைவர் பன்னீர்செல்வம் வரவேற்புரையாற்றினார். அ.ப.சிவா குறும்படத்தைப் பற்றி அறிமுகவுரையாற்றினார்.

குறும்படத்தை எழுத்தாளர் வே.மதிமாறன் வெளியிட தமிழ்நாடு மாணவர் கழகத்தினுடைய மாநில அமைப்பாளர் பன்னீர்செல்வம், திருப்பூர் மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, கண்ணம்பாளையம் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் மௌனசாமி, 6வது வார்டு உறுப்பினர் இராமத்தாள் கணேசன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். நிகழ்ச்சியின் நடுவில் ‘துக்கம்’ குறும்படம் திரையிடப்பட்டது.

பெரும்பாலான மக்கள் குறும்படத்தைப் பார்த்தனர். மேற்கு மண்டலத்தில் நிலவும் தீண்டாமையின் ஒரு வடிவத்தை சுட்டிக்காட்டும் இந்தப் படம் பொது மக்களிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. தோழர்கள் கா.சு.நாகராசன், நீலவேந்தன், வே.மதிமாறன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் மா. பார்த்திபன் நன்றி கூறினார்.

**தோழர்களின் கவனத்துக்கு....**

தமிழர் விடுதலை இயக்கத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் நீலவேந்தன் எழுதிய ‘துக்க வீடு’ என்ற கவிதை, ‘வெண்மணி’ என்ற இதழில் வெளியானது. இக் கவிதை யின் தழுவலாக அ.ப.சிவா, ‘துக்கம்’ என்ற கதையை உருவாக்கி குறும்படமாக எடுக்க முடிவு செய்தார். இதில் சூலூர் வீரமணி, சூலூர் ஒன்றியக் கழகத் தோழர்கள் மற்றும் இராவத்தூர் பொது மக்கள் ஆகியோர் நடித்துள்ளனர். இராவத்தூரைக் கதைக் களமாகக் கொண்டு எடுக்கப்பட்டுள்ளது. குறும்படத்தின் படத் தொகுப்பு - இசைக் கோர்வை கி. இளவரசன், ஒளிப்பதிவு பாண்டியராசன், இயக்கம் அ.ப. சிவா. இது முழுக்க முழுக்க சூலூர் ஒன்றியத் தோழர்கள் தயாரித்து இயக்கிய படமாகும். இப்படத்தை தோழர்கள் இணையத்தில் காண முகவரி : www/ .youtube.com/watch?v=rl3k9-3Gd14

தோழர் அ.ப.சிவா, கருந்திணை இல்லம், 5/240 கிழக்கு அரசூர், அரசூர் அஞ்சல், கோவை - 641 407

ஏ. ஜோதி வேலு, எண்.1, வள்ளிய தெரு, பொறையாறு அஞ்சல், தரங்கம்பாடி வட்டம், நாகை-609 307.

**சூலூரில் கருத்தரங்கம்**

சூலூர் ஒன்றிய பெரியார் திராவிடர் கழகம் மற்றும் தமிழர் விடுதலை இயக்கத்தின் சார்பில் டிசம்பர் 25 இல் மனுதர்ம எரிப்பு நாள் மற்றும் கீழ்வெண்மணி படுகொலை நாளில் சமூகநீதிக் கருத்தரங்கம் வே. ஆனைமுத்து அவைக் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு அ.ப. சிவா தலைமை தாங்கினார். பொறியாளர் ந. பன்னீர் செல்வம் தொடக்கவுரையாற்றினார். வே. மதி மாறன், ‘பெரியார்-அம்பேத்கர் இன்றைய தேவை’ என்ற தலைப்பில் மூன்று மணி நேரம் பேசினார். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு தோழர்களின் கேள்விகளுக்கு பதி லளித்தார். நிகழ்ச்சியில் 50க்கும் மேற் பட்ட தோழர்கள் கலந்து கொண்டு கருத்துகளைக் கேட்டனர். இறுதியாக தோழர் பேரறிவாளன் நன்றி கூறினார்.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

71.5 ஆண்டுகளில் இந்த வேறுபாடு 1 பாகை (ஒருநாள்) ஆகக் கூடிவிடும். இப்படி பின்னுக்குத் தள்ளப்படுவதை, ஆண்டைக் கணிக்கும் இந்திய சோதிடர்கள் கணக்கில் எடுப்பதில்லை. வானியலாளர்களும் மேற்குலக சோதிடர்களும் இதை கணக்கில் எடுக்கிறார்கள். இந்திய பஞ்சாங்கங்களில் கடந்த 2000 ஆண்டுகளாக ஏற்பட்டிருக்கும் இந்த கால வேறுபாடு திருத்தப்படவில்லை.

இதனால் பருவ காலங்கள் பிந்திப் போகின்றன. இந்த வேறுபாட்டைத் திருத்தி இருந்தால் சித்திரைப் புத்தாண்டு வேனில் தொடங்கும் மார்ச்சு 20-21 ஆம் நாள் கொண்டாடப்பட்டிருக்கும். இது போலவே ஏனைய விழாக்கள் பிழையான திகதியில் கொண்டாடப்படுகின்றன. இன்னும் 11.232 ஆண்டுகளில் புவியின் சம பகல் இரவு பின்னேகல் காரணமாக வேனில் சமபகல் இரவு துலா இராசியில் 0 பாகையில் சூரியன் புகும். அதாவது மேற்குல சோதிடத்தில் மார்ச்சு 20-21 இல் மேஷ இராசியில் சூரியன் புகும்போது இந்திய சோதிடத்தில் அதே சூரியன் தலா இராசியில் புகும். இரண்டும் எதிரெதிராக 180 பாகையில் இருக்கும்! பனி காலம் கோடை காலமாகவும் கோடைகாலம் பனிக் காலமாகவும் (வடகோளத்தில்) மாறி விடும்!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 12th January 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2043 ஜன. 19, 2012 புரட்சி 11 முழக்கம் 01 விலை: ரூ.2.50

# பார்ப்பனருக்கு தனி மின்சார சுடுகாடா?

## கோவையில் கழகம் களம் இறங்குகிறது

'கிருஷ்ணா ஸ்வீட்ஸ்' என்ற பெயரில் தமிழகம் முழுதும் இனிப்புக் கடைகளை நடத்தி வரும் பார்ப்பன நிறுவனம், வணிகத்தோடு பார்ப்பனியத்தை பரப்புவதிலும் தீவிரம் காட்டி வருகிறது. கோவையில் இந்த பார்ப்பன நிறுவனம் ஒரு வாரம் முழுதும் "எப்போ வருவார்?" என்ற தலைப்பில் "கடவுள்" வருகையை முன் வைத்து மதப் பிரச்சாரர்களை அழைத்து பார்ப்பனியத்தைப் பரப்பி வருகிறது. இதற்கு பதிலடி தரும் வகையில் 'எப்போதும் வர மாட்டார்' என்ற தலைப்பில் கோவை பெரியார் திராவிடர் கழகம், 'பகுத்தறிவு திருவிழா' நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. 8.1.2012 அன்ற மாலை கோவை அண்ணாமலை ஓட்டல் அரங்கில் நடந்த இந்த நிகழ்வுக்கு கழகப் பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன் தலைமை தாங்கினார்.

'ஆண்டவன் அறிவியலைப் பரப்ப வர மாட்டார்' என்ற தலைப்பில் சிற்பி ராசனும், 'பெண்ணடிமையை ஒழிக்க வர மாட்டார்' என்ற தலைப்பில் பேராசிரியர் டி. உருக்கு மணியும், 'சாதி தீண்டாமையை ஒழிக்க முன் வரமாட்டார்' என்ற தலைப்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனும் உரையாற்றினர். பரபரப்பான இந்த நிகழ்வுக்கு ஏராளமான இளைஞர்கள், ஆர்வலர்கள் திரண்டு வந்திருந்தனர். அரங்கம் நிரம்பி வழிந்தது. 'தினத்தந்தி' நாளேட்டில் இந்த நிகழ்ச்சி கழக சார்பில் விளம்பரமாக தரப்பட்டிருந்தது. 'கிருஷ்ணா ஸ்வீட் நிறுவனம்' கோவை புறநகர்ப் பகுதியில் மின்சார சுடுகாடு ஒன்றை அமைத்துள்ளது. இங்கு பார்ப்பனர் பிணங்கள் மட்டுமே எரிப்பதற்கு அனுமதிக்கப் படுவதை சுட்டிக்காட்டிய கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், அதை எதிர்த்து விரைவில் பெரியார் திராவிடர் கழகம் போராட்டக் களம் அமைக்கும் என்று பலத்த கரவொலிக்கிடையே தெரிவித்தார்.

"சாதிக்கொரு சுடுகாடு என்ற சாதிய அவமானத்தை ஒழிப்பதற்கே மின்சார சுடுகாடு வந்தது. ஆனால், மின்சார சுடுகாட்டையும் பார்ப்பனர்கள் வர்ணாஸ்ரமத்தைக் காப்பதற்கே பயன்படுத்துகிறார்கள். நாங்கள் சூத்திரர்கள் பிணங்களை அங்கே கொண்டு போய் எரிக்கச் சொல்வோம்; பார்ப்பன இறுமாப்பை நெருப்பில் பொசுக்குவோம்" என்று பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தெரிவித்தார்.

பார்ப்பனியத்தை எதிர்க்கும் மானமுள்ள தமிழர்களும், கிறிஸ்துவ, முஸ்லீம் சமூகத்தினரும் பார்ப்பனியத்தை உயர்த்திப் பிடிக்கும், 'கிருஷ்ணா ஸ்வீட்' நிறுவனத்திடம் இனிப்பு வாங்க மாட்டோம் என்று புறக்கணிக்க வேண்டும் என்று கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வேண்டுகோள் விடுத்தபோது கூட்டத்தினர் பலத்த கரவொலி செய்து வரவேற்றனர்.

# இந்திய தேசியத்தின் முகமூடியைத் கிழித்து புதுவையில் நாள் முழுதும் பரப்புரை



*கூடங்குளம் அணுஉலை: மின்சாரம் தயாரிக்கவா? அணுகுண்டு தயாரிக்கவா? அல்லது தமிழர்களைச் சாவு கொடுக்கவா?*

*முல்லைப் பெரியாறு : மலையாளிகள் மட்டுமே குற்றவாளிகள் அல்ல! தமிழர்களின் முதன்மை எதிரியே இந்திய அரசு தான்!*

- எனும் கருத்துக்களை விளக்கிப் பரப்புரைப் பயணம் 22.12.2011 அன்று புதுச்சேரி மாநிலப் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் லோகு அய்யப்பன் தலைமையில் நடைபெற்றது.

பரப்புரைப் பயணம் காலை ஒன்பது மணியளவில் புதுவை அண்ணா சிலையருகே துவங்கியது. பரப்புரைப் பயணத்தின்போது கூடங்குளத்தில் அணுமின் நிலையம் திறந்தால் ஏற்படும் தீமைகளையும், முல்லைப் பெரியாறு அணையை உடைக்க முயற்சிக்கும் மலையாளிகளின் அடாவடித்தனத்தைக் கண்டிக்காத உச்சநீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்ற வக்கற்ற இந்தியாவைக் கண்டித்து கருத்துரை வழங்கப்பட்டது.

நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் தங்கள் ஈருருளியில் வந்து பரப்புரைப் பயணத்தில் கலந்து கொண்டனர். அதில் நான்கு பேர் பெண்கள் ஆவர். பரப்புரைப் பயணத்தின்போது முல்லைப் பெரியாறு உரிமையை மீட்டெடுத்தல் மற்றும் கூடங்குளம் அணு உலையின் ஆபத்தை விளக்கும் துண்டறிக்கை பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. கூடங்குளம் அணுமின் நிலையத்தின் ஆபத்தை விளக்கித் தோழர் முத்துக்கிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்ட நூல் குறைந்த விலைக்கு (ரூ.10) விற்கப்பட்டது. புதுச்சேரி வாழ் மக்கள் பரப்புரையினை ஆர்வமுடன் கேட்டதுடன் நூலையும் வாங்கிப் படித்தனர்.

பரப்புரையின்போது கூடங்குளம் அணுஉலையை மூடச் சொல்லியும், நெய்வேலி மின்சாரம் முழுவதையும் தமிழ் நாட்டிற்கே வழங்கக் கோரியும், முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை அமுல்படுத்தக் கோரியும், இந்தியாவின் தமிழர் விரோதப் போக்கினைக் கண்டித்தும், முல்லைப் பெரியாறு அணையை உடைத்தால் இந்தியா உடையும் என்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

பரப்புரைப் பயணம் புதுவை சாரத்திலுள்ள ஜீவா சதுக்கத்தில் நிறைவுற்றது. நிறைவுரையில் தோழமை அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் பலர் உரையாற்றினர். இறுதியாக லோகு அய்யப்பன் உரையாற்றினார்.

குளிரையும் பொருட்படுத்தாமல் பொது மக்கள் உரைகளைக் கேட்டனர். பரப்புரை நிறைவடையும் போது இரவு பத்தே முக்கால் மணி ஆனது.

பரப்புரை நடைபெற்ற இடங்கள்:

காலை - அண்ணாசிலை, சின்ன மணிக்கூண்டு, காந்தி வீதி அமுத சுரபி, நாராயணன் கோவில் சமீபம், அண்ணா சாலையிலுள்ள ஆனந்தா இன் எதிரில், முத்தியால்பேட்டை மணிக்கூண்டு, முத்தியால்பேட்டை சந்தை.

மாலை - திலாசுப்பேட்டை, கொட்டுப்பாளையம், ராஜீவ் காந்தி சிலை அருகில், சண்முகாபுரம் மீன் சந்தை, மேட்டுப்பாளையம், மூலக்குளம், கம்பன் நகர், சாரம்.

# முல்லைப் பெரியாறு: வரலாற்றுப் பின்னணி

***முல்லைப் பெரியாறு அணையின் சுருக்கமான வரலாற்றுப் பின்னணி:***

முல்லைப் பெரியாறு அணைக்கு ஒரு சிறப்பு உண்டு. ஆசியா கண்டத்திலேயே ஒரு நதியை - வேறொரு பக்கம் - விவசாய நிலங்களை நோக்கி திருப்புவதற்காக கட்டப்பட்ட முதல் அணை இது தான்.

தமிழகத்தின் நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில், சிவகிரி என்ற சிகரப் பகுதியில் தோன்றுகிறது பெரியாறு. வழியில், 6 சிறிய ஆறுகளை இணைத்துக் கொண்டு கேரளாவில் முன்னூறு கி.மீ. தூரம் ஓடி கொச்சி அருகே அரபிக் கடலில் கலக்கிறது.

கேரளாவில் மட்டும் 244 கி.மீ. தூரம் பயணிக்கிறது. கேரளாவின் மின் தேவைகளில் 74 சதவீதம் பெரியாறு நீரின் பயன்பாட்டிலிருந்தே பெறப்படு கிறது.

சிவகிரியில் தோன்றும் பெரியாறு, 48 கி.மீ. தொலைவில் கடந்ததும் முல்லை என்ற இன்னொரு ஆற்றோடு இணைகிறது. மொத்தம் ஏழு நதிகளும் இணைந்து மழைக் காலங்களில் பெரும் வெள்ளத்தோடு அரபிக் கடலில் கலக்கிறது.

இது குறித்து ஆய்வு செய்த ஆங்கிலேயர்கள், இந்த நதிநீர் முழுமையும் கடலில் கலப்பதைத் தடுத்து, கிழக்கு பக்கமாகத் தடுத்து, கிழக்கு பக்கமாகத் திருப்பினால், தென் தமிழகம் விவசாய ரீதியாக பயன்பெறுமே என எண்ணினார்.

முல்லையும், பெரியாறும் சந்திக்கும் இடத்தில் அணை கட்டினால், மலையாளிகளுக்குச் சொந்தமான 8 ஆயிரம் ஏக்கர் நிலம் தண்ணீரில் மூழ்கும் என்பதால், திருவிதாங்கூர் சிற்றரசோடு ஒரு முறையான ஒப்பந்தம் போட்ட பிறகு அணையைக் கட்ட வேண்டும் என ஆங்கிலேய அதிகாரிகள் முடிவெடுத்தனர்.

அணை இருக்கும் பகுதி தமிழகப் பகுதிதான். என்றாலும் சிக்கலான எல்லைப் பகுதியாக இருப்பதால் எதிர்காலத்தில் பிரச்சினை வரக்கூடாது என்ற எண்ணத்தில் ஆங்கிலேய அரசு சென்னை மாகாண அரசுக்கும், திருவிதாங்கூர் அரசுக்கும் இடையில் ஒப்பந்தம் போட்டது. இதுதான் இப்போது பிரச்சினைக்கு மூலக் காரணமாகி விட்டது. இதன் அருகில்தான் பீர்மேடு, தேவிகுளம் போன்ற தமிழர்கள் நிறைந்த பகுதிகளும் உள்ளது. இதை இப்பொழுதும் மீட்டெடுக்க வேண்டுமென தமிழ் தேசியவாதிகள் முழங்குவது குறிப்பிடத்தக்கது.

## அணையின் வரலாறு

1815 ஆம் ஆண்டு கேப்டன் வார்ட்ஸ் என்பவர் இந்த அணையைக் கட்ட ஆய்வுகளை மேற் கொண்டார்.

1827 ஆம் ஆண்டு வருவாய்த் துறை வாரிய உறுப்பினராக இருந்த காட்சின் என்பவர்தான் இதற்கான திட்ட அறிக்கையை ஆங்கிலேய அரசிடம் சமர்ப்பித்தார்.

47 வருடங்களுக்குப் பிறகு 1874 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டு பொறியாளர் பென்னி குக்கிடம் இத்திட்டம் செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டது.

மோசமான அடர்ந்த - இருண்ட வனப் பகுதிகளில் யானை, சிங்கம், புலி, கரடி போன்ற விலங்குகளும், பாம்புகளும் நிறைந்த பகுதியில் அணை கட்டுவதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு வேலைகள் தொடங்கப்பட்டது.

மூன்றாண்டுகள் வேலை நடந்து கொண்டிருந்த போது, 1890 இல் ஒரு பெரும் வெள்ளம் ஏற்பட்டு அணை அடித்துச் செல்லப்பட்டது. சவாலான அப்பகுதியில் மீண்டும் அணை கட்ட நிதி கொடுக்க முடியாது என பிரிட்டிஷ் அரசு கூறிவிட்டது.

பென்னி குக், மனம் தளராமல் லண்டனுக்குச் சென்று, தன் சொத்துக்களை விற்றும், கடன் பெற்றும் பணிகளைத் தொடங்கினார். 9 ஆண்டுகள் அணையைக் கட்டினார். 1895 இல் முழுமையாக அணை கட்டி முடிக்கப்பட்டது. பென்னி குக்கின் தியாகமும், நேர்மையும் தமிழர்களின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது.

அணையில் நீர் தேங்குவதால் ஏற்படும் பாதிப்பால் 8 ஆயிரம் ஏக்கர் நிலம் மூழ்கும் அபாயம் குறித்தும் கவலைப்பட்ட ஆங்கிலேயர்கள் அதற்கும் மாற்று ஏற்பாடு செய்தனர். ஆங்கிலேயர்கள், திருவிதாங்கூர் சிற்றரசோடு முறையான ஒப்பந்தம் போட்டனர்.

இது 1886 அக்டோபர் 29 அன்று போடப் பட்டது. நீரில் மூழ்கும் ஏக்கர் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் 8 ஆயிரம் ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் நிர்ணயிக்கப் பட்டது.

அன்றைய சென்னை மாகாண அரசு, திருவிதாங்கூர் சிற்றரசுக்கு வருடந்தோறும் இத்தொகையை வழங்கவேண்டும் என்றும், அது பிரிட்டிஷ் நாணயமாக இருக்கவேண்டும் என்றும், இந்த ஒப்பந்தம் 999 வருடங்கள் நடைமுறையில் இருக்கும் என்றும் கையெழுத்தானது.

1955 இல் கேரள அரசு இந்த நட்ட ஈடு இன்றைய பொருளாதார மதிப்புக்கு மிகவும் குறைவு என்று கூறியதால், ஏக்கருக்கு 30 ரூபாய் வீதம் ஆண்டுக்கு 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாயாக தமிழகம் உயர்த்தியது. அது இன்றும் தொடர்கிறது.

**இடுக்கி அணையும் – சர்ச்சைகளும்**

1979 இல் முல்லைப் பெரியாறு அணையிலிருந்து வெளியாகும் நீரை தேக்கும் வகையில் கேரளம், இடுக்கியில் ஒரு அணையை கட்டியது. இது முல்லைப் பெரியாறு அணையைவிட பெரியதாகும்.

இடுக்கியில் அப்போது ஏற்பட்ட ஒரு பூகம்பத்தைக் காரணம் காட்டி அணையின் கொள்ளளவான 152 அடி உயரத்தை 136 அடியாக குறைக்க கேரள அரசு நிர்ப்பந்தித்தது.

இதுவே ஒரு திட்டமிடப்பட்ட சூழ்ச்சியாகும். கேரள அரசு எதிர்பார்த்தபடி இடுக்கி அணையில் மின்சாரம் தயாரிக்கும் அளவுக்கு தண்ணீர் கிடைக் காததால் கூடுதலாக தண்ணீரைப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் நாடகம் ஆடியது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 16 அடி குறைத்துவிட்டால் அந்த தண்ணீர் முழுவதும் இடுக்கி அணையில் சேமிக்கப்படும். அதன் மூலம் தாங்கள் எதிர்பார்க்கும் மின் உற்பத்தியைப் பெறலாம் என்பது தான் கேரளாவின் சூழ்ச்சியாகும்.

சர்ச்சை உருவானதால் இவ்விஷயத்தில் மத்திய அரசு தலையிட்டது. மத்திய அரசின் நீர்வளக் குழுமம், அணையை பலப்படுத்திவிட்டு பிறகு நீர்மட்டத்தை 145 அடியாக உயர்த்தலாம் என பரிந்துரைத்தது.

152 அடியிலிருந்து 136 அடியாகக் குறைக்கப்பட்ட பிறகு 16 அடி உயரமுள்ள அணையின் நீரை தந்திரமாக இடுக்கி அணையில் சேகரித்தது கேரளா. தமிழக அரசு, அணையை பலப்படுத்த முயற்சிகள் செய்யும் போதெல்லாம் கேரள அரசு தடுத்து வருகிறது.

16 அடி நீர் குறைக்கப்பட்டதால் நீரில் மூழ்கும் மலையாளிகளின் நிலம் 8 ஆயிரம் ஏக்கரிலிருந்து 4677 ஏக்கராக குறைந்து விட்டது. ஆனாலும் தமிழகம் 8 ஆயிரம் ஏக்கருக்கான ஒப்பந்தப் பணத்தை தொடர்ந்து வழங்கி வருகிறது.

**கேரளாவுக்கே லாபம்!**

16 அடி நீர் மட்டம் குறைந்ததால் 10.4 டி.எம்.சி. யிலிருந்து 6.4 டி.எம்.சி.யாக தண்ணீர் கொள்ளளவு குறைந்தது.

இதனால் தென் தமிழகத்தில் பயனடைந்த நிலங்களில் ஒன்றே கால் லட்சம் ஏக்கர் நிலம் தரிசாகியது. இப் பகுதியில் உற்பத்தியாகும் நெல், கரும்பு, காய்கறிகள் மற்றும் நிலத்தைச் சார்ந்து இருக்கும் ஆடு, மாடு, கோழி, முட்டை என அனைத்தும் கேரளாவுக்கே ஏற்றுமதியாகின. தெளிவாக சொல்வது எனில் முல்லைப் பெரியாறு அணை நீரால் பயன்படும் பாசனப் பகுதியின் உற்பத்திகள் யாவும் கேரள மக்களின் தேவைகளைத் தான் பூர்த்தி செய்தன. இதைக் கேரள அரசும், மலையாளிகளும் புரிந்து கொள்ள மறுப்பதுதான் வேதனை அளிக்கிறது.

முல்லைப் பெரியாறு அணையிலிருந்து தமிழகத்திற்கு நீர் வெளியேறும் குகைப் பகுதியில், நீரின் சுழற்சியில் 1955 இல் மின்சாரம் தயாரிக்கப்பட்டது. இப்போது 152 அடியிலிருந்து 136 அடியாக நீரின் கொள்ளளவு உயரம் குறைக்கப் பட்டதால், 140 மெகாவாட் மின் உற்பத்தி, 100 மெகாவாட்டாக குறைந்துவிட்டது. அதே நேரம் குறைக்கப்பட்ட 16 அடி நீரை இடுக்கி அணையில் தேக்கி வைத்து அங்கு மின்சார உற்பத்தி செய்து, அதை தமிழகத்திற்கு கேரள அரசு விற்கிறது.

மத்திய அரசின் நீர்வளக் குழுமம் அணையை ஆராய்ந்து, மராமத்துப் பணிகளை மேற்கொண்ட பிறகு 145 அடியாக உயர்த்தலாம் என்றது. தமிழகம் 26 கோடியை செலவு செய்து அணையைப் புதுப்பித்தது. மீண்டும் மீண்டும் கேரள அரசு சர்ச்சை செய்ததால் இப்பிரச்சினை உச்சநீதிமன்றம் சென்றது. உச்சநீதிமன்றம் கீழ்க்கண்ட உத்தரவுகளைப் பிறப்பித்தது.

1. அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக தமிழகம் உயர்த்திக் கொள்ளலாம்.
2. அணைக்கு அருகிலுள்ள பேபி அணையை பலப்படுத்த தமிழக அரசுக்கு கேரள அரசு ஒத்துழைப்பு தர வேண்டும். இப்பணிக்கு கேரள அரசும், அதிகாரிகளும் தொந்தரவு செய்யக் கூடாது.
3. அணை பலப்படுத்தப்பட்டதும் 152 அடிக்கு தண்ணீரை சேமிக்கலாம்.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவை ஏற்காத கேரள அரசு, சட்டமன்றத்தைக் கூட்டி, கேரளாவில் உள்ள 22 அணைகளின் நீர்த்தேக்க வரையறையில் உச்சநீதிமன்றங்களின் ஆணைகளோ, வேறு மாநில அரசுகளோ தலையிடக் கூடாது என்றும், கேரள அரசே இதைத் தீர்மானிக்கும் என்றும் சர்ச்சைக்குரிய சட்டத்திருத்தத்தை செய்தது.

உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற கேரளாவின் மனுவைத் தள்ளுபடி செய்த உச்சநீதிமன்றம், இரு மாநில முதல்வர்களையும் பேச்சு வார்த்தை நடத்த அறி வுறுத்தியது. அது தோல்வியில் முடிவடைந்ததால், ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்றை உச்சநீதிமன்றம் நியமித்தது. இக்குழு ஒரு வல்லுனர் குழுவைக் கொண்டு தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. அணை உடைந்தால் என்ன செய்வது?

இந்தியாவில் பூகம்பம் ஏற்படக் கூடிய பகுதிகள் 1, 2, 3, 4, 5 என பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 1 மற்றும் 2 மண்டலங்கள் மிக லேசான நிலநடுக்கம் மட்டுமே ஏற்படக்கூடிய பகுதிகள்.

முல்லைப் பெரியாறு அணை 1 மற்றும் 2வது மண்டலங்களிலேயே உள்ளது. சிறிய அளவிலான அதிர்வுகளைத் தாங்கும் வல்லமை அணைக்கு உள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அணைகளே அதற்கு உதாரணம்.

ஒரு வேளை அணை உடைவதாக வாதத்துக்கு ஏற்றுக் கொண்டாலும், முல்லைப்பெரியாறு அணையின் தொடர்ச்சியாக அதே ஆற்றில் 13 தடுப்பணைகள் உள்ளது. அடுத்தடுத்து இந்த அணைகளின் வழியாக வெள்ள நீரைக் கட்டுப்படுத்தலாம்.

மேலும் முல்லைப் பெரியாறு, கேரளாவின் வனப் பகுதியில் 240 கி.மீ. தூரம் ஓடினாலும் சமவெளியில் 23 கி.மீ. தூரம் மட்டும் பாய்கிறது. இங்கு மட்டுமே மக்கள் வாழ்கிறார்கள். உடையும் அணை நீர் சமவெளிக்கு வருவதற்கு முன்பாகவே தடுப்பணைகள் மூலம் தடுத்துவிடலாம்.

இந்த சந்தேகங்கள் எல்லாம் தேவையே இல்லை என்கிறார்கள் வல்லுநர்கள். காரணம் அணை மூன்று முறை நவீன முறையில் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. இதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே கட்டிய கல்லணையே உறுதியாக நிற்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**கேரள அரசு பதறுவதற்குப் பின்னணி**

இடுக்கி மாவட்டத்திலுள்ள பிரவம் சட்டமன்றத் தொகுதியின் இடைத் தேர்தலை மனதில் கொண்டுதான் காங்கிரஸ் கட்சி இப்போது பிரச்னையைக் கையாண்டு வருகிறது.

அணை நீர் 152 அடியிலிருந்து 135 அடியாக குறைக்கப்பட்ட பிறகு, 3914 ஏக்கர் நிலப் பரப்பு தண்ணீரிலிருந்து மீட்கப்பட்டது. அது ஒரு எழில்மிகு பகுதி. இப்போது அங்கே அரசியல் வாதிகளும், பணக்காரர்களும் பல விடுதிகளையும், சொகுசு மாளிகைகளையும் கட்டியுள்ளனர்.

அணை நீரை மீண்டும் 152 அடியாக உயர்த்தினால், இப்பகுதிகள் அணை நீரில் மூழ்கிவிடும். இதனால் பல அரசியல்வாதிகள்,

4 ஆம் பக்கம்

# 25 ஆண்டுகளாக நடக்கும் கூடங்குளம் எதிர்ப்பு இயக்கம்

கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு எதிரான போராட்டம் 1986 ஆம் ஆண்டிலேயே தொடங்கி விட்டது. இது திடீரென இப்போது தொடங்கியது அல்ல.

1986 இல் ‘தினமணி’யில் அணுஉலையின் பாதிப்புகள் பற்றி டி.என்.கோபாலன் அவர்களின் மிக விரிவான கட்டுரை ஒன்று வெளிவந்தது. இந்தக் கட்டுரை அன்றைய காலகட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. அணுஉலை எதிர்ப்பியக்கங்களின் செயல்பாடும் இந்த விவாதங்களின் வழி தொடங்கியது. கூடங்குளம் அணுஉலையை எதிர்த்து 1987 இல் மீனவக் கிராமங்களின் தலைவர்கள் கூட்டம் திருச்செந்தூரில் நடந்தது.1987 செப்.22 அன்று இடிந்தகரையில் கூடங்குளம் அணு உலைத் திட்டத்தை எதிர்த்து ஒரு மிகப் பெரிய பொதுக் கூட்டம் நடந்தது. 1988 இல் நெல்லையில் மிகப் பெரிய ஊர்வலம் நடத்தப்பட்டது. 1989 இல் நாகர்கோவிலில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட ஊர்வலம். 1989 மார்ச் 20 அன்று தூத்துக்குடியில் ஊர்வலம். இதில் ஜார்ஜ் பெர்னாண்டஸ், பாலபிரஜாதிபதி அடிகள் உட்பட பல அரசியல் கட்சியின் தலைவர்கள் கலந்து கொண்டனர். 1989 இல் ஜூனியர் விகடனில் இந்த உலையின் ஆபத்துகளை முன்வைத்து “கொல்ல வரும் கூடங்குளம்” என்ற தலைப்பில் சில கட்டுரைகளை எழுதினார் எழுத்தாளர் நாகார்ஜுனன். 1988 இல் நவம்பர் 21 அன்று கூடங்குளம் அணு உலையை எதிர்த்து நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தப்பட்டது. இதே சமயம் இந்தியாவுக்கு வருகை தந்த சோவியத் ஜனாதிபதி மிகைல் கோர்பச்சேவுக்கு மும்பையிலும், தில்லியிலும் கருப்புக் கொடி காட்ட பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

1989 மே முதல் தேதியில் “தண்ணீரைக் காப்பாற்று; உயிரைக் காப்பாற்று” என்ற கோஷத்துடன் தேசிய மீனவர்கூட்டமைப்பு தாமஸ் கோச்சேரியின் தலைமையில் கன்னியாகுமரியில் பெரும் பேரணி நடைபெற்றது. இதில் 10,000-த்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கு பெற்றனர். அவர்களின் மீது காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது பலர் காயமடைந்தனர். இந்த 1989 போராட்டம் பற்றிய ஆவணப் படம் இன்றும் கேரளாவிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் பிரபலமான ஒன்று. 1989 ஜூன் 13 வரை மருத்துவர் குமாரதாஸ் அவர்கள் தலைமையில் நெல்லையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் அணுஉலைக்கு எதிராக வீதி நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன. ஜூன் 13 அன்று கூடங்குளத்தில் பொதுக் கூட்டம் நடந்தது. 1989 இல் பேச்சிப் பாறையில் உள்ள நீரை அணுஉலைக்கு எடுக்கப் போவதாகத் தகவல் பரவியதை ஒட்டி 101 தொடர் பொதுக் கூட்டங்கள் நாகர்கோவில், அதன் சுற்றுப்புற கிராமங்கள் மற்றும் சிறு நகரங்களில் நடத்தப்பட்டன. 1989 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள் கூடங்குளம் அணு உலையைக் கைவிடும் கோரிக்கையை வைத்தன. பேச்சிப்பாறை அணையில் இருந்து தண்ணீர்க் குழாய் அமைக்க எல்லைக் கற்கள் நடப்பட்டிருந்தன. அந்தக் கற்களைப் பிடுங்கி எறியும் போராட்டம் 1990 இல் நடைபெற்றது. இப்படி 25 ஆண்டுகளாக நடக்கும் இந்தப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு எப்பொழுதுமே முதன்மையானதாக இருந்து வந்துள்ளது.

தொடர் எதிர்ப்பின் காரணமாக மூன்று முறை அடிக்கல் நாட்டு விழா கைவிடப்பட்டது. முறையே ராஜீவ் காந்தி, ஆர்.வெங்கட்ராமன், கருணாநிதி ஆகியோர் தலைமையில் நடைபெறவிருந்த விழாக்கள் அவை. பேச்சிப்பாறை தண்ணீர் மற்றும் மீனவர்கள் கோரிக்கையை ஒன்றிணைத்துப் போராட்டம் இன்னும் வலுப்பெற்றது. தமிழகத்தின் புகழ் பெற்ற பட்டிமன்றப் பேச்சாளர்களைப் பெரும் தொகை கொடுத்து தென் தமிழகம் முழுவதும் அணு உலைக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்ய ஏற்பாடு செய்தது நிர்வாகம்.

விடுதலை, தினமணியில் தொடர்ந்து அணுஉலையின் பாதிப்புகள் பற்றிக் கட்டுரைகள் வெளி வந்தன. பிரதமர் இந்திரா காந்தி அணு உலையின் கழிவுகளைக் குற்றாலம் மலையில் புதைக்க வேண்டும் என்று ஒரு முடிவு செய்தார். அந்த சமயம் இதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பது பற்றி ஐராவதம் மகாதேவன் தினமணியில் ஒரு விரிவாக கட்டுரை எழுதினார். இதனை அடிப்படையாக வைத்து எம்.ஜி.ஆர். இந்தத் திட்டத்திற்கு ஒப்புக் கொள்ள முடியாது என்று அறிவித்தார். தமிழக கவர்னர் முன்னிலையில் மதுரையில் நடைபெற்ற ஒரு மிகப் பெரும் பொது நிகழ்வில் இசை அமைப்பாளர் இளையராஜா அணுஉலையை எதிர்த்துப் பேசினார். உடனே அவரது வீட்டிற்கு அன்றே வருமான வரித் துறையினர் ரெய்டு செய்தனர். தமிழில் பத்துக்கும் மேற்பட்ட நூல்கள் கூடங்குளம், செர்நோபில் அணு உலையின் பாதிப்புகள் என பல தலைப்புகளில் வெளிவந்தன. மருத்துவர் ரமேஷ், பிரேமா நந்தகுமார், அ.ஜ.கான், புகழேந்தி, நெடுஞ்செழியன், வி.டி. பத்மனாபன், ஞாநி, நாகார்ஜுனன், ஏ.எஸ்.பன்னீர் செல்வன், சீ. டேவிட், வெங்கடேஷ் சக்கரவர்த்தி, கார்முகில், செல்ல பாண்டியன், துறைமடங்கன், அண்டன் கோமஸ், பிரகாஷ், பாமரன், செந்தில் குமார், நீலகண்டன், குமாரசாமி, பிரபாகர், அசுரன், ஐராவதம் மகாதேவன், புருஷோத்தம், சந்தோஷ், மருத்துவர் தெய்வநாயகம், சுப.உதயகுமார் என இங்கு கடந்த 25 ஆண்டுகளாக ஒரு தொடர் செயல்பாடு கூடங்குளம் திட்டத்திற்கு எதிராகப் பலரால் முன்வைக்கப்பட்டுள்ளது. (பட்டியல் முழுமையானதல்ல). இயக்குநர் பாலசந்தர், நடிகர் நாசர் உள்ளிட்ட ஏராளமான சினிமா நடிகர்கள் கூடங்குளத்தை எதிர்த்துக் கையொப்பம் இட்டனர்.

### கூடங்குளம் பெண்களின் கேள்வி

கேள்வி: இத்தனை கோடி ரூபாய் செலவு செய்து கட்டிய பிறகு மூடச் சொல்வது நியாயமா? பணம் வீணாகிறதே?

கூடங்குளம் வாழ் பெண்களின் பதில்: உங்க மகளுக்குத் திருமணம் நிச்சயம் செய்து எல்லா செலவும் பண்ணி நாளைக் காலை கல்யாணம். பையனுக்கு எய்ட்ஸ் இருக்குதுன்னு முந்தின ராத்திரி தெரிய வந்தா, அடுத்த நாள் காலையில கல்யாணம் செய்வீங்களா? இத்தனை செலவு பண்ணிட்டோம், கல்யாணம் நடக்கட்டும்னு விடுவீங்களா?

ஃபிரண்ட்லைன் பத்திரிகையில் இந்தியாவின் மூத்த மார்க்சிஸ்ட் சூழலியலாளர், உலகமய எதிர்ப்பாளர் பிரபுல் பித்வாய் கடந்த 25 ஆண்டுகளாக கூடங்குளத்தைஎதிர்த்தும், அணுஉலைகளின் ஆபத்துகளை விளக்கியும் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். திரேந்திர சர்மா, நீரஜ் ஜெயின், அகர்வால், க்ளாட் அல்வாரிஸ், அசின் விநாயக், அனில் சௌத்ரி, அருந்ததி ராய், எம்.வி.என்.நாயர், சுவரத ராஜு, எம்.வி.ராமண்ணா, மூத்த மார்க்சிஸ்ட் எம்.பி.பரமேஸ்வரன் என நூற்றுக் கணக்கான எழுத்தாளர்கள், செயல்பாட்டாளர்கள் இந்தியாவில் அணுஉலைகளின் ஆபத்துகளைப் பற்றி ஏராளமான நூல்களை எழுதியுள்ளனர்.

கடந்த 25 ஆண்டுகளாக அறிவு தளத்தில் செயல்படும்பொழுது எல்லாம் இதனை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த அரசு மக்கள் இதில் பெரும் திரளாகப் பங்கேற்றவுடன் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தத் தொடங்கியது. 2500 கோடி பணம், வெளிநாட்டு சதி, கிறித்துவ தலைமை என தினமும் ஒரு புதிய கண்டுபிடிப்பை அரசும், புதிதாய் முளைக்கும் லெட்டர் பேடு அமைப்புகளும் குற்றம் சாட்டுவது இந்த நூற்றாண்டின் பெரும் நகைச்சுவையாக உள்ளது. உதயகுமாரை அமெரிக்கா தான் இந்த திட்டத்தை முடக்க இங்கு அனுப்பியது என்பது தான் நகைச்சுவையின் உச்சம். இன்று இந்தியாவில் உள்ள மிகப் பெரிய அமெரிக்க ஏஜெண்டுகளே மன்மோகனும் மாண்டேக் சிங் அலுவாலியாவும் தான் என்பது உலகறிந்த உண்மை. இவர்கள் நிறுவனத்தால் இந்த திட்டத்தை ஒரு கையெழுத்தில் முடக்கிவிடலாம். ஏன் அமெரிக்கா தலையைச் சுற்றி மூக்கைத் தொட வேண்டும். இவர்களை வைத்துக் கொண்டு உதயகுமாரைப் பற்றி பேசுவது மன்மோகனைக் கொச்சைப்படுத்துவதற்கு சமம், அவரே இதை விரும்பமாட்டார். இதே ரஷ்ய அணு உலையை வங்கத்தை விட்டு விரட்டினார் மம்தா பேனர்ஜி, அவரைப் பார்த்து 2500 கோடி பணம், வெளிநாட்டு சதி என குற்றம்சாட்ட ஏன் இந்தியாவில் எவனுக்கும் தைரியம் இல்லாமல் போனது? அதிகாரத்திற்கும் நிலத்தில் கால்பதித்து நிற்கும் எளிய விளிம்புநிலை மனிதனுக்கும் அணுகுமுறையில் எத்தனை பெரிய வித்தியாசம்.

உதயகுமார் கடந்த 10 ஆண்டுகளாக இந்தக் கிராமங்களுக்கு எல்லாம் செல்லும் பொழுது இந்தக் கிராமத்தினர் எல்லாம் அவரை ஒரு எதிரிபோலவே பார்த்தனர். இந்தப் பகுதியின் வளர்ச்சியை முடக்க வந்தவன் என்றே நினைத்தனர். இந்த மக்கள் எங்களைப் பார்த்த பார்வையில் நானே உதயகுமாரிடம் நோட்டீஸ் விநியோகித்து விட்டுப் பத்திரமாக ஊர் திரும்பிவிடுவோமா என்று கேட்டதுண்டு. ஃபுகுஷிமாவில் நடந்த அணுஉலை வெடிப்பும் அதனை ஒட்டி இங்கு பத்திரிகைகள், நாளேடுகள், தொலைக்காட்சிகள் தொடர்ந்து வழங்கிய செய்திகள், நிகழ்ச்சிகள் தான் மக்களை விழிப்படையச் செய்துள்ளது. இந்த ஊடகங்கள் பரபரப்பாக விற்கும் சரக்கு சக்கை போடுபோடும் தானே. அதனை ஒட்டி கூடங்குளம் அணுஉலையில் நடந்த சோதனை ஓட்டம் அதில் இருந்து இரவு பகலாக வந்த ஓசையில் மக்கள் தூக்கத்தை இழந்தனர். அணுஉலை நிர்வாகம் வந்து கூடங்குளம் கிராம மக்களைத் திரட்டி தரையில் படுங்கள், இது தான் ‘ஐயோடின்’ என்று வகுப்பு எடுக்க தொடங்கியது. மக்கள் வீதியில் திரண்டனர். அன்றுதான் அவர்கள், “அந்த ஆள கூட்டிட்டு வாங்கடா” என்று உதயகுமாரை தேடி ஆட்களை அனுப்பியது. “நீங்கள் கூறியது எல்லாம் நடக்கும் போல் உள்ளது. நாங்கள் வீதிக்கு வந்துவிட்டோம், எங்களை வழி நடத்துங்கள்” என்று உதயகுமாரைக் கேட்டுக் கொண்டனர்.

பெரிய அணைகளுக்கு எதிரான போராட்டம், கனிமங்கள் வெட்டி எடுத்தல், சுற்றுச் சூழலுக்கு எதிரான போராட்டங்கள், மக்கள் வாழ்வாதாரங்களுக்காக நடத்தும் போராட்டம், நிலங்களை இழந்து நகர பிளாட்பாரங்களில் நிர்க்கதியாக நிற்பவர்கள், நாடு மீண்டும் பன்னாட்டு நிறுவனங்களின், ஏகாதிபத்தியங்களின் குடியேற்ற நாடாக மாறி வருவதை எதிர்த்து இரண்டாம் சுதந்திரப் போரை நடத்தி வருகிறார்கள். இவர்களில் யார் போராட்டம் நடத்தினாலும் உடன் அதனை வெளிநாட்டு சதி என்றும், இதற்குப் பின்னால் வெளிநாட்டுப் பணம் இருப்பதாகவும் குற்றச்சாட்டுகளை உலகமயத்திற்குப் பின் கூச்சம் இல்லாமல் சொல்ல பழகி விட்டன நம் நாட்டின் பெரு ஊடகங்கள்.

உலகமயம் இவர்களுக்கு வழங்கும் அனுகூலங்களைப் பற்றி நாம் தான் ஆய்வு செய்து எழுத வேண்டும். எது எப்படியோ, பத்திரிகை தர்மமம் வாழ்க!

**‘கூடங்குளம் விழித்தெழும் உண்மைகள்’ – நூலிலிருந்து**

## இந்திய பார்ப்பன ஆட்சியின் மரண விளையாட்டு!

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் குடியரசுத் தலைவரிடம் அளித்த கருணை மனுக்கள் 11 ஆண்டுகளுக்குப் பிறகு, உள்துறை அமைச்சகத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த 11 ஆண்டும் எந்த நொடியில்தூக்கு வரப்போகிறதோ என்று மரணத் துடிப்புடன் தான் அவர்கள் காலத்தைக் கடத்தியிருப்பார்கள். இதுவே பெரிய தண்டனை. இதற்குப் பிறகும் தூக்குத் தண்டனையை நிறைவேற்றலாமா என்று மனித உரிமையாளர்கள் கேட்கும் கேள்விக்கு உள்துறை அமைச்சகம், ஒரு விசித்திரமான பதிலை வழங்கியுள்ளது. இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கில் கடந்த 6 ஆம் தேதி பதில் மனுவை உள்துறை அமைச்சகம் தாக்கல் செய்துள்ளது. 11 ஆண்டு காலம் கருணை மனுவை கிடப்பில் போட்டது கொடூரமான செயல் அல்ல; மாறாக இவ்வளவு காலமும் அவர்கள் உயிர் காப்பாற்றப்படுகிறதே என்று நிம்மதியோடு கழித்திருப்பார்கள் என்கிறது உள்துறை அமைச்சகம்.

ஆக 11 ஆண்டுகாலம் தூக்குத் தண்டனையை தள்ளி வைத்து, இவர்களை நிம்மதியாக வாழ விடலாம் என்ற நல்ல நோக்கத்தோடுதான் கருணை மனுக்களை கிடப்பில் போட்டு வைத்தார்களா? அதுவே இந்த ஆட்சியின் நோக்கம் என்றால், தூக்குத் தண்டனையை நிரந்தரமாக ரத்து செய்து இந்த இளைஞர்களை ஏன் நிரந்தரமாக நிம்மதியாக வாழவிடக் கூடாது?

சரி, 11 ஆண்டுகாலமாக மரணத்திலிருந்து மீண்டு விடுவோம் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்த பிறகு, திடீரென்று தூக்கிலிடப் போகிறோம் என்று அறிவிப்பது ‘மரணத்தை’ வைத்து நடத்தும், கொடூரமான விளையாட்டு அல்லவா? அத்தகைய விளையாட்டை இந்தஇளைஞர்களிடையே நடத்தி, அதில் ‘பகடை’ இன்பம் காணவே இந்திய அரசு விரும்புகிறதா?

தமிழ் நாட்டு மக்களுக்கு, பதில் சொல்லட்டும்!

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# ஊடகங்கள் பரப்பிவரும் ‘முன்ஜென்ம’ பித்தலாட்டம்

கடந்த சில மாதங்களாக அனைத்துத் தொலைக்காட்சி சேனல்களும் போட்டிப் போட்டுக் கொண்டு நேரடி களத் தொகுப்பு என்ற பெயரில் சில நிகழ்ச்சிகளை ஒளி பரப்புகின்றன. புலனாய்வு நிகழ்ச்சி களின் சாயலில், ‘நடந்தது என்ன’ என்பதை மக்களுக்குக் காட்டுகிறோம் என்ற பெயரில் இவர்கள் செய்யும் தவறான செயல்கள், நாகரிக சமு தாயத்தை மீண்டும் மூட நம்பிக்கைப் படுகுழிக்குள் தள்ளும் செயல்கள் என்று சொன்னால் அது மிகையா காது. மூட நம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரத்தின் மூலம் தமிழகத்தில் இருக்கும் மக்கள் இப்போதைக்கு கொஞ்சமேனும் பேய், பிசாசு என்பனவற்றையெல்லாம் மறந்து அதெல்லாம் மூடநம்பிக்கை என்ற நிலையை ஓரளவிற்கு அடைந்து விட்டார்கள்.

இந்தத் தந்திரத்தைக் கையாளும் தொலைக்காட்சி சேனல்கள் ஊர் ஊராக, கிராமம் கிராமமாகச் சென்று அங்கிருக்கும் மக்களிடம் பேய் எப்படி வந்தது, பிசாசு எப்படிச் சென்றது என கதையளந்து இவர்களாகவே காட்சிகளைச் சித்தரித்து மக்களைக் குழப்பும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இதன் காரணமாக பேய் பிசாசெல்லாம் கிடையாது என்று முடிவெடுத்துத் தெளிந்து விட்டவரின் மனநிலை, இந்த நிகழ்வுகளையெல்லாம் பார்க்கும் போது ஒருவேளை பேய் இருக்குமோ என்ற குழப்பமான நிலைக்கு மீண்டும் கொண்டு வந்து விட்டுவிடும்.

சித்தரிக்கப்படும் காட்சிகள் திகிலடைய வைக்கும் விதமாக படமாக்கப்பட்டுள்ளதால், மக்கள் இதை விரும்பிப் பார்க்கிறார்கள். அத்தோடு இந்தக் காட்சிகளை உண்மை என நம்பி இதுபோல நமக்கும் எதுவும் வந்துவிடக் கூடாது என்ற நிலைக்கு மக்கள் வந்துவிடுகின்றனர்.

அதன் பிறகு அவர்கள் குடும்பத்திலோ அல்லது தொழிலிலோ ஏதாவது வித்தியாசமாகத் தென்பட்டால் அதற்கான பரிகாரம் வேண்டி போலிச் சாமியார்களையும், போலி ஜோஸ்யர்கள் மற்றும் வாஸ்து, கல் என போலித்தனம் செய்பவர்களையும் நாடிச் சென்று, தங்களின் காசு பணங்களை இழந்து நிற்கின்றனர்.

இதெல்லாம் போதாது என்று சமீபத்தில் ஒரு தனியார் தொலைக் காட்சி சேனல், முன் ஜென்ம வாழ்க்கையைத் தோண்டி எடுக்கிறேன் என்ற பெயரில் மீண்டும் மக்களைக் குழப்பும் வேலையை மேற்கொண்டுள்ளது. அதாவது இந்த நிகழ்ச்சியில் ஏதாவது ஒரு பிரபலத்தை ஆழ்நிலை உறக்க நிலைக்குக் கொண்டு சென்று அவர்களிடம் கேள்வி கேட்கிறார்கள். கேள்வி கேட்பவர் தன்னை ஒரு மருத்துவர் என்றும் சொல்லிக் கொள்கிறார்.

ஆழ்நிலை உறக்கத்திற்குச் சென்றுவிடும் அந்தப் பிரபலத்திடம் இவர் ஒவ்வொரு கேள்வியாகக் கேட்கத் துவங்குகிறார். நீங்க இப்போது எங்கே இருக்கிறீர்கள் என்ற கேள்விக்கு அவர் சம்பந்தமே இல்லாமல், நான் இப்போது திருப்பதி கோவிலில் இருக்கிறேன் என்று சொல்கிறார். இன்னும் சில நிமிடத்தில் பழனி முருகன் கோவிலில் இருக்கிறேன் என்று சொல்கிறார். இப்படியாகத் தொடர்கிறது இந்த நிகழ்ச்சியின் முட்டாள்தனம்.

இது முடிந்து அவரிடம் இன்னும் கொஞ்சம் முன்னால் செல்லுங்கள் எனக் கேட்க, அவர் இன்னும் முன்னால் சென்று தன்னுடைய முன் ஜென்மத்தை அடைகிறாராம். அந்த ஜென்மத்தில் நீங்கள் என்னவாக இருந்தீர்கள் எனக் கேட்கப்படும் போது அந்த ஜென்மத்தில் நான் மானாக இருந்தேன், மயிலாக இருந்தேன், பட்டாம்பூச்சியாக இருந்தேன் என பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள், ஆய்வுக்கு உட்படக் கூடியவர்கள். ஆனால் அதிலே வருபவர்களில் ஒருவர்கூட நான் முன் ஜென்மத்தில் நாயாக இருந்தேன், கழுதையாக இருந்தேன், பன்றியாக இருந்தேன் எனச் சொல்வதில்லை. சொல்வதில்லை என்று சொல்வதைவிட சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை என்று சொன்னால் சாலப் பொருந்தும்.

முன் ஜென்மம் என்ற முட்டாள் தனமான விவகாரத்தைக் கையிலெடுத்திருக்கும் தொலைக்காட்சி நிறுவனத்தினர் அதை வைத்து காசு பார்க்கும் வேலையைச் செய்கிறார்கள். லாபம் கிடைத்தாலும் அதில் யாருக்கும் பாதிப்பு இல்லை என்ற நிலையாவது அதில் இருக்கிறதா என்றால் இல்லவே இல்லை. கொஞ்சம் கொஞ்சமாகக் காட்டுமிராண்டி காலத்திலிருந்து நவீன காலத்திற்கு நாகரிகமான மனிதனாக மாறிவிட்ட மக்களை மீண்டும் பழைய அறியாமைக் காலத்திற்குத் தள்ளிச் செல்லும் கீழ்த்தர வேலைகளை இந்தத் தொலைக்காட்சி நிறுவனங்கள் செய்து வருகின்றது.

தொலைக்காட்சி வழியாக எதைச் சொன்னாலும் நம்பும் மக்கள் இவைகளையும் கொஞ்சமும் ஆராயாமல் அப்படியே உண்மை என நம்பி விடுகின்றனர். இதுபோன்ற நிகழ்ச்சிகளைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அதற்கு பரிகாரம் செய்கிறேன்என பல போலிகள் கிளம்பி மக்களின் பொருளாதாரங்களுக்கு வேட்டு வைக்கும் வேலைகளில் ஈடுபடுவதற்கும், அதன் மூலம் பல பெண்களின் கற்பைச் சூறையாடுவதற்கும் இதுபோன்ற மூடநம்பிக்கையை உருவாக்கும் செயல்பாடுகளே காரணம் ஆகும்.

உண்மையை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டிய ஊடகங்கள் தங்களின் சுய நலனுக்காக இதுபோன்ற முட்டாள் தனமான சம்பவங்களை ஒளிபரப்பி, அது குறித்த எவ்வித விழிப் புணர்வையும் மக்களுக்குத் தெரி விக்காமல் சுயநலத்துடன் நடந்து கொள்வது கடுமையாகக் கண்டிக்கத் தக்கது.

**“உணர்வு”**

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

நடிகர்கள், பணக்காரர்களின் நிலங்களும், கட்டிடங்களும், ஆக்கிரமிப்புகளும் மூழ்கிவிடும். எனவேதான் கேரள அரசு, 152 அடியாக அணையை உயர்த்த அஞ்சுகிறது என்று மீடியாக்கள் குற்றம்சாட்டுகின்றன.

**கேரளாவை நம்பலாமா?**

புதிய அணை கட்டிய பிறகு, தமிழகத்திற்குத் தேவையான தண்ணீரைத் தருவோம் என கேரளா கூறுகிறது. கேரளாவை நம்பலாமா? உண்மை என்ன?

கேரள அரசு புதிய அணை குறித்த விவரங்களை மத்திய அரசிடம் ஒப்படைத்துள்ளது. அதில், ‘பிற மாநிலங்களுக்கு தண்ணீரின் இருப்பைப் பொறுத்து’ தான் தர முடியும் என்றும், பெரியாறு நதியே இரு மாநில நதி அல்ல என்றும், அது கேரளாவுக்கு மட்டுமே சொந்தமானது என்றும் கூறியுள்ளது.

மேலும், ‘1886 ஆம் ஆண்டு போட்ட ஒப்பந்தத்தைத் தவிர பெரியாறு நீரில் தமிழகத்திற்கு வேறு உரிமை இல்லை’ என்று கூறியுள்ளது.

இப்போதே பித்தலாட்டம் செய்யும் கேரள அரசு, புதிய அணையை கட்டினால், பழைய ஒப்பந்தம் இதற்குப் பொருந்தாது எனக் கூறிவிட்டால் என்ன செய்வது? என்பதுதான் தமிழகத்தின் அச்சமாகும்.

உச்சநீதிமன்றமும், மத்திய நீர்வள ஆணையமும் பெரியாறு அணை பற்றி ஆராய்வதற்காக ஐந்து முறை நிபுணர் குழுவை அமைத்துள்ளன. இக் குழுக்கள் ‘அணை பாதுகாப்பாக’ இருப்பதாக உறுதி செய்துள்ளன.

**‘மக்கள் உரிமை’**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

## ஒரு பெரியார் தொண்டரின் கடிதம் – நன்கொடை

பொன் இராமச்சந்திரன் என்ற பெரியார் பற்றாளர், கழகத் தலைவருக்கு எழுதிய கடிதம் இது:

பேரன்பிற்குரிய பெரியார் திராவிடர் கழகத் தலைவர் அவர்களுக்கு வணக்கம்.

**தங்கள் கழகத்தின் பகுத்தறிவுப் பரப்புரை பணிகளைக் கண்டு பெரிதும் மகிழ்கிறேன். பாராட்டுகிறேன். பகுத்தறிவாளர்களின் கூட்டங்கள் அரங்கங்களின் அடைபட்டுப் போன அவலமான நிலையில் பெரியார் திராவிடர் கழகக் கூட்டங்கள் வீதிகளில் நடப்பது போற்றத்தக்கது. மக்களிடம் பகுத்தறிவு கருத்துக்கள் சென்றடைய வீதிக் கூட்டங்களே பயன்படும்.**

நம்மவர்களின் ஊடகங்கள் - நாள், கிழமை, திங்களிதழ்கள், வானொலிகள், தொலைக்காட்சிகள் - எல்லாம் வெட்கமில்லாமலும், வெட்கத்துடனும் பார்ப்பனர்களையும் மிஞ்சி மூடத்தனத்தைப் பரப்புகின்றன. காரணம், இனப்பற்று, நாட்டுப் பற்று, மொழிப் பற்றுகளைவிட பணப்பற்று மிகுந்து விட்டது. என்ன செய்வது? பெரும் பொருளும், மனவலிவும், துணிவும், சலியாத உழைப்பும் மிக்க இன்னொரு பெரியார் எப்போது வருவார் என மனம் ஏங்குகிறது.

**உங்களைப் போன்றவர்களின் மனத் துணிவும், இனமொழி நாட்டுப் பற்றும், பகுத்தறிவுப் பணியும் தான் நம் தமிழர்களைக் காப்பாற்றும்.** தொடர்ந்து தொண்டாற்ற பொருள் வளம் வேண்டும். என்னால் இயன்ற அணு அளவான ரூ.2000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) பெரியார் திராவிடர் கழகத்திற்கு அளிப்பதில் மகிழ்கிறேன். தங்களின் தொண்டு தொடர விழைகின்றேன்.

- பொன். இராமச்சந்திரன், ‘அருளகம்’, 5, 2ஆம் தெரு, ஈசுவரன் நகர், பம்மல், சென்னை-75.


## கோவக்குளத்தில் கழகக் கூட்டம்

டிசம்பர் 24, பெரியார் நினைவு அன்று கிருட்டிணராயபுரத்தில் கேரள அரசைக் கண்டித்தும், மத்திய அரசின் துரோகத்தைக் கண்டித்தும் முழு அடைப்பு நடத்தப்பட்டது. காலை 10 மணிக்கு பேருந்து நிலையத்தில் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. பின்பு கேரள முதல்வர் உம்மன் சாண்டியின் உருவ பொம்மையை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் எரித்தனர். அன்று மாலை 6 மணிக்கு கோவக்குளம் கிராமத்தில் பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம் கரூர் மாவட்ட செயலாளர் இரா. காமராசு தலைமையில் நடைபெற்றது. மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சியை பெரம்பலூர் தாமோதரன் நடத்தினார். மேட்டூர் குமாரசாமி மாவட்ட தலைவர் கு.கி.தனபால் உரையாற்றினார். கழகத் தோழர்கள் சிரிகாந், ஊழியன், மாணிக்கம், பன்னீர், மலைகெழுந்தன், முத்து ஆகியோர் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 19th January 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஜன. 26, 2012 | புரட்சி 11 | முழக்கம் 02 | விலை: ரூ.2.50


# போர்க் குற்றத்திலிருந்து இராசபக்சேயை காப்பாற்ற இந்தியா நடத்தும் நாடகம்

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கைக்குச் சென்று போர்க் குற்றவாளி ராஜபக்சேயுடன் பொங்கல் விழா கொண்டாடி, தமிழர்களுக்கான கல்வி ஊக்கத் தொகை, திட்டங்களை அறிவித்துள்ளார். போரில் பாதிக்கப் பட்ட தமிழர்களுக்கு புதிய வீடுகள் கட்டுவதற்கு நிதி வழங்கி, ரயில்வே திட்டங்களையும் தொடங்கி வைதத்துள்ளார். இனப்படுகொலையாளரான ராஜபக்சே மிகச் சிறந்த பண்பாளர் என்றும், தம்முடன் விருந்து உண்பதற்காகவே பல மணி நேரம் காத்திருந்ததாகவும் புகழாரம் சூட்டியிருக்கிறார். எஸ்.எம். கிருஷ்ணாவின் பயணத்தினால் தமிழர்கள் பிரச்னை தீர்ந்து விட்டதாகவும், இனி தமிழக மீனவர்கள் படுகொலை நிறுத்தப்பட்டு விடும் என்றும் தமிழக காங்கிரசார் பேசத் தொடங்கி யுள்ளனர். ஆனால், அவர் பயணம் மேற்கொண்ட அடுத்த சில நாட்களிலேயே இராமேசுவரம் மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

எஸ்.எம். கிருஷ்ணாவைத் தொடர்ந்து இந்திய அதிகார மய்யத்தின் தூதராக செயல்படும் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமும் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளார். இந்தப் பயணங்களின் நோக்கம் என்ன? இத்தகைய நாடகங்களை அவசர அவசரமாக அரங்கேற்றுவதற்கான பின்னணி என்ன என்பதை ஆராய வேண்டியது அவசியமாகும்.

ஈழத்தில் தமிழர்கள் இப்போது எந்த நிலையில் உள்ளார்கள்?

- தமிழர் பகுதிகளில் ராணுவம் குவிக்கப்பட்டு ராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டு விட்டது.
- தமிழர் பகுதிகளில் திட்டமிட்டு சிங்களர் குடி யேற்றம் நடத்தப்பட்டு தமிழர்களின் பாரம்பர்ய பிரதேசம் என்ற அடையாளம் அழிக்கப்பட்டு வருகிறது.
- தமிழர்களின் கலாச்சார அடையாளங்கள் அழிக்கப்பட்டு, சிங்கள அடையாளங்கள் திணிக்கப்படுகின்றன.
- தமிழர்கள் விட்டுச் சென்ற வீடுகளை - நிலங் களை ராணுவம் கைப்பற்றிக் கொண்டுவிட்டது.

- இந்த அடிப்படையான பிரச்சினைகளில் கவனம் செலுத்தாமல், கண்டிக்காமல் இந்தியா - தமிழர்களின் மறுவாழ்வுத் திட்டங்கள் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்கிறது.

13 ஆம் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்குவேன் என்கிறார் ராஜபக்சே. அதற்காக இந்திய வெளியுறவு அமைச்சர் பெருமைப்படுகிறார். வடக்கு-கிழக்கு மாநிலங்களை இணைத்து தமிழர்களின் தாயகத்தை 'ஓர்மை'யாக்க வேண்டும் என்ற 13 ஆம் சட்டத்திருத்த முதன்மை யான அம்சமே புறக்கணிக்கப்பட்டுவிட்டது. ராணுவ அதிகாரமோ, நிதி அதிகாரமோ இல்லாத ஒரு 'மாநிலக் கவுன்சிலை' முன்மொழிகிறது. இத் திட்டம், தமிழர்களுக்கான இம்மாநில கவுன்சிலுக்கு தமிழ்மண் மீதான உரிமையும் கிடையாது. எந்த நேரத்திலும் இந்த சொற்ப அதிகாரங்களைப் பறித்துக் கொண்டு சிறீலங்கா, தனது நேரடி கட்டுப்பாட்டுக்குள் 'தமிழ் மாகாண கவுன்சிலை'க் கொண்டு வந்துவிட முடியும். இப்படி, தமிழர்களுக்கு போலி அதிகாரப் பரவல்களை வழங்கும், இந்த 13 ஆவது சட்டத்திருத்தத்தைக்கூட அமுல்படுத்து வதற்கான காலக்கெடு எதையும் நிர்ணயிக்க ராஜ பக்சே தயாராக இல்லை. அதற்கான உறுதியையும் எம்.எம்.கிருஷ்ணாவுக்கு ராஜபக்சே வழங்கவில்லை.

இந்தியப் பார்ப்பன ஆட்சிக்கு தமிழர்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தர வேண்டும் என்ற முனைப்பும் இல்லை.

ராஜபக்சே அரசு பிரதிநிதிகளோடு தமிழர் களுக்கான அரசியல் தீர்வு குறித்து தமிழர் பகுதியி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கடந்த ஆண்டு ஜனவரி முதல் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார்கள். இந்த பேச்சு வார்த்தை இந்தியாவின் ஆதரவுடன் தான் நடந்து வருகிறது. பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடந்து முடிந்து விட்டன. அரசியல் தீர்வுக்கான திட்டங் களையும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே முன் வைத்தனர். சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகளோ உருப்படியான எந்தத் தீர்வுக்கும் தயாராக இல்லை. திட்டமிட்டே பேச்சு வார்த்தைகளை இழுத் தடித்தனர். ஒரு கட்டத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு காலக் கெடுவை நிர்ணயித்து அதற்குள் தீர்வுத் திட்டம் எதையும் முன் வைக்க வில்லை என்றால், பேச்சு வார்த்தையைத் தொடர முடியாது என்று அறிவித்து விட்டனர். இவ்வளவு கூத்துகளையும் இந்தியா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததேதவிர, இலங்கை அரசை தட்டிக் கேட்கவில்லை.இதற்குப் பிறகு இலங்கை அரசு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பேச்சைத் தொடரப் போவதில்லை என்று அறிவித்து இலங்கை அரசே நியமிக்கும் நாடாளுமன்றக் குழுவிடம் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக அறிவித்தது. இந்தியா, இதில் எந்த ஆர்வமும் காட்டாத நிலையில், தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதிகளை அமெரிக்கா அழைத்துபேசியது. அமெரிக்காவின் அரசு பிரதிநிதி களோடு பேச்சு வார்த்தை நடத்தியது. விரிவான அறிக்கை ஒன்றையும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையளித்தனர். பேச்சுவார்த்தைகள் முடங்கிப் போய் நிற்கின்றன.

இந்த நிலையில் இந்திய அரசு தமிழர்களுக்கு உரிமைகள் பெற்றுத் தருவதாக நாடகமாடுவதற்கும், புனர்வாழ்வுத் திட்டங்களை மேற்கொள்வதற்கும் ஆழமான அரசியல் சதி அடங்கியிருக்கிறது.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் உள்ள அய்.நா.வின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் ராஜபக்சே ஆட்சி தனக்குத் தானே நியமித்துக் கொண்ட ஆணையத்தின் அறிக்கை விவாதத்துக்கு வர இருக்கிறது. இலங்கை ராணுவம் எந்தக் குற்றமும் இழைக்கவில்லை என்றும், விடுதலைப் புலிகளே எல்லாவற்றுக்கும் காரணம் என்றும் கூறும் இந்த அறிக்கையை பிரிட்டன், கனடா நாடுகள் நம்பகத்துக்குரியதுஅல்ல என்று அறிவித்து விட்டன. அய்.நா.வில் சிறீலங்காவின் நடவடிக்கைகள் கடும் கண்டனத்துக்குள்ளாகும் சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. இந்த நிலையில் தமிழர்களுக்கான உதவித் திட்டங்கள் தொடங்கி தமிழர் பிரச்சினைகளை தீர்க்கும் முயற்சிகள் நடந்து வரு கின்றன என்று உலகத்துக்குக் காட்டவும் இலங்கை அரசை மீண்டும் காப்பாற்றவுமே எஸ்.எம்.கிருஷ்ணா வின் இலங்கைப் பயணம் எனும் நாடகம்.

முள்ளிவாய்க்கால் படுகொலைக்குப் பிறகு அய்.நா.வில் இலங்கைக்கு எதிராக அய்ரோப்பிய நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தை தோற்கடித்த தோடு மட்டுமின்றி இலங்கை அரசை பாராட்டித் தீர்மானம் கொண்டு வந்து, இனப் படுகொலை ஆட்சியை காப்பாற்றிய இந்தியப் பார்ப்பன ஆட்சி, இப்போதும்,இலங்கையைப் பாதுகாத்து போர்க் குற்ற நடவடிக்கைகளிலிருந்து தப்பச் செய்யவே, இந்த நாடகத்தை அரங்கேற்றியுள்ளது.

## தமிழக மீனவர்களின் "பாரம்பர்ய மீன்பிடி உரிமையும்" இலங்கையிடம் இந்தியா அடகு

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு பாரம்பரிய ரீதியான உரிமை இருப்பதாக கூறி வந்த இந்திய தரப்பினர், தற்போது அந்தக் கோரிக்கையையும் விட்டுக் கொடுத்துள்ளதாக இலங்கை மீன்பிடித் துறை அமைச்சர் ராஜித சேனரத்ன லண்டன் பிபிசி வானொலியில் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கை இடையே மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இந்திய இலங்கை தரப்புகளை உள்ளடக்கி அமைக்கப்பட்ட குழுவின் கூட்டம் கடந்த ஜன.14 ஆம் தேதி சனிக்கிழமையன்று கொழும்பில் நடந்தது.

இந்திய உயரதிகாரிகள், இந்திய மீன்பிடித் துறை அமைச்சின் கூட்டுச் செயலர்கள் உள்ளிட்ட தரப்பினர், தமிழ்நாடு ஆந்திர மாநிலங்களின் மீன்பிடித் துறை ஆணையர்கள் இந்திய கடற்படை மற்றும் கடல் எல்லைக் காவல் படையினர் அதேபோல் இலங்கை தரப்பிலும் வெளியுறவு மற்றும் மீன்பிடித் துறை அமைச்சுகளின் பிரதிநிதிகள், யாழ் அரச அதிபர் போன்றோர் இந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு பாரம்பரிய உரிமை இருப்பதாக பல காலமாக இந்தியா கோரி வந்த கூற்றை இம்முறை அது விலக்கிக் கொண்டுவிட்டதாக அமைச்சர் சேனரத்ன கூறினார்.

1960களில் இருந்து இத்தகைய பாரம்பர்ய உரிமையை இந்தியத் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வந்தது. சர்வதேச கடல் எல்லை நியமங்கள் 1975 காலப் பகுதியில் வந்த பின்னர் எல்லை தாண்டி மீன்பிடிப்பதை பாரம்பரிய உரிமையாக கருத முடியாது என்று இலங்கை மறுத்தது. இப்போது இலங்கையின் பதிலைக் கேட்டு, இந்தியப் பிரதிநிதிகள் தங்களின் வாதத்தை கைவிட சம்மதித்தனர் என்ற சேனரத்ன தெரிவித்துள்ளார்.

கடலின் ஆழம் வரை துழாவி மீன்பிடிக்கும் படகுகளுக்கு தமிழ்நாட்டில் இனி புதிதாக அனுமதிக்கப் போவது இல்லை என்றும், ஏற்கனவே பயன்பாட்டிலுள்ள படகுகளும், கொஞ்சம் கொஞ்சமாக குறைக்கப்படும் என்றும் இந்தியத் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டதாக இலங்கை மீன்பிடித் துறை அமைச்சர் ராஜித சேனரத்ன பிபிசியிடம் கூறியுள்ளார். தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிக்கும் உரிமைகளையும், இந்திய பார்ப்பன ஆட்சி தமிழக மீனவர்களின் கருத்துகளைக் கேட்காமலே இலங்கையிடம் அடகுவைத்துவிட்டது.

# முல்லைப் பெரியாறு: பார்ப்பனர்களின் துரோகக் குரல்

தமிழீழ விடுதலையில் தனது ஊடக பலத்தை முழுமையாக தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்திய 'இந்து' குழுமும் வழக்கம் போல தற்போது முல்லைப் பெரியாறு அணைச் சிக்கலிலும் தமது தமிழின விரோதப் போக்கை பார்ப்பனத் திமிருடன் வெளிப்படுத்தியிருக்கிறது. தமது குழுமத்தின் சார்பில் வரும் ஃபிரண்ட்லைன், டிசம்பர் 30, 2011 இதழில் "1886 ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தமே தவறானது என்றும், முல்லைப் பெரியாறு அணை கட்டியதே தவறு, அதற்குப் பதிலாக புதிய அணையும் கட்டக் கூடாது, அந்த தண்ணீர் இல்லாமல் வாழ தமிழர்கள் பழகிக் கொள்ள வேண்டும்" என்றும் ஒரு நேர்காணல் வெளியாகி உள்ளது. அந்தக் கருத்துக்களை வெளியிட்டவர், மத்திய அரசின் முன்னாள் நீர்வளத் துறையின் தலைமைச் செயலாளரும், இந்தியாவின் முதல் தேசிய நீர் திட்டத்தின் வரைவினைக் கொடுத்த இந்திய ஆட்சிப் பணித்துறை அதிகாரியுமான பி.இராமசாமி அய்யர் ஆவார். இவரைப் போலவே மனித உரிமை விசயங்களில் குரல் கொடுக்கும் கிருஷ்ண அய்யரும் கேரளாவில்அச்சுதானந்தன் நடத்திய கண்டனப் பேரணியில் பங்கேற்றுள்ளார்.

மேற்கண்ட இரு பார்ப்பனர்களும் கேரளத்தில் இருப்பவர்கள். ஆனால் தமிழ்நாட்டில் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டு பார்ப்பான் 'இந்து' ராமும், கேரள பார்ப்பனர்களுடன் இணைந்து மலையாளிகளுக்கு ஆதரவாக ஒரு கட்டுரையை வெளியிட்டிருக்கிறார். இராமசாமி அய்யரின் நேர்காணல் வெளியாகி இருக்கும் அதே ஃப்ரண்ட்லைன் இதழில் ஆர்.கிருஷ்ணகுமார் என்பவர் முல்லைப் பெரியாறு அணையில் தமிழர்களுக்கு எதிரான கருத்துகளைக் கொண்ட ஒரு கட்டுரையை எழுதியுள்ளார்.

அதையும் சிறப்பாக வெளியிட்டு மகிழ்கிறது ஃபிரண்ட்லைன்.1886 இல் தங்களுக்கு முழு உரிமை இல்லாத, சொந்தமில்லாத நிலம் என்று தெரிந்தும் வெள்ளையரையும் ஏமாற்றி திருவாங்கூர் சமஸ்தானத்தால் போடப்பட்ட ஒப்பந்தத்தில் திருவாங்கூர் சார்பாக கையொப்பமிட்டவர் திவான் இராமையங்கார் என்ற பார்ப்பனர் தான்.

மத்திய அரசின் மத்திய நீர்வழி ஆணையத்தின் தலைவராக இருந்த மலையாளியான கே.சி.தாமஸ், அண்மையில் 2011, நவம்பா 27 அன்று பத்திரிகை யாளர்களிடம் பேசும்போது, பெரியாறு அணை பாதுகாப்பாகத்தான் உள்ளது. அதன் உறுதியைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. கேரள அரசின் கூற்றுகளில் உள்நோக்கம் உள்ளது. முல்லைப் பெரியாறு அணையில் 152 அடி உயரம் வரை நீர் தேக்கினாலும் எந்த ஆபத்தும் இல்லை என்று கூறியுள்ளார்.

1980 இல் அணை தொடர்பாக கேரள - தமிழ்நாடு இரு மாநில முதலமைச்சர்கள் பங்கேற்ற பேச்சு வார்த்தை நடந்தது. அப்பேச்சு வார்த்தைக்கான ஏற்பாடுகளைச் செய்து தலைமை தாங்கியவர் இதே கே.சி.தாமஸ் தான். அப்போது மத்திய நீர் வழி ஆணையத்தின் தலைவராக இருந்தார். அந்தப் பேச்சு வார்த்தையின் முடிவாக, அணை பாதுகாப்பாக இல்லை என்று கூறி அதைப் பலப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சொன்னார். அதன்படி அணை பலப்படுத்தப்பட்டது. அதைத் தான் மீண்டும் கே.சி. தாமஸ், 1981க்குப் பிறகு அணையின் பாதுகாப்புப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை எனக் கூறுகிறார். மேலும் இராஜஸ்தான் மாநிலத்தில் 1730 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஒரு அணையே இன்று வரை உறுதியாக இருக்கிறது என்றும் கூறுகிறார். ஆனால் பார்ப்பன இராமசாமியோ எந்த அணையும் 100 ஆண்டுகளுக்கு மேல் பாதுகாப்பானது அல்ல என்கிறார். இந்த பார்ப்பான்தான் ஒட்டு மொத்த இந்தியாவுக்கும் தேசிய நீர்க் கொள்கையை வடிவமைத்தவராம். தமிழர்களின் ஒட்டு மொத்த ஆற்று நீர் உரிமை இழப்புகளுக்கு இவர்தான் காரணம் என்பது தெளிவாகிவிட்டது.

அதேபோல 1979 ஆம் ஆண்டு "முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியாகக் குறைத்து எஞ்சியுள்ள நீரை இடுக்கி அணைக்குத் திருப்பி அங்கு மின்சாரம் தயாரிக்கலாம்" என்ற கருத்தை முதன்முதலில் ஒரு அறிக்கையாக தயாரித்து கேரள அரசுக்குக் கொடுத்து மோதலுக்கு முன்முயற்சி எடுத்தவர் எம்.கே.பரமேசுவரன் நாயர் ஆவார். அவரும் அண்மையில் பத்திரிகையாளர்களிடம் "அணை உடைந்தாலும் அந்த நீரை இடுக்கி அணை முழுமையாகத் தாங்கிக் கொள்ளும். அணை பற்றி யாரும் பயப்பட வேண்டியதில்லை" எனறு கூறியுள்ளார்.

பிறப்பால் மலையாளிகளான மலையாள தேசிய இனத்தைச் சேர்ந்த கே.சி.தாமஸ், எம்.கே. பரமேசுவரன் நாயர், அட்வகேட் ஜெனரல் கே.பி. தண்டபாணி ஆகிய நீர் மேலாண்மை வல்லுநர்களும், சட்ட வல்லுநர்களும் முல்லைப் பெரியாறு அணை பற்றி அச்சப்படத் தேவையில்லை என்று நேர்மையுடன் அறிவிக்கின்றனர்.

ஆனால், தமிழ்நாட்டில், தமிழர்களின் உழைப்பால் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் 'இந்து' ராம் (இப்போது 'இந்து' ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகியுள்ளார்), கேரளாவின் இராமசாமி அய்யர் போன்ற தமிழ் தேசிய இனத்திலோ, மலையாள தேசிய இனத்திலோ இந்தியத் துணைக் கண்டத்தின் எந்த தேசிய இனத்திலோ சேர்க்க முடியாத - எந்த தேசிய இனத்துக்கும் உண்மையாக, நேர்மையாக இருந்திராத - வரலாற்றுக் காலம் முதல் இன்று வரை பல நூற்றாண்டுகளாக துரோகக் கும்பலாகவும், சுரண்டல் கூட்டமாகவும், ஆதிக்க இனமாகவும், இந்தியர் என்ற இல்லாத தேசிய இனத்துக்கு அடையாளமாகவும் வாழ்ந்து வரும் பார்ப்பனக் கும்பலானது - அறிவும், மனிதாபிமானமும், நேர்மையும் இன்றி "இந்த அணை கட்டியிருக்கவே கூடாத அணை, இந்த அணை நீர் இல்லாமல் வாழ தமிழர்கள் பழகிக் கொள்ள வேண்டும்" என்று நெஞ்சை நிமிர்த்தி நேர்காணல் அளிக்கிறது, அச் சிட்டுப் பரப்புகிறது என்றால், அதைத் தமிழர்களும் அனுமதிக்கிறோம் என்றால் தமிழர்களைவிட, திராவிடர்களைவிட சொரணையற்ற இனம் ஒன்று உலகில் இருக்க முடியாது என்றே தோன்றுகிறது. இராமசாமி அய்யர் எழுதிய கட்டுரையை தமிழ்நாட்டில் 'இந்து' பார்ப்பன ஏடும், அவர்களே நடத்தும் 'பிரன்ட்லைன்' இதழும் வெளியிடுகிறது.

இதுபோன்ற நிலையை எண்ணித்தான் பெரியார் அன்றே சொன்னார், "பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன். மத்திய அரசாங்கப் பிடியில் இருந்து திராவிட நாடு (தமிழ்நாடு) தனியாகப் பிரியாவிடில், சுதந்திரம் இல்லை. சோறு இல்லை. மான வாழ்வு இல்லை. இது உறுதி, உறுதி, உறுதி. - 'விடுதலை' 25.2.1949

**அதி அசுரன், 'கீற்று'**
**இணையத்தளத்திலிருந்து**

## சுப்ரமணிய சாமியின் துரோகக் குரல்

சர்வதேச அரசியல் தரகரும், பச்சைப் பார்ப்பனிய வெறியாளருமான சுப்ரமணியசாமி, முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தமிழர்களுக்கு எதிரான கருத்தை முன் வைத்துள்ளார். முல்லைப் பெரியாறு நீர் இல்லாத ஒரு வாழ்க்கைக்கு தமிழர்கள் தயாராக வேண்டும் என்று அவர் பேசியதாக செய்திகள் வெளி வந்துள்ளன.

ஹார்வேர்டு பல்கலைக் கழகத்தின் கவுரவ பேராசிரியராக இருந்த அவரை அண்மையில் அப்பல்கலை, அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட்டது. அவரது இந்துமத வெறி கருத்துகளே இதற்குக் காரணம். டெல்லியிலிருந்துவெளிவரும் 'டி.என்.ஏ.' என்ற ஆங்கில நாளேட்டில் சுப்ரமணிய சாமி கட்டுரை ஒன்றை எழுதினார்.

"இந்துக்கள் அல்லதவர்கள், தங்களது முன்னோர்களது பாரம்பர்யத்தை அங்கீகரித்து ஏற்க வேண்டும்; அவ்வாறு முன்னோர் பாரம்பர்ய மரபுகளை ஏற்காதவர்கள் வாக்குரிமையைப் பறிக்க வேண்டும். சர்ச்சைக்குரிய 300 பள்ளிவாசல்களை இடிக்க வேண்டும். இந்து மதத்திலிருந்து எவரும் மதம் மாறக் கூடாது. ஆனால், பிற மதத்திலிருந்து இந்து மதத்துக்கு வருவோரை ஊக்குவிக்க வேண்டும்" என்றெல்லாம் அக்கட்டுரையில் தனது ஆர்.எஸ்.எஸ். வெறியை எழுதிக் காட்டினார். ஹார்வேர்டு பல்கலை மாணவர்கள் இத்தகைய மதவெறியாளரை பல்கலையில் பயிற்றுவிக்க அனுமதிக்கக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர். பல்கலை நிர்வாகமும் அவரை பதவி நீக்கம் செய்துவிட்டது.

முஸ்லீம்களுக்கு எதிராக இந்துக்கள் ஒன்று திரள வேண்டும் என்றும், யூதர்களிடமிருந்து இந்துக்கள் பாடம் பெற வேண்டும் என்றும் அதே கட்டுரையில் அவர் அறைகூவல் விடுத்தது அப்பட்டமான மதக் கலவரத்தைத் தூண்டும் எழுத்துகளாகும்,.

ராஜீவ் கொலை நடந்தபோது கொலையில் சோனியா குடும்பத்தின் சதி இருப்பதாக எழுதியவரும் இதே சுப்ரமணியசாமிதான். ராஜீவ் கொலைப் பற்றி ஆங்கிலத்தில் அவரே எழுதிய நூலில் இவ்வாறு எழுதியிருக்கிறார். அந்த சுப்ரமணியசாமிதான், அண்மையில், 3 தமிழர்களையும் தூக்கில் போட்டேயாக வேண்டும் என்றும், அவர்கள் தான் ராஜீவ் கொலையில் உண்மையான குற்றவாளிகள் என்றும் திமிரோடு பேசினார்.

'2ஜி அலைவரிசை' ஊழல் வழக்கில் தன்னையும் இணைத்துக் கொண்டுள்ளார் இந்த மனிதர். பிரதமர் ஆலோசனை பெற்றுதான் அலைவரிசை ஒதுக்கீடு நடந்தது என்றும், மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்துக்கும் இதில் பங்கு உண்டு என்றும், சுப்ரமணியசாமி, உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். இதனாலேயே சுப்ரமணியசாமி ஊழலை எதிர்க்கும் உத்தமராக கருதிவிடக் கூடாது. ராஜீவ் ஆட்சியில் நடந்த போபோர்ஸ் பீரங்கி ஊழலுக்கு எதிராக 'தொடை தட்டி கிளம்பிய' இதே சுப்ரமணியசாமி, ராஜீவ் ஆதரவுடன் சந்திரசேகரை பிரதமராகக் கொண்டு நடந்த காங்கிரசின் 'பினாமி' அமைச்சரவையில் சட்ட அமைச்சர் பதவி தரப்பட்டவுடன் போபோர்ஸ் வழக்கை குழி பறிக்க தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார். இது பற்றிய முழுமையான தகவல்கள் உரிய ஆதாரங்களோடு பெரியார் திராவிடர் கழகம் அண்மையில் வெளியிட்டுள்ள 'அரசியல் தரகர் சுப்ரமணியசாமி' நூலைப் படித்தால் தெரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவில் பார்ப்பனர்கள் அதிகார மய்யங்களை ஆட்டிப்படைத்து வருகிறார்கள். தனி மனிதர்களாகவே அவர்கள் காட்சி அளித்தாலும், இந்தியாவின் அதிகார மய்யங்களின் 'ஆசீர்வாதத்தோடு' அவர்கள் கொடிகட்டிப் பறக்கிறார்கள். தமிழ்நாட்டில் துக்ளக் சோ, பாரதிய ஜனதா ஆட்சியை டெல்லியில் மீண்டும் கொண்டுவர அ.இ.அ.தி.மு.க.வை – பாரதிய ஜனதாவிடம் கொண்டுபோய் கூட்டணியில் இணைக்க காய் நகர்த்துகிறார். மற்றொரு பக்கம் சுப்ரமணியசாமி காய் நகர்த்துகிறார். மாயாவதியானாலும், சோனியாவானாலும் பார்ப்பனர்களுக்கு வலை வீசவே துடிக்கிறார்கள். பன்னாட்டு நிறுவனங்களின் ஆலோசகர்கள் தலைமைப் பொறுப்புகளிலும் பார்ப்பனர்களே குவிந்து கிடக்கிறார்கள். இதுவே இன்றைக்கும் இந்தியாவின் போக்காக தொடருகிறது.

## சேலம் மாநகர பெரியார் தி.க. முடிவுகள்

8.1.2012 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 11 மணிக்கு சேலம் மாநகர கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சேலம் மாநகர செயலாளர் தோழர் மூ.வெ. சரவணன் தலைமையேற்று நடத்தினார். இந்த ஆண்டு பெரியார் முழக்க சந்தா சேலம் மாநகரில் மட்டும் 500 வசூலிப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் மாதம் இரண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# முல்லைப் பெரியாறு உரிமை: மலையாளிகள் ஆதிக்கத்தை விளக்கி கழக மாணவரணி பரப்புரைப் பயணம்

*தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் முல்லைப் பெரியாறு தமிழர் உரிமை பரப்புரைப் பயணம் நடைபெற்று வருகிறது.*

*2012 **சனவரி 7*** சனி மாலை 6 மணிக்கு மதுக்கரை மார்க்கெட் பகுதியில் தமிழ்நாடு மாணவர் கழக மாநில அமைப்பாளர் ந.பன்னீர்செல்வம் தலைமை யில் பயணம் தொடங்கியது. கோவை மாவட்ட செயலாளர் வெள்ளமடை நாகராசு சிறப்புரை யாற்றினார். நடராஜ் மருத்துவமனை, கா.க.சாவடி ஆகிய பகுதிகளில் பரப்புரை நடைபெற்றது. பரப்புரையில் ம.தி.மு.க. சார்பில் மணி, டில்லிபாபு, கோபி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாணவர் கழக பொறுப்பாளர்கள் பாலமுரளி, பிரதாப், நாகராசு, விக்னேசு, சிலம்பரசன், மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

***சனவரி 8*** அன்று பெரியநாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முல்லைப் பெரியாறு பற்றிய செய்திகளை மாணவர்கள் சிலம்பரசன், வெ.பிரபாக ரன் ஆகியோர் எடுத்துரைத்தனர். அதை யடுத்து கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் வெள்ள மடை நாகராசு, திருப்பூர் மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, திருப்பூர் மாநகர செயலாளர் முகில்ராசு, திருப்பூர் இராவணன் ஆகியோர் உரையாற்றினர். பெரியநாயக்கன்பாளையத்தை அடுத்து வீரபாண்டி பிரிவில் பரப்புரை நடைபெற்றது. பரப்புரையில் பெரியார் தி.க. நகரச் செயலாளர் வீரபாண்டி பாபு, தி.மு.க. கணேசமூர்த்தி, ம.தி.மு.க. அய்யாசாமி, கோவிந்தராசு ஆகியோருடன் மாணவர்கள் சிலம்பரசன், பிரதாப், நாகராசு, சிலம்பரசன், விக்னேசு, ஜெய்ந்த் ஆகியோர் கலந்துகொண்டனர்.

***சனவரி 9*** ஆம் நாள் துடியலூர் பகுதியில் நடை பெற்ற பரப்புரையில் தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் ந. பன்னீர்செல்வம், மாவட்ட செயலாளர் வெள்ளமடை நாகராசு ஆகியோர் சிறப்புரையாற்றினர். கோவை மாவட்ட அமைப் பாளர் நேருதாசு, ம.தி.மு.க. ஒன்றிய செயலாளர் ஆனந்தகுமார், மாணவர்கள் பிரதாப், சிலம்பரசன், சிலம்பரசன், விக்னேசு, சரவணன், ஆண்ட்ரோசு, சதீஷ், ஜெயந்த், ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.மார்க்சிய கம்யூனிஸ்ட் சார்பில் வழக்கு நிதி வழங்கப்பட்டது.

***சனவரி 10*** அன்று சூலூர், ஆர்.வி.எஸ். கல்லூரி , பேருந்து நிலையம், பாப்பம்பட்டி பிரிவு ஆகிய பகுதிகளில் பரப்புரை நடைபெற்றது.கோவை மாவட்டச் செயலாளர்கள் கா.சு. நாகராசன், வெள்ள மடை நாகராசு, சூலூர் வீரமணி, மாவட்ட துணை தலைவர் பன்னீர்செல்வம், கோவை மாவட்டத் தலைவர் கலங்கல்வேலு, பொருளாளர் குமாரவேலு, ம.தி.மு.க. கருணாநிதி, சிலம்பரசன், பிரதாப், சதீஷ், பிரபாகரன் ஜெய்ந்த் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

***சனவரி 12*** மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் இராமச்சந்திரன் பரப்புரை பயணத்தை தொடங்கி வைத்தார். தோழர்கள் வெள்ளமடை நாகராசன், பன்னீர்செல்வம், மேட்டுப்பாளையம் நகரச் செயலாளர் சந்திரசேகரன் ஆகியோர் உரை யாற்றினர். மேட்டுப்பாளையம் பரப்புரையின்போது பொது மக்கள் கூட்டமாக நின்று கேட்டனர். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த கோவிந்தராஜன், சிறுத்தை சிவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

***சனவரி 13*** - காரமடையில் பரப்புரை நடை பெற்றது. கழகப் பொதுச் செயலாளர் கோவை. இராமகிருட்டிணன், கோவை மாவட்ட செயலாளர் வெள்ளமடை நாகராசன், மாணவர் கழக மாநில அமைப்பாளர் ந. பன்னீர்செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சுப.தங்கவேல் (சி.பி.ஐ.), வெங்கடேசு, தி.மு.க. ஒன்றிய பொறுப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

***சனவரி 17*** - அன்னூர் பகுதியில் பரப்புரை நடை பெற்றது. வெள்ளமடை நாகராசு , பன்னீர்செல்வம் உரையாற்றினர். அ.தி.மு.க. நகர செயலாளர் பொன்விழி குமார், விடுதலை சிறுத்தைகள் நகர அமைப்பாளர் பாலுமகேந்திரன், நகரச் செயலாளர் ஈஸ்வரன் மற்றும் ராமன், பழனிச்சாமி, பிரபாகர், ஜெயராம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அனைத்து பகுதிகளிலும் தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பாக வழக்கு நிதி வசூலிக்கப் பட்டது.

பரப்புரையின்போது முல்லைப் பெரியாறு, தமிழர் உரிமைகள், மத்திய அரசு தமிழர்களுக்கு செய்யும் துரோகம், மத்திய மாநில அரசுகளில் மலையாளிகளின் ஆதிக்கம், தமிழர்களின் பகுதிகள் கேரளாவிடம் பறி கொடுத்தமை, தமிழ்நாட்டில் அரசு துறை, தொழில் துறை மற்றும் மேற்கு மண்டல காவல் துறையில் மலையாளிகளுக்கு ஆதரவான போக்கு ஆகியவை பற்றி விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறப்பட்டது.

கோவை புறநகர் பகுதிகளில் தொடர்ந்து பரப்புரை நடைபெற்று வருகிறது.

## *வழக்கறிஞர் துரைசாமி அம்பலப்படுத்துகிறார்*

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் மறைக்கப்பட்ட உண்மைகள் [1]

***ரா**ஜீவ் கொலை வழக்கில் குற்றம்சாட்டப் பட்டவர்களுக்காக வாதாடியவா பெரியார் திராவிடர் கழகத்தின் மூத்த வழக்கறிஞர் எஸ்.துரைசாமி. அவர் இப்போது ராஜீவ் கொலை வழக்கில் முறையாக விசாரணை நடத்தப் பெறாமல், பல உண்மைகள் மூடி மறைக்கப் பட்டதை, வெளியே கொண்டு வரும் நூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். விரைவில் அந்த நூல் வெளி வரவிருக்கிறது. இது தொடர்பாக 'டெகல்கா' வார ஏடு, வழக்கறிஞர் துரைசாமியின் பேட்டியை வெளியிட்டிருக்கிறது. அந்தப் பேட்டியின் தமிழ் வடிவம் இது.*

கேள்வி : ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நளினிக்காக, நீங்கள் வாதாடியவர். அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு, தண்டனையும் உறுதி செய்யப்பட்டு அனுபவித்து வரும்போது இவ்வளவு காலத்துக்குப் பிறகு ராஜீவ் கொலையின் பின்னணியில் மிகப் பெரும் சதித் திட்டம் இருப்பதாகவும், அந்த சதி அவர்களுக்குள்ளேயே உருவானது என்றும், நூல் எழுதியிருக்கிறீர்கள். உங்களின் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு, என்ன ஆதாரம்?

பதில் : ராஜீவ் கொலைக்கான சதி காங்கிரஸ் அணிக்குள்தான் உருவானது என்பதற்கான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. ஆனால், சி.பி.அய். விசாரணைக்கு தலைமையேற்று நடத்திய காவல்துறை அதிகாரி டி.ஆர்.கார்த்திகேயன், சரியான கோணத்தில் இந்த விசாரணையை கொண்டு செல்லவில்லை என்றே கூறுவேன். ராஜீவ் கோரக் கொலை நடந்து முடிந்த மூன்றாவது நாளில், அதாவது 1991 மே 24 இல் சி.பி.அய். விசாரணைக்கான பொறுப்பை ஏற்றது. அந்த விசாரணைக் குழுவில் கார்த்திகேயன், நான்கு டி.அய்.ஜி.க்கள், 8 காவல்துறை மாவட்ட தலைமை அதிகாரிகள், 14 மாவட்ட துணை ஆய்வாளர்கள், 44 ஆய்வாளர்கள், 55 துணை ஆய்வாளர்கள் மற்றும் காவல்துறையினர் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் அனைவரையுமே தேர்வு செய்தது கார்த்திகேயன் தான். இதில் பெரும்



பாலோர், தங்களது பணிக் காலங்களில் திறம்பட செயல்பட்டவர்கள். புலன் விசாரணை சுமார் ஓராண்டு காலம் நடந்தது. 1992 மே 20 இல்தான் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்தனர். இவ்வளவு காலம் புலனாய்வுக்கு எடுத்துக் கொண்ட பிறகும் குற்றப் பத்திரிகையில் புலனாய்வில் பல ஓட்டைகள் வெளிப்பட்டன. சி.பி.அய். உண்மைகளை மறைத்தது. ஓராண்டு காலம் புலனாய்வுக்கான கால அவகாசம் கிடைத்த நிலையில், ஒரு சாதாரண போலீஸ்காரரால் கூட, இதைவிட சிறப்பாகவே புலனாய்வை நடத்தியிருக்க முடியும் என்பதே என் கருத்து. தடா நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்ட அனைவருக்குமே தண்டனை வழங்கியது உச்சநீதிமன்றம் 19 பேரை விடுதலை செய்தது. சதியில் இவர்களுக்கு பங்கு உண்டு என்பதற்கு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்ட சாட்சியங்கள், ஏற்கக்கூடியதாக இல்லை என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டது.

கேள்வி : இவையெல்லாம் பொதுவான கருத்துகள் தான். பின்னணியில் பெரிய சதி நடந்தது என்பதற்கு குறிப்பிடத்தக்க சான்றுகள் இருந்தால் சொல்லுங்கள்.

பதில் : காங்கிரஸ் கட்சிக்கான நாடாளுமன்ற வேட்பாளர் மரகதம் சந்திரசேகருக்காக தேர்தல் பிரச்சாரத்துக்காகவே ஸ்ரீபெரும்புதூருக்கு ராஜீவ்காந்தி வந்திருந்தார். ஏற்கனவே ராஜீவ்காந்தி தமிழ்நாட்டில் தனது தேர்தல் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டவிட்டார். அதன் பிறகு, மே 18 ஆம் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடி, ராஜீவ் சுற்றுப் பயணத் திட்டத்தை இறுதி செய்த போது, அதில் ஸ்ரீபெரும்புதூரும், விசாகப்பட்டின மும் சேர்க்கப்பட்டது. ஆனால், 'தினத்தந்தி' நாளேட்டில் ஒரு நாளைக்கு முன் கூட்டியே, அதாவது மே 17 ஆம் தேதியே ராஜீவ் ஸ்ரீபெரும்புதூர் வருகை தரும் செய்தி வெளிவந்துவிட்டது. தமிழ்நாட்டின் காங்கிரஸ் தலைவர் எவருக்கும் ராஜீவ் ஸ்ரீபெரும்புதூர் வருகை பற்றி எதுவும் தெரியாது. ராஜீவ் சுற்றுப்பயணத்துக்கு பொறுப்பாளரும் கட்சியின் அதிகாரபூர்வ பேச்சாளருமான மார்கரட் ஆல்வா (தற்போது உத்தர்காண்ட் ஆளுநர்) மே 18 ஆம் தேதிதான், ராஜீவ் சுற்றுப்பயணத் திட்டத்தை இறுதி செய்கிறார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, இறுதி செய்வதற்கு முன்பே, 'தினந்தந்தி' நாளேட்டுக்கு ராஜீவ், ஸ்ரீபெரும்புதூர் வருகை தரும் செய்தி எப்படி கிடைத்தது?

அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, ராஜீவ் ஸ்ரீபெரும்புதூர் வருவதற்கும் அங்கேயே தங்குவதற்கும் மே 19 ஆம் தேதி அன்று வாழப்பாடி ராமமூர்த்தி தனது எதிர்ப்பை பதிவு செய்கிறார். தடா நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் வாழப்பாடி ராமமூர்த்தி, இதை ஒப்புக் கொண்டுள்ளார். மரகதம் சந்திரசேகர் டெல்லியில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, தனது தொகுதியில் ராஜீவ்காந்தி பிரச்சாரத்துக்கு ஏற்பாடு செய்து விடுகிறார். ராஜீவ் வருகை உறுதியான நிலையில் உள்ளூர் காங்கிரசார், கூட்டத்தை பள்ளி மைதானம் ஒன்றில் நடத்துவதற்கு காவல்துறையின் அனுமதி கேட்டனர். ஆனால், கோயிலுக்கு சொந்தமான இடத்துக்கு பிறகு மாற்றப்பட்டது. இதற்கான காரணம் மரகதம் சந்திரசேகருக்குத்தான் தெரிந்திருக்க முடியும். பள்ளி விளையாட்டு மைதானத்திலிருந்து கோயில் இடத்துக்கு மாற்றப்பட்டதற்கு, காங்கிரசார் காவல்துறையின் அனுமதியையும் கேட்கவில்லை. அந்தக் கூட்டத்துக்கு முறையான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. காங்கிரஸ்

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# ராஜீவ் கூட்டத்துக்கு சிவராசன் நன்கொடை

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

தலைவர்களின் எதிர்ப்பையும் மீறி, ராஜீவ், ஸ்ரீபெரும்புதூரிலேயே தங்குவதற்கான ஏற்பாடுகளும் நடந்தன. அந்த ஊரில் இருந்தது, ஒரே சுற்றுலா மாளிகைதான். அதுவும் பழுதடைந்த நிலையிலேயே இருந்தது. அப்போது தமிழக ஆளுநராக இருந்த பீஷ்ம நாராயண் சிங், ராஜீவ் ஸ்ரீபெரும்புதூரிலேயே தங்க வைப்பதற்கு பாதுகாப்பு காரணங்களுக்காக எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால், மரகதம் சந்திரசேகர், தனது கிராமத்திலேயே ஒரு அடகுக் கடைக்காரரின் பங்களாவில் ராஜீவை தங்க வைக்க ஏற்பாடு செய்துவிட்டார் என்று காங்கிரசாரிடம் கூறப்பட்டது. காவல்துறை அதிகாரிகள் பாதுகாப்பு கருதி இத்திட்டத்தை ஏற்க மறுத்தனர்.

கேள்வி : இந்த காரணங்களால் மரகதம் சதிக்கு உதவினார் என்று கூற முடியுமா?

பதில் : மரகதம் அம்மையார் சதிக்கு உடந்தையாக இருந்ததாக நான் குற்றம்சாட்டவில்லை. ஆனால்,இந்த வழக்கின் சாட்சிகள் அவருக்கு எதிராக இருக்கின்றன. முக்கிய குற்றவாளியான சிவராசன் எழுதிய நாட்குறிப்பில் பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்காக மரகதம் சந்திரசேகரன் மகன் லலித் சந்திரசேகரிடம் சிவராசன் ரூ.5 லட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளதை சிவராசன் தனது நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளார். இந்த வழக்கில் தலைமை விசாரணை அதிகாரியாக செயல்பட்ட ரகோத்தமன் எழுதிய நூலில் சிவராசன் நன்கொடை வழங்கியதை குறிப்பிட்டுள்ளார். நான் ரகோத்தமனை குறுக்கு விசாரணை செய்தபோது இதுபற்றி எதுவும் அவர் கூறவில்லை. தடா நீதிமன்றத்தில் சிவராசன் எழுதிய நாட்குறிப்பையும், சாட்சி ஆவணமாக முன் வைக்கவில்லை. குண்டு வெடிப்பில் காயமடைந்த லலித், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, ரகோத்தமன் அவரை மருத்துவமனைக்குப் போய் பார்த்தார். அப்போது ஒரு புகைப்படத்தைக் காட்டி, இதில், தாணுவை அடையாளம் காட்ட முடியுமா என்று கேட்டார், அதற்கு லலித், தனக்கு தாணு நினைவில் இல்லை என்று கூறிவிட்டார். அ ப்போது அங்கு இருந்த வாய் பேச இயலாத லலித்தின் மகள் தாணுவை அடையாளம் காட்ட முன்வந்த போது ஆத்திரமடைந்த லலித், அருகே இருந்த மனைவியிடம், தமது மகளை அறையை விட்டு வெளியே இழுத்துப் போகுமாறு கூறினார். ரகோத்தமன், தனது நூலில் இதையும் எழுதியுள்ளார். சிவராசன் தந்த 5 லட்சம் ரூபாய் நன்கொடை பற்றி சி.பி.அய். விசாரிக்கவில்லை. சிவராசனும் தாணுவும், மரகதம் குடும்பத்தினரோடு எப்படி நெருக்கமானார்கள் என்பதையும் விசாரிக்கவில்லை. லலித்தின் மனைவி அதாவது மரகதம் சந்திரசேகரன் மருமகள் ஒரு ஈழத் தமிழ்ப் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவராசன் எந்தப் பயனையும் எதிர்பார்க்காமல், ரூ.5 லட்சம் நன்கொடை வழங்கியிருக்க மாட்டார் என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். அதற்கு கைமாறாக லலித்திடமிருந்து நிச்சயமாக சிவராசன் உதவிகளைப் பெற்றிருப்பார். ரகோத்தமன் எழுதிய நூலில், இந்த செய்திகள் இடம் பெற்றிருந்தாலும் அதற்காக லலித், மறுப்பு எதையும் தெரிவிக்கவில்லை. ரகோத்தமன் மீது அதற்காக வழக்கும் தொடரவில்லை. நான் மரகதம் சந்திரசேகரை குறுக்கு விசாரணை செய்தபோது, குற்றம்சாட்டப்பட்டுள்ள சிவராசனையோ, தாணுவையோ தெரியுமா? என்று குறிப்பாகக் கேட்டேன். அந்தக் கேள்விக்கே மரகதம் எதிர்ப்பு தெரிவித்து, இதற்காக என் மீது சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள நீதிமன்றத்தின் அனுமதியையும் கேட்டார். நீதிமன்றமும் அனுமதித்தது. ஆனால், என் மீது அவர் வழக்குப் போடாமல் தவிர்த்துக் கொண்டார்.

சிவராசனின் நாட்குறிப்பில் இடம்பெற்றுள்ள தகவல்கள், இந்த வழக்கின் முக்கியமான சாட்சியங்களாகும். “ராஜீவ் பிற்பகல் 4.30 மணிக்கு புறப்படுகிறார். சென்னைக்கு மாலை 6 மணிக்கு வந்து சேர்கிறார்” - என்று எழுதியிருக்கிறார். ஆனால், திட்டமிட்டபடி 6 மணிக்கு ராஜீவ், ஸ்ரீபெரும்புதூர் வந்து சேர முடிய வில்லை. விமானத்தில் ஏற்பட்ட சில கோளாறு காரணமாக மாலை 6.15 மணி வரை விசாகப்பட்டினத்திலிருந்தே ராஜீவ் புறப்படவில்லை. விமானம் கால தாமதமாகவே சென்னை வருகிறது என்ற தகவலும், சிவராசனுக்கு தெரிந்திருந்தது. அப்போது ‘செல்’ பேசி வசதியோ ‘பேஜர்’ வசதியோ கிடையாது. ராஜீவ் விமானம் தாமதமாக வருகிறது என்று தெரிந்த காரணத்தினால் சிவராசன் 6 மணி அளவில் ஸ்ரீபெரும்புதூருக்குள் வராமல், அந்த நேரத்தில் சென்னையிலிருந்து புறப்பட்டு போருந்தில் வந்து கொண்டிருந்தார். ராஜீவ் தாமதமான வருகை, சிவராசனுக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததோடு, அவர், ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்துக்கு உறுதியாக வரப்போகிறார் என்பதும் தெரிந்திருந்தது. இதையெல்லாம் சிவராசன் தனது ‘6 ஆம் அறிவால்’ புரிந்து கொண்டார் என்றெல்லாம், நான் நம்பத் தயாராக இல்லை.

அது மட்டுமல்ல; ராஜீவ், விசாகப்பட்டினத்தில், விமானத்தில் ஏறும் நேரத்தில் திடீரென்று 3 பேர் பாதுகாப்பு வளையத்தையும் மீறி ராஜீவை சந்தித்துள்ளனர். அதில் ஒருவர் பெண். இந்தத் தகவலை அந்த விமான தளத்தின் பொறுப்பு அதிகாரியாக இருந்தவர் கூறியுள்ளார். ராஜீவை சந்தித்த அந்த மூன்று நபர்கள் யார் என்பதை காவல்துறை விசாரிக்க வில்லை. விமானம் புறப்பட்டவுடன், அந்த மூவரும், அங்கிருந்து மறைந்து விட்டனர். ராஜீவின் ஒவ்வொரு அசைவும் கண்காணிக்கப்பட்டு வந்தது என்பது இதிலிருந்து தெரிகிறது. இந்த கோணத்தில் சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை நடத்தவில்லை.

(தொடரும்)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# குமரி மாவட்டத்தில் கழக செயல்பாடுகள்




பெரியாரின் 38 ஆவது நினைவு நாளை யொட்டி கன்னியாகுமரி மாவட்ட கழக சார்பில் நாகர்கோவில் ஒழுகின சேரியிலுள்ள பெரியார் உருவ சிலைக்கு வழக் கறிஞர் வேசதா தலைமை யில் மாலை அணிவித்து மரியாதை செய்யப் பட்டது. இந்நிகழ்வில் தோழர்கள் கோட்டாறு சூசை, சுரேஷ், விஜய், கணபதி, ஜெபகுமார், வழக்கறிஞர் தமிழ்ச்செல்வன், லால், பிரான்சிஸ், தலித் மக்கள் உரிமைகள் அறக்கட்டளை மாநில தலைவர் நீதி அரசர், வினீஸ் ஜெகன், பக்தசீலன் மற்றும் பலர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

13.1.2012 அன்று கோட்டாரில் குமரி மாவட்ட கழகக் கலந்துரையாடல் கூட்டம் தலைமைசெயற்குழு உறுப்பினர் தூத்துக்குடி பால் பிரபாகரன் தலைமையில், மாவட்ட பொறுப்பாளர் வழக்குரைஞர் வே.சதா, கோட்டார் சூசை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் அ.சேவியர் மார்த்தாண்டம், நீதியரசர் பக்தசீலன், பிலிஸ்து, சூசையப்பா, விஜய், கணபதி சுரேஷ், சுபாஷ், வெங்கடேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டத்தலைவர் - ஜா.சூசை; மாவட்ட துணைத் தலைவர் - அ.சேவியர்; மாவட்ட செயலாளர் - வழக்குரைஞர் வே.சதா; மாவட்ட துணைச் செயலாளர் - சுபாஷ்; மாவட்ட பொருளாளர் - விஜய். நாகர்கோவில் நகரப் பொறுப்பாளர்கள்: நகர தலைவர் - சுபாஷ்; துணைத் தலைவர் - சுரேஷ்; செயலாளர் - விஜய்; துணைச் செயலாளர் - விசு. கன்னியாகுமரி பொறுப்பாளராக - பிலிஸ்து; மார்த்தாண்டம் பொறுப் பாளராக - லால்; திருவட்டார் பொறுப்பாளராக - அ.சேவியர்; ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழர்களுக்கு எதிரான இந்திய தேசியத்தின் துரோகங்கள் 1. ஈழத்தில், 2. கூடங் குளத்தில் 3. முல்லை பெரியாறில் எனும் தலைப்பில் மாவட்டம் முழுமையும் ஆங்காங்கே தெருமுனைக் கூட்டங்களும், பொதுக் கூட்டங்களும் நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டது. கழக ஏடான பெரியார் முழக்க ஏட்டிற்கு சந்தா சேகரிக்க முடிவு செய்யப்பட்டது. தோழர் சேவியர் நன்றி கூறினார்.

## வடசென்னையில் கழகக் கூட்டம்

வடசென்னை மாவட்ட கழகம் சார்பாக 12.1.12 அன்று சூளையில் ‘முல்லைப் பெரியாறு பென்னிகுக்கின் தியாகமும் மத்திய அரசின் துரோகமும்’ என்ற தலைப்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், சிற்பி ராசன், வழக்கறிஞர் குமாரதேவன் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். வடசென்னை மாவட்டக் கழக பொருளாளர் நா.பாசுகர் தலைமை தாங்கினார்.

## காஞ்சி மாவட்ட கலந்துரையாடல்



காஞ்சி மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 22.1.12 ஞாயிறு அன்று காலை வண்டலூரில் கல்பாக்கம் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. தபசி. குமரன், அன்பு தனசேகர் ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட தலைவராக டேவிட் பெரியார், செயலாளராக முதினேஷ் குமார் தேர்வு செய்யப்பட்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 27th January 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.